பக்கங்கள்: 16


Registered as a Newspaper


PUMP
With
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ. 5-00


தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்
நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 பிரமோதூத ஞூ சித்திரை மீ 19 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 08 (02—06—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 17

நேற்று மூன்று மணிநேரம் சந்திப்பு

# பேச்சுக்களின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு!

## அரசு உறுதி பூண்டிருப்பதாக புலிகளிடம் பிரேமா எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூன் 2

விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுக்கும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கும் இடையில் கொழும்பு சுசரித்த மண்டபத்தில் நேற்றுக்காலை மூன்றுமணி நேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுக்கள் மூலமே திர்வு காண்பதற்கு அரசு உறுதி பூண்டிருப்பதாக, நேற்றைய சந்திப்பின்போது ஜனாதிபதி பிரேமதாஸ விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்குத் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அரசாங்கத் தரப்பில் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் வடக்கு, கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவரும் நீதியமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் பங்கு பற்றினார்.

சந்திப்பின் முடிவில் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு, கிழக்கு பகுதிகளின் அரசியல், பொருளாதார, கல்வி,விவசாய மற்றும் நிர்வாகத்துறைப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டன.

''இந்தியப்படை விலகிய பின்னர் கடந்த மூன்று மாதங்களாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலைமை பெருமளவில் சீரடைந்துள்ளது.

சிவில் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை சகல துறைகளிலும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

''வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தற்சமயம் ஓர் அரசி

[5ஆம் பக்கம் பார்க்க]

### இன்று சொக்கன் மணிவிழா

ஈழத்தின் பிரபல சிறுகதை எழுத்தாளரும் தமிழறிஞருமான சொக்கனின் மணிவிழா இன்று சனிக்கிழமை வெகு

சிறப்பிதழ் உள்ளே

சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மணிவிழாத் தலைவர் திரு. தி. கமலநாதன் தலைமையில யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் காலை 9-00 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

### சிவகுமாரன் கொடி தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

உரும்பராய் சந்தியில் அமைக்கப்பட்டு வரும் தியாகி சிவகுமாரன் நினைவாலயம் மற்றும் சிலை அமைப்புநிதிக்கென ஒருவாரகாலம் கொடிதினம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

கொடி தின வாரம் நேற்று ஆரம்பமானது.

சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் நினைவாலய அமைப்புக் குழுவினரால் இந்தக் கொடிதினம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ஒ)

## புலிகள் குழு- பாலகுமார் கொழும்பில் நேற்று பேச்சு

கொழும்பு, ஜூன் 2

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த கொழும்பு சென்றுள்ள விடுதலைப் புலிகள் தூதுக்குழுவினர் நேற்றிரவு ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரனுடன் கொழும்பில் பேச்சு நடத்தினார்கள்.

இன்றைய அரசியல் நிலைமைகள் குறித்து அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிய வந்தது.

நீண்டநேரமாக பேச்சுவார்த்தை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

யாழ். மாவட்டத்தில்

## தொலைபேசி இணைப்பு பகிர்வுக்கு புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத்தில் தொலைபேசி இணைப்புக்கள் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர், தொலைத்தொடர்பு பிராந்திய பொறியியலாளர் ஆகியோரின் ஆலோசனையின்படியே வழங்கப்பட உள்ளன.

கொழும்பில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திரு. அதிகாரி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற மாநாட்டிலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

அரச அதிபர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் யாழ். மாவட்டத்துக்கு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கு முன்பாக 500 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப் பட்டது.

யாழ். மாவட்டத்தில் தொலைபேசி இணைப்புக்

(5ஆம் பக்கம் பார்க்க)

## காணி அற்றோருக்கு பிற மாவட்டங்களில் காணி

### அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்-மாவட்டத்தில் காணி அற்றோருக்கு பிற தமிழ் மாவட்டங்களில் காணி பெற்றுக் கொடுக்க யாழ்-அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் முயற்சி மேற்கொண்டுள்ளார்,

பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மட்டுமே அரச காணிகள் உள்ளன. அத்தக் காணிகளை அந்த அந்தப் தகுதி மக்களுக்கு பகிர்ந்தளிக்கநடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவுகள் தவிர்ந்த மற்றைய உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காணி அற்று இருப்பவர்களுக்கேபிறமாவட்டங்களில் காணி பெற்றுக் கொடுக்க அரசஅதிபர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

அந்த அந்த மாவட்ட அரச அதிபர்களுடன் தொடர்பு கொண்டு அந்த மாவட்டத்தில் உள்ள அரச காணிகளில் இவர்களுக்கு காணி பெற்றுக் கொடுக்க இருப்பதாக அவர் தெரிவித்தார் (இ-3-9)

## கருத்தோவியமும் கவிதையும்



உருவான ஒப்பந்தம்பல உந்த மேசையில்
உருக்குலைந்தன அவையாவும் கூடைக்குள்
உறுதிதந்து இப்போது உறுத்திடும் மொழிகள்
உயிர்பெற்று உய்வதும் ஆகுமோ......?

கடந்த கால வன்செயலில்

## கடும் பாதிப்படைந்தவர்களின் குடும்ப உறுப்பினருக்கு அரசவேலை

யாழ்ப்பாணம், ஜூன் 2

கடந்தகால வன்செயல்களின்போது கடும்பாதிப்புற்றோர் குடும்பத்துக்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கும் அந்தக் குடும்பத்தின் அங்கத்தவர் ஒருவருக்கு அரசாங்க வேலை வாய்ப்பு வழங்கப்பட இருக்கிறது.

கொழும்பில் வியாழக்கிழவம நடைபெற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு மாநாட்டில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அலுவலகத்தில் அரச அதிபர்கள் கலந்து கொண்ட மாநாட்டிற்கு புனர்வாழ்வு அமைச்சர் திரு. ஏ. எம். எஸ் அதிகாரி தலைமை வகித்தார்.

வன்செயல் சம்பவங்களின் போது கடும்பாதிப்புக்குள்ளானவர்கள் (இறந்தவர்கள். காயமடைந்தவர்கள், காணாமல் போனவர்கள்) விபரங்களை பத்து நாட்களுக்குள் அமைச்சருக்கு அனுப்பும்படி தெரிவிக்கப்பட்டது.

கடும்பாதிப்புக்குள்ளான

(5 ஆம் பக்கம் பார்க்க)

### பாதிக்கப்பட்டோர் விவரம் அரச அதிபர் கோருகிறார்

யாழ். மாவட்டத்தில் பயங்கரவாதம் இனப்பிரச்சினை ஆகியவற்றாலும் படையினராலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டோரின் விவரங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உதவி அரசாங்க அதிபர்களைப் பணித்துள்ளார்.

நேற்று செயலகத்தில்நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்கள் கூட்டத்திலேயே இந்தப்பணிப்புரை வழங்கப் பட்டது.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும்கீழ்க்கண்ட விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

★ காயமடைந்த, இறந்த காணாமல் போனவர்கள் பற்றிய விவரம்

★ உணவு முத்திரை வைத்திருப்போர், காணி அற்றவர்கள் வீடு அற்றவர்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க]

## விளக்கு அணைக்காத ஊழியர் சீட்டுக்கிழிந்தது!

யாழ்ப்பாணம், ஜூன் 2

வீடுகளில் இரவில் ஏற்றிய மின் விளக்குகளை மறதியினால் அணைக்காமல் விட்டு அவை பகலில் எரிந்தால், மாத முடிவில் மின்சாரக் கட்டணம் ஏறிவிடுமே என்று தலையில் கை வைப்போர் பலர்.

ஆனால் அரசாங்க அலுவலகங்களில் ஆட்கள் இல்லாவிடினும் மின் விளக்குகளும், காற்றாடிகளும் தொடர்ந்து எரிவதும், சுற்றுவதும் வழக்கம். ஊரார் வீட்டுப் பணத்தைப்பற்றி ஊழியர்களுக்கு ஏது அக்கறை!

அலுவலகங்களில் மட்டுமா? வீதிகளிலும் அணையா விளக்குகளைப் பகலில் காணலாம். யாழ்ப்பாண நகரமும் அதற்கு விதிவிலக்கா, என்ன? நேற்று யாழ். நகர வீதி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை நோக்கி வந்த பஸ்மீது புத்தளத்தில் சூடு!

### கொள்ளை முயற்சி தோல்வி

வல்வெட்டித்துறை, ஜூன்2

கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த மினி பஸ்சை நோக்கி புத்தளம், 10 ஆம் கட்டையடியில் சரமாரியாக துப்பாக்கிச்சூடுகள் சீறிப் பாய்ந்தன.

ஆனால் தெய்வாதீனமாக பயணிகள்எவரும்காயமடையவில்லை. மினிபஸ்ஸும் சேதம் ஏதுமின்றி தப்பி வந்து சேர்ந்தது.

கடந்த புதன் நள்ளிரவு நடந்த மயிர் கூச்செறியும் சம்பவப் பற்றித் தெரியவருவதாவது:—

புத்தளம் 10 ஆம் கட்டையடியில் வீதியின் இருமருங்கிலும் இருந்த பற்றைகளின் பின் புறமாக ஆயுதபாணிகளான எட்டுப்பேர் மறைந்திருந்தனர். இவர்களில் சிலர் காக்கிக் காற்சட்டை அணிந்திருந்தனர். யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றை இவர்கள் நிறுத்துமாறு சைலக செய்தனர். ஆனால் பஸ் நிறுத்தமால் வேகமாக விரைந்து சென்று விட்டது. இதனால் ஆத்திரமடைந்த மேற்படி கோஷ்டியினர் அடுத்து வந்து கொண்டிருந்த பருத்தித்துறை மினிபஸ்சை நோக்கிச் சுட்டனர். எனினும் பஸ்மீது சூடுகள் விழவில்லை.

பஸ்ஸிலிருந்து பெண்கள்

[5ஆம் பக்கம் பார்க்க]

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். சொல்கிறார்:

# சிங்கள மன்னர்களும் கூட இங்கு இந்திய ராணுவத்தை அழைத்திருந்தனர்

### அமைதிப்படை நிபந்தனையுடன் வந்தது; அதன்படி திரும்பியது

கொழும்பு, ஜூன் 2

★ சிங்கள மன்னர்கள் ஆட்சிக் காலத்திலும் கூட இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வரவழைக்கப் பட்டனர்.

★ இந்திய அமைதிப்படை நிபந்தனைகளுடன் இங்கு வந்தது: அதன்படி வெளியேறியது.

மேற்கண்ட தகவல்களை முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

கொழும்பு, சட்டக்கல்லூரி மாணவர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ''இலங்கை - இந்திய ஒப்பந்தம்; ஐக்கியம், இறைமை''- என்ற பொருளில் அவர் பேசினார்.

அவர் அப்போது சொன்னதாவது;

பெரிய நாடுகளாக இருந்தாலும் சரி, சிறிய நாடுகளாக இருந்தாலும் சரி ஒரு காலத்தில் பகைமை நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.

பெரும் வல்லரசு நாடுகளும், இவ்வாறான நிலைமைக்கு ஆளாகி இருக்கின்றன.

இலங்கை அதன் 2, 500 ஆண்டுகால வரலாற்றில் பெரும்பாலான காலப்பகுதியில் சுதந்திரமாக விளங்கிய போதும் இவ்வாறான நிலைமைகளுக்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

சிங்கள மன்னர்கள் தாம் முன்னர் ஆட்சிக்கு வருவதற்கோ, அல்லது ஆட்சியை ஸ்திரப் படுத்துவதற்கோ இந்திய இராணுவத்தை வரவழைத்திருந்தார்கள்.

இந்தியாவில் இருந்து முன்னர் இலங்கை வந்த இந்த இராணுவத்தினர் திரும்பிச் சென்றது கிடையாது. அல்லாமலும் அவை திரும்பவேண்டும் என்பதற்கான நிபந்தனை

(5ஆம் பக்கம் பார்க்க]

### சுப நேரம்

02- 6 - 90

சனிக்கிழமை வைகாசி 19

சுபநேரம்!

02:52 -04.22

இராகுகாலம்

08·52 10- .22

புதுமையும் எழிலும் [illegible] பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள ஒரே உரிமையாளரின் ஆஸ்டின் A 40 வான் ஒறிஜினல் அலுமினியம் பொடியுடன் விற்பனைக்கு அல்லது காருடன் மாற்றுவதற்கு உண்டு. தொடர்பு. NO - 9, சதிற்றல் வீதி, யாழ்ப்பாணம். (3748)

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறாம் டின் ரூ 150.00 தேவைக்கு: பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

பல வண்ணங்களில் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரான்லி அக்குரியம், 37/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (மஸ்கன் கட்டிட அருகில்) (3725)

## காணி விற்பனைக்கு

நல்லூர் சந்தைக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் 2 கடை அறை கிணறு மலசலகூட வசதியுடன் விற்பனைக்கு உண்டு. மில், கடை போடுவதற்கு சிறந்த இடம், தொடர்பு, க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ் யாழ்ப்பாணம். (C/4623)

நல்லூர் பண்டாரக் குளம் சங்கிலி வீதியில் 9 பரப்பு வெறும் காணி மூன்று துண்டுகளாக விற்பனைக்குஉண்டு. குடியிருப்பிற்கு சிறந்த இடம் தொடர்பு. க. சே. கைலாசம்பிள்ளை & சன்ஸ் யாழ்ப்பாணம். (C/4622)

நல்லூர் செம்மணி வீதி ஓரம் கல்வித்திணைக்களத்திற்கு முன்பாக தென்னைகள், மாக்கள் உள்ளடக்கிய 3½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு இல. 712 C/O உதயன். (3746)

நல்லூர் வடக்கு கலைமகள் வீதியில நல்ல சுற்றாடலில் சுற்று மதிலுடன் நல்ல தண்ணீர் வசதியுடனும் வீடு கட்டக் கூடிய காணிகள் விற்பனைக்குண்டு தொடர்பு M.S. மாசிலாமணி கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியன்காடு. (13314)

## தேவை

4 DR 5 றோசா மினிபஸ்சிற்கு பாவித்த பஸ் முன் கண்ணாடி தேவை தொடர்பு ஜெகதீஸ், கீரிமலை வீதி, மாவிட்டபுரம். (13322)

30-40 வயதிற்கிடைப்பட்ட ஆண் காசாளர் இருவரும் 25-35 வயதுகிடைப்பட்ட ஆண்/பெண் கணக்காளர்இருவரும் அனுபவம் வாய்ந்த சமையல்காரர் மூவரும் பரிமாறுவோர் மூவரும் தேவை பழக விரும்புவோரும் தேவை தொடர்பு: கிறில் சைனீஸ் இன், 181, பலாலிறோட், கோண்டாவில். (3730)

## தேவை

யாழ் நகரிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் பகல் நேர G. C. E. (O/L) வகுப்பிற்கு விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், ஆகியன கற்பிற்பதற்கு தகுதியும் திறமையுமுடைய ஆசிரியர்கள் தேவை. அனுபவம் மற்றும் சுய விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். இல. 713 C/o உதயன். (3745)

## மணமகன் தேவை

யாழ்ப்பாண கத்தோலிக்க குருகுலம் 31 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கு உத்தியோகமான மணமகன் தேவை. எம்மிடம் எல்லாக் கோணங்களிலும் மணமக்கள் இருக்கிறார்கள் மங்களா ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். (13317)

வடமராட்சி இந்து பள்ளர் குலப் பெற்றோர் தமது 28 வயது நிரம்பிய 1 இல் செவ்வாய் தோஷமுள்ள B.A பட்டதாரி ஆசிரியை மகளுக்கு மணமகனை தேடுகிறார்கள். ஆசிரியர், வங்கி, அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். சகல விபரங்களுடன் தொடர்பு. இல. 714 C/O உதயன். (3749)

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளகுலப் பெற்றோர் லண்டனில் 7 ஆவது வருட Student Visa வுடன் C. I. M- A. சித்தி எய்தி Accountant ஆக தொழில் புரியும் 32 வயதும் 5' 6'' உயரமுள்ள அழகிய மகனுக்கு லண்டனில் வசிக்கும் அல்லது லண்டனுக்கு அனுப்பக்கூடிய வசதியுள்ள படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/O உதயன். [3750]

யாழ். இந்து குருகுல 38 வயதுடைய ஜேர்மனியில் வசிப்பவருக்கு அழகிய, சிவந்த, ஒழுக்கமுள்ள 25-36 வயதுடைய மணமகள் தேவை. ஜேர்மனியில் வசிக்கும் மணமகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். வேறு உயர் ஜாதியினரும் விண்ணப்பிக்கலாம். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. சாதக குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். இல. 703 C/o Uthayan. (3714)

## ஆங்கில வகுப்புகள்

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும் ஆங்கில வகுப்புகள் சனி, ஞாயிறு மூன்று சமாந்தர வகுப்புகளை கொண்டுள்ளது. S. ஜெயராஜா, கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3735)

## தவறிவிட்டது

இராசு அரியமலர் ஆகிய எனது அடையாள அட்டை (657122700 V) 22-5-90 இல் காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13320)

30/5/90 மாலை 6 மணியளவில் யாழ் பஸ்நிலையத்தில் ரூபா 5000/-க்கும் 5400க்கும் இடைப்பட்ட பணம் சிறிய பேசுடன் தவறி விட்டது. கண்டு எடுப்பவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3743)

## புலமைப்பரிசில் பரீட்சை

பலரின்வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு- 5ற்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சைகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3-5 வரை நடாத்தப்படும். முன்னோடிப் பரீட்சை 2, 03-06-90 நடைபெறும். முன்னோடிப் பரீட்சை 1ற்கான விளக்கங்கள் 03-06-90 இல் 1-45—2-45 வரை நடைபெறும். விபரங்கட்கு: செல்வி எஸ். எம் ஐயர் 12 (36) வைமன்வீதி, நல்லூர். (13312)

## [ஆண்டு 4] பரீட்சை

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு அடிப்படையாக [4 ஆம் ஆண்டு அரைவாசி பாடத்திட்டத்திற்குள்] 10-6-90 ஞாயிறு மு. ப. 10.30 பி. ப. 1.00 மணிக்கு நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (3741)

## இலவச வகுப்பு

5ஆம் ஆண்டு ''ஸ்கொலசிப்'' மாணவர்களுக்கான முன் மாதிரி வினா விடை இலவச வகுப்புகள் சனி, ஞாயிறு காலை 8.00 மணிக்கு நடைபெறுகின்றன. தொடர்பு, ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, 3 ஆம் கட்டை, கல்வியங்காடு. (3740)

# அதிஷ்ட இலாபச்சீட்டு

22 - 05 - 1990 நாயன்மார்கட்டு ஸ்ரீ ராமநாதர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலய முன்றலில் அதிஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் விபரங்கள்:-

**1 ஆம் பரிசை** இல A 2019 பெற்றவர் திரு. அல்பிரட் அன்ரன், குருநகர் வடகிழக்கு, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** கோரப்படவில்லை இல B 7706

**3 ஆம் பரிசை** இல B 19749 பெற்றவர் திரு. டேவிட் றெஜினோலட், இல 100, 3 ஆம் குறுக்குத் தெரு, மணியம் தோட்டம், யாழ்ப்பாணம்.

**பத்து ஆறுதல் பரிசுகள்**

B 10610 திரு. ஆர் இராசகுலேந்திரன், தாளையடி

A 9379 திருமதி பேரம்பலம் தங்கரத்தினம் 26/7C அராலி வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

A 14380 திரு. வி. ஜெயராசா, நெடியகாடு. வல்வெட்டித்துறை.

**கோரப்படவில்லை**

4. A 17587
5. A 16430
6. A 24226
7. A 29860
8. B 5851
9. B 18738
10. C 30528

மேற்படி கோரப்படாத பரிசுகளுக்குரியவர்கள் 11 - 06 - 1990 திகதிக்கு முன்னர் தங்கள் ரிக்கற்களுடன் நேரில் வரும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். **யாழ் மக்கள் கழகம்.**

**Europe China Hotel,**
**86, Second Cross Street,**
[13318] **Jaffna.**

# கால் நடை வைத்திய நிலையம்

[தனியார்]


கால்நடை வைத்திய ஆலோசனை, செயற்கை முறைச் சினைப்படுத்தல், கோழிகளுக்கு றனிக்கற், கோழி அம்மை' தடுப்பூசி ஏற்றல் ஆகிய வேலைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

**சித்தி மெடிக்கல் சென்ரர்,**
புகையிரத வீதி,
மல்லாகம்.

நேரம்: காலை: 9.00 - 12.00 மாலை:5.00 - 7.00

(சி-4618)

# ஈராண்டு நினைவஞ்சலி



செல்வன்

**கணபதிப்பிள்ளை சோதிநாதன்**

[சோதி]

மண்ணுலகு: 18 - 09 - 1957
விண்ணுலகு: 02 - 06 - 1988

பாசத்தின் இருப்பிடமே!
அணையாத எங்கள் அகல் விளக்கே!
மங்காத சோதியே!
உமது ஆத்மா சாந்தியடைய நிதமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

பசுவதியார் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (3676)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. நாகமணி பொன்னுத்துரை**

(நிப்பொன் ரெவிரவல்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்.)

மறைவு:- 26- 05- 1988
திதி:- 02- 06- 1990

ஆண்டு இரண்டு சென்றாலும்
மாறாத நினைவுடனே
மானிலத்தில் வாழ்கின்றோம்
நீங்கள் வகுத்துத் தந்த நற்பாதையிலே
அடி யெடுத்துச் செல்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்!

**அன்பு மனைவி, மகன்.**

இல. 9, குமாரு வீதி,
நல்லூர். (3679)

# EFFECTIVE ENGLISH WITH GRAMMAR

அனைவருக்கும் எளிதாக விளங்கக் கூடிய முறையில் ஆங்கில இலக்கணத்துடன் கூடிய **Effective English with Grammar** - 6 மாத கால பயிற்சி **G.C.E O/L** மாணவர் நலன் கருதி தபால் மூலம் நடத்தப்படுகிறது.

எமது பயிற்சியினை திறம்பட செய்யும் மாணவர்கள் **British Council** உடன் இணைந்து **University of Cambridge** நடத்தும் **First in English Certificate (London) or Proficiency in English Certificate (London)** எனும் பரீட்சைக்கு தயாரிக்கும் பயிற்சிகளையும் உள்ளடக்கிய தமிழ் விளக்கங்களுடன் கூடிய பாடத்திட்டமாகும்.

**G. C. E. (O/L)** மாணவர்கள் திறமை சித்தி பெற இப்பாடத்திட்டம் மிக மிக உறுதுணையானதாகும். ஆறுமாத கால மொத்தக் கட்டணம் ரூபா 450/- ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன், இடதுபக்க மூலையில் **Effective English** என எழுதி தொடர்பு கொள்க.

*Bright Training Centre*

**P. O. Box 162, Colombo.**

(சி-4576)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. K.M. நடராசா**

பிறப்பு: 22.12.1914
இறப்பு: 13.06.1989

திதி:-2-6-1990

எம்மில் அணையாத ஒளியாக
மிளிர்ந்து நிறைந்த
எம் இனிய தந்தையே!
நாட்கள் மாதங்களாகி,
மாதங்கள் ஆண்டுகளாகி
ஆண்டுகள் யுகங்களானாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நந்தாவில் லேன்,
கொக்குவில். (C/4621)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சிவசிங்காரம் தவச்செல்வம்**

அன்னை மடியில்: 25.10.1966
அரக்கன் அழிப்பில்: 08.06.1987

திதி: 03-06-1990

அன்பு மகனே! ஆருயிர் செல்வமே! உங்கள் உடல் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உயிர் எம்மை விட்டு அகலவில்லை. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அப்பா, அம்மா, தம்பி,
தங்கைமார், உறவினர், நண்பர்கள்.

மூர்த்தி வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை. (3684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தமிழறிஞர் சொக்கன் மணிவிழா சிறப்பிதழ் ★

## பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழும் தமிழறிஞர் சொக்கன்

1930 ஜூன் இரண்டாம் திகதி பிறந்த தமிழ் அறிஞர் திரு க.சொக்கலிங்கம் அவர்களுக்கு இன்று மணிவிழா.

இந்த அறுபது ஆண்டுகளிலேயே, இளமையில் பத்தை மட்டும் தமதாக்கி விட்டு அரை நூற்றாண்டுகாலம் தமிழுக்காகச் சிந்தித்ததும் சேவை செய்ததும் ஒரு சரித்திர சாதனையாகும். அதிலே அவர் தமிழுக்குக் கொடுத்த உருவங்கள் பல வித ஆய்வுக்கு ஏற்றவை ஆகும்.

'சொக்கன்' அவர்களின் சாதனைகளை அவதியில் விமர்சிப்பவர்கள் யானையை விவரித்த குருடர்களின் நிலையில் இருப்பது உண்டு.

தமது கோணத்திற்கு ஏற்றவாறு அவரை வித்துவான் என்றும்; நாடகாசிரியர், கவிஞர், சிறுகதையாளன், நாவலாசிரியன், கட்டுரையாசிரியன் என்றும்: சமய போதகர் என்றும், ஆசிரியர், அதிபர், ஆராய்ச்சியாளர் என்றும் நோக்குவது வழக்கம். சொக்கனின் இலக்கிய தாக்கத்தை முழுமையாக எடைபோடுவதற்கு மேலும் காலம் வேண்டும்.

### அன்று மாணவ நடிகர் இன்று ஆய்வாளர்

சொக்கனின் இலக்கியப் பங்களிப்பு பல தரப்பட்டு நாடகத்தில் முதன்மை அடைகின்றது. பத்து வயதிலே குமணன் நாடகத்தில் சீத்தலைச் சாத்தனாராக நடித்த சொக்கனுக்கு நாடக நாட்டம் தாய் வழி இரத்தத்தில் உண்டு. தாயாரின் சகோதரன் எஸ். பி. நாசரத்தினம் சிறந்த நாடகக் கலைஞர்; நடிகர். தமது மாணவர்களைக் கொண்டு அவர் தயாரித்த கல்கியின் ''கணையாழியின் கனவு'' நாடகத்தில் மருமகனை சேஷாத்திரியாக நடிக்கச்செய்தார். அப்போது சொக்கனுக்கு பதினொரு வயது.

பதினைந்தாம் வயதில் சொக்கன் நடிகன் மட்டுமல்ல; நாடகத் தயாரிப்பாளன். நாடகம் சேக்ஸ்பியரின் ''வெனிஸ் வர்த்தகன்'' இடம் யாழ் மத்திய கல்லூரி. அதிலே ஷைலக்காக நடித்தவர் சக மாணவனாக இருந்த மதுர கவி நாகராஜன்.

பதினெட்டு வயதில் அவரின் கவிஞன் பலி வானொலியில் அவரின் குரலுடன் ஒலிபரப்பாகியது.

1950 – 51 இல் பலாலி ஆசிரிய காலாசாலையில் தாம் எழுதிய இரு நாடகங்கள் முறையே ''சங்கிலி'' ''லட்சுமணன்'' லட்சுமணன் நடிப்புக்குப் பரிசு பெற்றதோடு நடிப்பு நிறைவுற்றது.

கல்லூரி ஆசிரியர் என்ற முறையில் பல நாடகங்களை மாணவருக்காக எழுதித் தயாரித்த சொக்கன். நாடகாசிரியராக பிரசித்திபெற்ற வருடம் 1960. அவ்வருடம் இவரின் ''சிலம்பு பிறந்தது'' என்ற இலக்கிய நாடகப் பிரதிக்கு இலங்கைக் கலைக் கழகத்தின் முதல் பரிசுகிடைத்தது. அடுத்த ஆண்டு 1961 பரிசும் இவருக்கே; நாடக நூல் ''சிங்ககிரிக் காவலன்'' இந்தச் சரித்திர நாடகம் பிரமாண்டமான மேடை அலங்காரத்துடன் 1962 ஆம் வருடம் மார்ச் 6, 10 திகதிகளில் யாழ் நகர மண்டபத்தில் மேடை ஏறியது. காசியப்பனாக நடித்த ஜனாப் ஏ. ஆர். எம். ஜரூபர் மிகுந்த பாராட்டைப் பெற்றார்.

இவற்றைத் தொடர்ந்தன



சொக்கன்

''கவிதை பிறந்த கதை''(1966) என்ற கவிதை நாடகமும், ''தெய்வப் பாவை'' (1968) என்ற சமய நாடகமும், ''நாவலர் நாவலரான கதை'' என்ற இசை நாடகமும்.

சொக்கனின் 25க்கு மேற்பட்ட நாடகங்கள் வானொலியிலும் ஒலிபரப்பாகி உள்ளன.

1977 ஆம் ஆண்டு, ஈழத்து நாடகக்கலை பற்றிய அவரது ஆராய்ச்சிநூலாகிய 'ஈழத்துத் தமிழ்நாடக இலக்கிய வளர்ச்சி' வெளிவந்தது. இத்தகையஒருநூலை' இதுவரையும் யாரும் எழுதவில்லை என்று பேராசிரியர் வித்தியானந்தன் அணிந்துரை அளித்திருந்தார்.

பத்து வயதில் மாணவ நடிகனாகத் தொடங்கிய நாடகப் பங்களிப்பு நாடகாசிரியன், நெறியாளன், தயாரிப்பாளன், விமர்சகன் என்று விரிந்து மிகச் சிறந்த ஓர் ஆராய்ச்சி நூலை தமிழுக்குத் தந்தது. ஈழத்தின் இலக்கியச் சரித்திரத்தில் 'சொக்கன்' என்ற பெயரும் நாடகப் பக்கங்களில் பதிந்தும் விட்டது.

### தமிழோடு சமயம் பாடல்

நாடக நிலைக்கு அடுத்தாகச் சொக்கன் தனது இலக்கிய முத்திரையைச் சரித்திரத்தில் பதித்தது சமயம் சார்ந்த கவிதைகளிலும் கட்டுரைகளிலும் தான்.

கட்டுரை நூல்களின் தலைப்புகளைக் குறிப்பதானால் இந்தச் கட்டுரை நீண்ட புத்தக அட்டவணை (Bibliography) ஆகிவிடும். இந்த நூற்றாண்டில் ஈழத்து எழுத்தாளர் வேறு யாருக்கும் இல்லாத Bibliography அது. தடக்காத தமிழில் இலகுவாகவும் லாவண்யமாகவும் கவிதை வடிக்க வல்லவர் சொக்கன். இதற்கு நச்சிகேதன், அப்பர் பெருமானின் அன்பு நெறி போன்ற நூல்கள் ஒருசான்று. நாடகநூல்களிலே சொக்கனின் மேதாவிலாசத்தைக் கண்டால், சமயக் கட்டுரைகளிலும் அவரது ஆளுமையைப் பார்க்கிறோம்.

### நவீன இலக்கியத்தில் ஒரு வித்துவான்

எதிர்காலத்தில் சொக்கனை ஆய்வு செய்யும் இலக்கிய மாணவன் பலவிதமான கேள்விகளுக்கு விடை காண வேண்டும்.

வித்துவான்களுக்கு இலக்கணமும் இலக்கியமும் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் சிறுகதைகளுக்கு எங்ஙனம் பரிசுகள் பெற்றார்?

அவருடைய திறமையான நாடகங்களுக்கு இலக்கியத்தையும் சரித்திரத்தையும் நம்பியிருந்தவர் எங்ஙனம் சிறந்த சமூக நாவல்களான 'செல்லும் வழிஇருட்டு' 'சீதா' போன்றவற்றைப் படைத்தார்?

ஏன் அவர் தனது நாவல் ஒன்றையாவது சரித்திரம் என்ற பல்லக்கில் ஏற்றவில்லை?

'சலதி' இலக்கிய நாவலா? அல்லது சொக்கன் ஒரு புதிய இலக்கிய வடிவத்தை தமிழில் உருவாக்கியுள்ளாரா? — இப்படியான பல கேள்விகள்.

அவருடைய பதினாங்காவது வயதில் (1944) வீரகேசரியில் 'தியாகம்' என்ற சிறுகதை பிரசுரமானது. 1972 ஆம் ஆண்டின் சாகித்திய மண்டலப் பரிசு அவருடைய 'கடல்' என்ற சிறுகதைத் தொகுப்புக்குக் கிடைத்தது. இதுவரை 200 சிறுகதைகள் வரை பிரசுரமாகி உள்ளன. போட்டிக்குப் போனால் கதைகள் பரிசு பெற்றன.

பழைய இலக்கியத்திற்கும் நவீன இலக்கியத்திற்கும், தமிழை எழுதுபவர்களுக்கும் தமிழில் எழுதுபவர்களுக்கும், எப்போக்கில் போறவர்களுக்கும் இடையில் பாலமாக இருப்பவர் சொக்கன். அந்தத் தொண்டைத் தொடர்ந்து புரிபவர்கள் வேறு யாரோ?

இந்தத் தலைப்பில் அவருடைய கழக, சங்க, நிர்வாகப் பணிகளைக் குறிப்பிடாவிடில் நிறைவில்லை. தமிழுக்குத் தொண்டு எழுத்தோடு மட்டும் நிற்கப்படாது. தமிழை வளர்க்கும் ஸ்தாபனங்களுடன் இயங்குவதும் அவசியம் என்ற கொள்கை உள்ளவர் சொக்கன்.

யாழ் எழுத்தாளர் சங்கம், அன்றைய (1964–66) இலங்கைக் கம்பன் கழகம், தமிழ்ப் புத்தக வெளியீட்டுக் கழகம், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம், திருமுறை மன்றம், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் என்று அவர் முக்கிய நிர்வாக பங்கு கொண்ட அமைப்புகள் பல.

சொக்கனின் வீட்டில் எப்போதுமே கழகங்கள் சார்ந்த நண்பர் இருப்பர். அல்லது கழக அறிக்கைகள் புரூஃப் வடிவில் காத்திருக்கும். அல்லது அவர் ஏதாவது தமிழ் அலுவலாக தெருவில் மிதிப்பார். சொக்கனின் சயிக்கிள் சில்லும் தமிழ் ஒலிக்கும்.

### - நந்தி -

'சலதி, வெளிவந்தபோது 'தமிழளினையின் செல்வச் செருக்குக்கு மேலும் ஒரு பங்களிப்பு' என்று கவிஞர் முருகையன் மனப் மகிழ்ந்தார்.

தொடர்ந்து தமிழ்அன்னையின் செல்வச் செருக்குக்கும், தமிழ்க் குமரியின் குதூகலக் களிப்பிற்கும், தமிழ்ப் பிள்ளையின் பருவப் பக்குவத்திற்கும் உங்கள் பணியும் பங்குப் நீண்டகாலம் கிடைக்க வேண்டும் என மனமாரப் பிரார்த்திக்கின்றோம். ★



★ முத்தமிழ் வெளியீட்டு கழகத்தில் பண்டிதமணியின் கம்பராமாயணக் காட்சிகள் வெளியீட்டு விழாவில் சொக்கன் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.

## சொக்கன் பெருமை

சிந்தனையின் ஊற்றே செழுந்தமிழின் நல்வடிவே
முந்துறுசொல் முத்தின் மொழிக்கடலே - சந்ததமும்
நல்லனவே சிந்தித்து நாட்டும் செயல்வீர
பல்லாண்டு வாழி பரந்து.

பண்பில் இனியன் பழகுதற்குத் தோழனிவன்
எண்ணுஞ் செயல் முடிக்கும் ஈடற்றோன் - கண்ணியமும்
அக்கமெனக் கொண்டோன் ஆருளரே எம்முடைய
சொக்கன் பெருமை சொலற்கு.

கவிதை கதைத்துறையும் கட்டுரைசேர் செம்மை
தவழும் கலைத்துறையும் தந்தோன் - புவிமீது
போற்றிடவே வாழ்க புதுமைபல செய்திடுக
ஏற்றிடுக எந்தமிழின் ஏர்.

ஆரியமுஞ் செந்தமிழும் ஆர்வமுடன் பேணுகின்ற
சீரிய சங்கச் செயலராய்ப் - பாரிய
தொண்டு புரிந்துழைக்கும் சொக்கனையா வாழ்வுக்கு
உண்டோ குறைகள் உரை.

மூவிருபான் ஆண்டுகளை முட்டின்றிக் கண்டமைந்தே
மேவுகின்ற சொக்கனது மேன்மைவிழா – பாவலரும்
காவலரும் மற்றுமுள கற்றோரும் போற்றிசைப்பப்
பூவுலகில் வெல்க பொலிந்து.

பண்டிதர் வே. சண்முகலிங்கம்

## யாழ் ஆயர் வாழ்த்து

''சொக்கன்'' என்னும் புனைபெயரில் தமிழ் மக்களால் நன்கறியப்பெற்றவராகிய வித்துவான் திரு. க. சொக்கலிங்கம்எம். ஏ. அவர்கள் இறைவன் திருவருளால் பல வகையான ஆற்றல்கள் நிரம்பப் பெற்றஒரு மனிதன் ஆவார்.

இப்போது கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறவிருக்கும் சிறந்த சேவையாளனும் நிர்வாகியுமான இவர் எழுத்துப் பணியிலும் புகழ் பூத்தவர்.

பத்திரிகைகளில் அவரது எழுத்தோவியங்கள் அன்றும் இன்றும்பரவலாகவெளிவந்து கொண்டிருப்பதை யாவருமறிவர் சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், ஆராய்ச்சிக்கட்டுரைகள் முதலியனவாக அவரது ஆக்கங்கள் பல சிறந்தவை.

சிறுபிள்ளைகளுக்கான தமிழ் மொழிப் பாடநூல்களைஇயற்றி அச்சிட்டு வெளியிடுவதில் கைதேர்ந்தவராக இருக்கிறார்.

தமிழ் மொழியையும் இந்து மதத்தையும் இருகண்களாசப் போற்றும் சொக்கன் அவர்கள்சிறந்த ஜனரஞ்சகப் பேச்சாளருமாக விளங்குகிறார்.

சென்றவிடமெல்லாம் சமூகப் பணியாற்றுவதிலும்தலை சிறந்தவர் சொக்கன் அவர்கள் இத்தகைய பல சிறப்புகளினாற்றான் ''கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்னும் கவிதைத் தொடருக்கு எடுத்துக்காட்டாக இருந்து வருகிறார்.

திரு. சொக்கலிங்கம் அவர்கள் நீண்டகாலம் சுபகாலத்துடன் சிறப்புற வாழ்ந்து மேலும்மக்களுக்குத்தொண்டு களாற்ற இறைவன் அருள் பாலிக்க வேண்டுமென ஆசித்து வாழ்த்துகிறேன்!

-யாழ்ஆயர். அதிவணக்கத்துக்குரிய
வ. தியோகுப்பிள்ளை
ஆண்டகை

## வாழ்ந்து காட்டும் ஆசான்

விழுமியங்களை எய்துவதற்கு ஒரு சமூகத்தின் உயிர்நாடியாக உழைக்கும் சமூகம் ஆசிரிய சமூகமே. நல்லாசிரியர்களைத் தெய்வமாகப் போற்றுவது எமது இந்து மரபு.

உயர் பண்பும் அருளும் கடவுள் நம்பிக்கையும் பெருந்தன்மையும் பலநூல் தேர்ச்சியும் நூற்பொருளை எடுத்துரைக்கும் ஆற்றலும் உலகியல் அறிவும் போன்ற உயர் பண்புகளை உடையவனே நல்லாசிரியனாவான்.

இத்தகைய உயர் குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற நல்லாசிரியர்கள் சிலரே இன்று எம்மிடையே காணப்படுகின்றனர். இத்தகு நல்லாசிரியர்களுள் ஒருவராக எம்மிடையே வாழ்ந்து ஆசிரியப் பணிபுரிபவரே ''சொக்கன்'' என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு. க. சொக்கலிங்கம் அவர்கள். அவரைக் கற்பிக்கும் ஆசான் என்பதை விட வாழ்ந்து காட்டும் ஆதர்ச ஆசான் என்பதே பொருத்தமாகும்.

இ. சுந்தரலிங்கம்
வடமாகாண கல்விப் பணிப்பாளர்

## நல்லை ஆதீனக் குருமணி ஆசியுரை

அறிஞர் திரு. க. சொக்கலிங்கம் அவர்கட்கு ''மணிவிழா'' எடுக்க விருப்பதறிந்து பெரு மகிழ்ச்சி ஒரு தகுதி வாய்ந்த பெரியாரைக் கௌரவிப்பதனால் அவர் வாழ்நாளில் இதைச் செய்யும் போது தான் அவர் மகிழ்ச்சியுறுவார். இதைக் காணும் போது நாமும் உளப்பூரிப் படைவோம். இதுவே முக்கிய நோக்கம்;

இந்நாட்டில் மட்டுமல்ல தமிழகத்திலும் சொக்கனை அறியாத தமிழ் மக்கள் இல்லை எனலாம்.

அமரர் வாசிக கலாநிதி கி. வா. ஜ. ஐயர் அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர்.

சொக்கன் அவர்கள் எழுதுவது போல பேசுவார்; பேசுவது போல் எழுதுவார் இத்திறன் வாய்க்கப்பெற்றோர் மிகச் சிலரே. சைவ சமய முன்னேற்றத்திற்கும் நற்றமிழ் வளர்ச்சிக்கும் அவர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள் அளப்பரியன. அவற்றை எல்லாம் சேர்த்து ஒரு நூலகம் அமைத்து விடலாம்.

கல்வி புகட்டல் தானங்களில் சிறந்த பெரும் தர்மம். இதை அவர் நிரம்ப ஈட்டியுள்ளார். சொக்கன் நோய் நொடியின்றி நீடு வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்குமான அவரின் அரிய சேவை தொடர வேண்டுமெனத் தியானித்து அவர்களுக்கு எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குருமணி
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

## பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த் தொண்டு புரிக!

அறிஞர்களையும் பெரியோர்களையும் மதித்து வாழப் பழகுதல் நல்லதொரு வாழ்க்கை நெறியாகும். பழந்தமிழர் கண்ட கல்வி மரபும் இத்தகையதே.

முற்காலத்திற் குருகுல முறையிற் கல்வி கற்கும் போது மாணவர்கள் குருபக்தியுடன் செயற்பட்டுத் தமது வாழ்க்கையினை அமைத்துக் கொண்டனர்.

பெரியோர்கள் ஆசி எமக்குக் கிடைப்பதால் எமது வாழ்வு வளம் பெறுகின்றது. அவர்களை மதித்துப் போற்றுவதால் எமக்குப் பெருமை சேருகிறது.

பெரியோர் துணை எமக்குக் கிடைக்கும் போது இன்னா செய்யாமை, இனியவை கூறல், ஊக்கமுடைமை, வாய்மை போன்ற நல்ல பண்புகள் எம்மை வந்தடைகின்றன. இதனாலே தான் வள்ளுவப் பெருந்தகை,

அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியோரைப்பேணித் தமராக் கொளல்

என்று கூறுகின்றார்.

அவர்கள் வழி வந்த நாம் தமிழ் அறிஞர் சொக்கன் அவர்களுக்கு விழாக்காண்பது பொருத்தமானதொன்றே. தமிழ் உலகுக்கும் சைவ உலகுக்கும் சொக்கன் அவர்கள் தமது கவிதையாலும் கட்டுரைகளாலும் சிறுகதைகளாலும் நாவல்களாலும் காட்டினார்.

அப்பெரியார் இன்று (1990 - 06- 02) தமது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து நிற்கின்றார்.

சொக்கன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த் தொண்டு புரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— தி. கமலநாதன்
சொக்கன் மணிவிழாச் சபைத் தலைவர்

## இஸ்லாமியரின் நண்பர்

தமிழ் மொழி, இலக்கியம், சமயம், கலாசாரம் என்னும் பல் துறைகளிலும் பல நீண்ட ஆண்டுகளாகப் பயன் கருதாப் பணி பூண்டு உழைத்துவரும் ஆற்றல் மிக்க அன்பர் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) எம். ஏ. அவர்கள் மணிவிழாக் காணும் தகைமை சார்ந்தவர்கள்.

ஆற்றல் இலக்கியத்தில் அவர் கைபடாத துறையே இல்லை எனலாம். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வுகள் மாணவருக்கான உதவி நூல்கள், நாடகங்கள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தனக்கென ஒருமுத்திரை பொறித்தவர்.

சகல இனமத மக்களுடனும் மிகவும் அன்புடனும் அன்னியோன்னியத்துடனும் பழகும் பண்பாளர். அவரின் சொத்துக்கள் இனிமையான கருத்தாழமிக்க, சொல்லாடலும், புன்னகை சிந்தும் முகமும்தான்.

யாழ்ப்பாண இஸ்லாமிய சகோதரர்களில் அதிகமானவர்களைத் தமது நண்பர்களாகக் கொண்டு வாழ்பவர் அவர். அவர் மேலும் பல்லாண்டு வாழவும் மேலும் பல பணிகள் புரிந்து தமிழை வளப்படுத்தவும் யாழ்ப்பாண அனைத்து முஸ்லிம்கள் சார்பிலும் வாழ்த்துகிறோம்.

இலங்கை ஜமா அதே இஸ்லாமிச் செயலர்
சகோதரர் எம். எம். சாபிர்
வாழ்த்துரை.

## மணி விழா நிகழ்ச்சிகள்

காலம்:: 1990-06-02 சனிக்கிழமை

இடம்:- யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

மு. ப. 9.00 – 12.00 சொக்கன் ஆக்கங்களின் கண்காட்சி

பி. ப. 2.00 — 2.30 விழாநாயகரை விழா மண்டபத்திற்கு அழைத்து வரல்

பி. ப. 2.30 — 4.00 மணி விழா உரைகள்

பி. ப. 4.00 — 4.30 வாழ்த்துப்பா, பொன்னாடை போர்த்தல்

பி. ப. 4.30 — 5.30 மணி விழா மலர் வெளியீடு

பி. ப. 5.30 — 7.30 சொக்கனில் ''மாருதப் பிரவல்லி'' நாடக நூல் வெளியீடு



மணிவிழா நாயகரும், குழுவினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலங்கியல்

R. ஈஸ்வரதாசன் B. Sc [Cey]

90 A/L ★ கடந்த கால வினா விடை வகுப்பு ★

ஆரம்பம்:- 04 – 06 – 90 திங் — 5.30 p.m.

★ ★ பிறப்புரிமையியல் ★ ★

ஆரம்பம் 06 - 06 - 90 புதன் 4.30 p.m.

[3 வாரத்தில் முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்]

★ ★ ★ குருதித் தொகுதி ★ ★ ★

மீட்டல் வினா விடை — புதன் 5.30 p.m.

21, மணல் தரை லேன், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி-4633)


திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவராகவும், சேர் பி. இராமநாதன் ரஸ்ற் – பர மேல்வராக் கல்லூரி இயக்குனர் சபைத் தலைவராகவும், யாழ். வழக்கறிஞர் சங்கத் தலைவராகவும், இந்துக் கல்லூரிகளின் சபைத் தலைவராகவும் செயலாற்றிய

## உயர்திரு எஸ்.ஆர். கனகநாயகம்

அவர்களின்

# 1ஆம் ஆண்டு நினைவில் மறக்கமுடியாத உண்மைகள்



தோற்றம்: 11 - 05 - 1904 மறைவு: 15 - 05 - 1989

திதி: 02 - 06 - 1990

எஸ். ஆர். ஐயாவின் 31ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் பேசும் இனம் குறிப்பாக யாழ் குடா மக்கள் மறக்க முடியாத உண்மைகள்:

1. சைவமும் தமிழும் என்று தற்பொழுது பல மேடைகளில் பேசப்பட்டு வருகிறது. ஆனால் உண்மையாக சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டவர் திரு. Hindu Board இராசரத்தினம் அவர்கள். அவருக்கு அவர் உயிருடன் இருக்கும் பொழுது பக்கபலமாகவும் அவர் இறந்தபின் அவர் வழி நின்று சைவத்துக்கும் தமிழுக்கும் செயலாற்றியவர் திரு. எஸ்.ஆர்.
2. சைவக் கோயில்கள், தர்மச் சொத்துக்கள் குறிப்பாக Hindu Board ஆதனங்கள் சேர். பி. இராமநாதன் ரஸ்ற், இந்துக்கல்லூரிகள் சபைச் சொத்துக்கள் ஆகியவற்றை பாதுகாத்து தகுந்த வழியில் செயல்படுத்தியவர் திரு. எஸ். ஆர்.
3. யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதற்குப் பல வழிகளில் முயற்சி எடுத்தார்.
4. நகைச்சுவை உணர்வு சாதாரணமானதல்ல இது ஒரு தெய்வீக சக்தி. தனது நகைச்சுவையால் மற்றவர்களை மகிழச் செய்வதில் அவருக்கு அவரே நிகர்.
5. கூடாத வழக்குகளுக்கு திறமையான அட்வகேட்
6. ஒருவர் புகழைத் தேடலாம், செல்வத்தைத் தேடலாம் வீரத்தைத் தேடலாம், ஆனால் ஒருவர் நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து அவரின் ஆத்மா இயற்கையாக, அமைதியாக இறைவடி சேர்வது சுலபமான காரியமல்ல. திரு. எஸ். ஆர். அவர்கள் 86 வயது தலைமயிர் நரைக்காது சுகதேகியாக வாழ்ந்து 14-5-1989 ஆம் திகதி இரவு இராப்போசனம் அருந்தியபின் தனது நகைச்சுவையால் பிறரை மகிழச் செய்து பத்திரிகை வாசித்து, வானொலிச் செய்தி கேட்டபின் நித்திரையில் உறங்கிய பொழுது 15 ஆம்திகதி விடியற்காலை இரண்டு மணியளவில் அவரின் ஆன்மா எவ்வித கஷ்டமுமுன்றி அவரை விட்டுப் பிரிந்தது.

இப்பெரியாரை நினைவுகூர்வது எமது நன்றிக் கடமையாகும்.

ஓர் அன்பர்.

(3663)


**Project Management Services Ltd.**

33, Brown Road, Neeraviadi, Jaffna

Engineering Consultants & Project Managers


## அறிவித்தல்

கீழே குறிப்பிட்ட உபகரணங்கள் எமது ஸ்தாபனத்தில் திருத்துவதற்கு கொடுக்கப்பட்டது. அதனை பல காலமாக உரிமை கோராததால் நாம் இவற்றை ஏலத்தில் விற்பனை செய்ய உள்ளோம் என்பதனை உரிமையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

1. Electric Shaver
2. Scales No: I (Model C 23)
3. Scales No: II (Oertling)
4. Typewriter
5. Ronio Mechine
6. Sumeet Mixer

Operation Manager
**Project Management Services Ltd.,**
33, Brown Road,
Jaffna.

[சி-4656]

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

சென்ற ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஈழநாடு. முரசொலி ஆகிய செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட கட்டிட வேலைகள் சம்பந்தமாக திரும்பவும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட அறிவித்தலின்படி முன்னதாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் திரும்பவும் புதிதாக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏற்கனவே கேள்விப்பத்திரத்திற்கான வைப்புப் பணம் செலுத்தியவர்கள் திரும்பவும் வைப்புப்பணம் செலுத்தத் தேவையில்லை.

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 11ஆம் திகதி காலை 10.00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா. 250,000/- க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே 10.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமூகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரசகரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவியாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக்கட்டிட வேலை செய்ய விரும்புவோர் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆம் திகதி காலை 10.30 மணிவரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். திரும்பப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா. 350/-ம் திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா. 50–/ம் காசுக் கட்டளை மூலம் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கிராமோதய சுகாதார நிலையம்**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டம் | — | மந்துவில்<br>செந்தாங்குளம்<br>மயிலிட்டி. |
| கிளிநொச்சி மாவட்டம் | — | ஆனைவிழுந்தான்<br>புதுமுறிப்பு<br>இராமநாதபுரம்<br>கிளாலி |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மூலையில் '' சுகாதாரப் பகுதியில் கட்டிட வேலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும் அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்று அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப்பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5 % ஒப்பந்தத்தின்படி வேலையை திருப்திகரமாகச் செய்து முடிக்க பிணைப்பணமாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்த பின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவதை நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும், அனைத்து தீர்மானங்கள் இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபை தலைவரைச் சார்ந்தது.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

30 மே. 90. (4657)

### தூய ஒளிசுற்றுக் கிண்ண

## உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன

குருநகர் ஜூன் 2 ''தூயஒளி'' சுற்றுக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட போட்டிகள் இன்று 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழக ஆதரவுடன் யாழ் – உதைபந்தாட்ட லீக்கின் அனுமதி பெற்று குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் போட்டிகளை நடத்துகிறது.

1986 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தால் மண்டைதீவில் கொலையுண்ட 31 குருநகர் மீனவர்கள் நினைவாக 3 ஆவது வருடமாக 11 பேர்கள் கொண்ட விலக்கல் முறை உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பங்குத் தந்தை வண – பி. எம். இம்மனுவேல் அடிகள் சமூகக் கொடியை ஏற்றி போட்டிகளைத் தொடக்கி வைப்பார். தினமும் இரண்டு போட்டிகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## தென்மராட்சிப் பகுதியில் 5 கிராமங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 2 தென்மராட்சிப் பகுதியில் பின்தங்கிய நிலையில் உள்ள ஐந்து கிராமங்கள் புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அறவழிப் போராட்டக் குழுவால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து போரூட் அமைப்பு இந்த பின் தங்கிய கிராமங்களைப் புனரமைப்புச் செய்ய உதவிகள் வழங்க இருக்கிறது.

புனர் நிர்மாணவேலைகளுடன் சமூக அபிவிருத்தித் திட்டங்களும் செயல் படுத்தப்பட இருக்கின்றன. [இ-3]

### அஞ்சலிக் கூட்டம்

வல்வெட்டித்துறை ஜூன் 2 மகா சமாதியடைந்த கொழும்பு வெள்ளவத்தை ராமகிருஷ்ணமடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சம்பிரக்ஞானந்தா மகராஜ் அவர்களின் அஞ்சலிக் கூட்டம் மேற்படி ராமகிருஷ்ண மடத்தில் இன்று சனிக்கிழமை காலை இந்து கலாசார அமைச்சர் கௌரவ பி பி. தேவராஜ் தலைமையில் நடைபெறும். (இ-160)

## அன்ரீஸ் விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 2 ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவுடன் நாவற்குழி அன்ரீஸ் கம்பனி ஊழியர்கள் பங்குபற்றும் விளையாட்டுப் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது போட்டி இன்று சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெறும். இன்று சனி காலை நிகழ்ச்சிகளாக ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிகள், பெண்களுக்கான வேகநடை, உத்தியோகத்தர்களுக்கான ஓட்டப்போட்டி, சாரதிகளுக்கான ஓட்டப் போட்டி என்பனவும் மாலை நிகழ்ச்சிகளாக விநோத உடை, சங்கீதக்கதிரை, நாடகம், பாடல், போட்டிகளும் இடம் பெறும். (இ-7)

## வலி.வடக்கில் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

காங்கேசன்துறை ஜூன் 2 வலி-வடக்கு பிரதேச சபை ஊழியர்கள் நலன் புரிச் சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை எட்டு மணிக்குஆரம்பமாகும்

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

வலி-வடக்கு பிரதே சபை விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறும். (இ-68)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமோதூத வருடம் வைகாசி 21ம் நாள் (04-06-90) திங்கட்கிழமை இரவு 9.22 தொடக்கம் 10 25 வரையுள்ள சுப நல் வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**நித்தியானந்த வடிவேல்**<br>(கண்ணன்) | எமது தங்கை<br>திருநிறை செல்வி<br>**அமுதலெட்சுமி**<br>(அமுதா) |

ஆகிய இருவருக்கும் வல்வெட்டித்துறை. உடையாமணல் ஒழுங்கையில் உள்ள ''சீதாலெக்சுமி வாசம்'' இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| மணமகனின் தாயார்<br>**திருமதி க. வெங்கடாசலம்,**<br>மயிலியதனை,<br>தொண்டமனாறு. | மணமகளின் சகோதரர்கள்<br>**சக்திவேல், ஆனந்தவேல், குமரவேல்.**<br>''சீதாலெக்சுமி வாசம்''<br>உடையாமணல் ஒழுங்கை, வல்வெட்டித்துறை. |

[3674]

உ

## ★ இசை அரங்கேற்றம் ★

சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ க. இராமநாதன்
சங்கீத பூஷணம் திருமதி பூமணி இராஜரட்ணம்
ஆகியோரின் மாணவியும்
யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவு பழைய மாணவியுமான

இசைக் கலைமணி

### செல்வி புஷ்பராணி சின்னத்தம்பி



இடம்: வரணி சிட்டிவேரம் [சுட்டிபுரம்] கண்ணகி கலையரங்கு

காலம்: 04 – 06 – 1990 திங்கள் இரவு 7 மணி

பெரியோர்கள், கலைஞர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சமுகம்தந்து இசை அரங்கேற்றத்தைச் சிறப்பித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சின்னத்தம்பி குடும்பத்தினர்.

சரம்பைக்குறிச்சி,
வரணி,

(3687)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்

# பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு பெரும் பங்காற்றியவர் எஸ்.ஆர்.

சட்டத்துறை அறிஞர் திரு. எஸ் ஆர். கனகநாயகம் மறைவெய்தி ஓராண்டு காலம் கழிந்துவிட்டது. ஆயினும் அவர் பற்றிய நினைவுகள் இன்றும் நம்மவர்களிடையே பசுமையாகி நீடித்திருப்பதற்குக் காரணங்கள் பல. அமரர் கனகநாயகத்தின் பணிகள் பன்முகப்பட்டவையாக அமைந்தன. சமூக நலனுக்கு உறுதுணையாக இருந்தன. அதனாலே தான் அவர் சிறப்புப் பெறுகின்றார்.

ஒரு நியாய துரந்தரர் என்ற முறையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் புகழ் பெற்று அவர் விளங்கினார். யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலும் ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் வாழும் மக்கள் அவரது சட்ட ஆலோசனைகளைப் பெரிதும் விரும்பி நாடினர். அவர் நீதிமன்றங்களில் வழக்குரைப்பதுடன் மட்டும் நின்று

உழைத்தார்.

விடாது, பொதுவாழ்க்கைப் பணிகளிலும் முன்னின்று தேசிய அரசியலிலும் கல்வி

> முன்னாள் மூதவை உறுப்பினர் திரு எஸ். ஆர் கனகநாயகத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

சமூகச் சீர்திருத்தப் பணிகளிலும் அவருடைய செல்வாக்குக் கணிசமானது. ஒரு காலத்திலே மூதவை (செனேற்) உறுப்பினராக மிளிர்ந்த அவர், தமது முதுமைக் காலத்திலே, சமய நிறுவனங்களில் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்தார். பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர்சபை, இராமநாதன் நம்பிக்கை நிதியம், சைவ வித்

தியாவிருத்திச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் தொடர்பான அரிய பணிகளில் ஈடுபட்டு உழைத்தார். அவர் தமது கிராமத்திலுள்ள முருகமூர்த்தி கோயிலின் பரிபாலன சபையின் தலைவராகக் கடமையாற்றியும் ஆலய புனருத்தாரணம் செய்வித்தும் திருக்குடமுழுக்கு நடத்துவித்தும் இக்கோயில் செவ்வனே நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு விதங்களிற் பொதுப் பணி ஆற்றிய திரு. எஸ். ஆர். கனகநாயகம், யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அமைவதற்குப் பல வழிகளில் முயற்சி எடுத்துள்ளவர் என்பதைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

இத்தகைய பெரியோரைப் போற்றி நினைவு கூர்வது நன்றியறிவுடைய நம் சமூகத்தின் கடமையாகின்றது.

**பேராசிரியர் அ. துரைராஜா**
(உபவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

## டொனால்ட் கிண்ண கிரிக்கெட்: போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெறும் இப்போட்டிகள் யாவும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் நொதேண் விளையாட்டுக்கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம், கிறீன் அன் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம், ஷப்றா விளையாட்டுக் கழகம், ஓல்ட் கோல்ஸ், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம், கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழகம், ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம், அரியாலை விளையாட்டுக் கழகம் ஆகிய பத்துக் கழகங்களைச் சேர்ந்த பதினொரு அணிகள் பங்குபற்றுகின்றன.

இன்றைய போட்டியில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (புளூஸ்) அணி மோதவிருக்கிறது. இப்போட்டி காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். [ஓ-மு]

## பயிலுநர் ஆசிரியருக்கு அலவன்ஸ்

கிளிநொச்சி மாவட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான சம்பள அலவன்ஸ் நேற்று வழங்கப்பட்டது.


சுமார் இரண்டரை மாதங்களுக்கு முன்னர் நியமனம் பெற்ற இவர்களுக்கு இது வரை எதுவித வேதனமும் வழங்கப்படாமல் இருந்தது. (ஓ--76)

## தபால் பெட்டிகள்

யாழ். மத்திய தபால் அலுவலகத்துக்கு மேலும் 20 கொங்கிறீட் தபால் பெட்டிகள் தேவை என யாழ். மத்திய தபால் நிலைய அதிபர் தபால் திணைக்கள தலைப்பீடத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே இங்கு அனுப்பப்பட்ட சில கொங்கிறீட் பெட்டிகள் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு சனசமூக நிலையங்கள் ஊடாக சிரமதானம் மூலம் நாட்டப்பட்டுள்ளன. (ஓ-10)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சி. வே. சிவசுப்பிரமணியம்**

அவர்கள்

(உரிமையாளர், ராஜு ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்)
(சுப்பிரமணியன் சோடாக்கம்பெனி, வல்வெட்டித்துறை)

தோற்றம்:- 12-07-1913 மறைவு:- 25-05-1988

திதி:- 02-06-1990

எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு இரண்டானாலும் தாங்கள் எங்கள் மனதை விட்டகலவில்லை தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வல்வெட்டித்துறை (3691)

## வ.பி.போ.சபைக்கு பஸ்களை வழங்குமாறு கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஜூன் 2

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு உடனடியாக பஸ்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு ஒஸ்டின் பெர்னாண்டோ போக்குவரத்துஅமைச்சு செயலாளரைக் கேட்டிருக்கிறார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினத்தின் வேண்டுகோளை அடுத்து யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் போக்குவரத்துச் சேவையை சீராக்க பஸ்கள் தந்துதவுமாறு மத்திய போக்குவரத்துச் சபையை கேட்டிருந்தார்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் அரச அதிபருக்கு அனுப்பியிருக்கும் பதிலிலேயே மேற்கண்டவாறு தெழுவித்துள்ளார். (உ-3-9)

## கடத்தலில் ஈடுபட்டு கைதான மூவரும் பிணையில் விடுதலை

கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று பேருக்கு தலா ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல சுங்கத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இவர்களுடன் கைது செய்யப்பட்ட ஏனைய இருவரும் அகதிகளாக வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று சுங்கப் பகுதியினால் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை கூறைச் சேலைகளைக்கடத்தி வந்த குற்றத்தின் பேரில் வடபகுதிக் கடலில் வைத்து கடற்படையினர்இவர்களைக கைது செய்து சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைத்திருந்தது தெரிந்ததே. (ஓ-10)

## காங்கேசன் களஞ்சியத்துக்கு உரம் அனுப்பி வைக்குக!

### கமநல சேவை திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

தேசிய உரக் கூட்டுத்தாபனத்தின காங்கேசன் துறை உரக் களஞ்சியத்துக்கு உரம் அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கமநலச் சேவை சிரேஷ்ட ஆணையாளர் யாழ். அதிபருக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்பொழுது அனுராதபுரம் களஞ்சியத்தில் இருந்து கமநலச் சேவை நிலையங்கள் உரவகைகளை கொள்வனவு செய்து வருகின்றன.

இதனால் வீண் போக்குவரத்துச் செலவீனம் ஏற்படுகிறது.

தேசிய உரக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன் துறை உரக் களஞ்சியம் திருத்தம் செய்யப்பட்டு செயல்படும் நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த உரக் களஞ்சியத்தில் 3 ஆயிரம் மெட்ரிக் தொன் உரவகைகள் களஞ்சியப்படுத்தி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-10)

## பேச்சுக்களின் மூலமே----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யல் சூன்யநிலை தோன்றியிருக்கிறது. அதனால் அப்பகுதி மக்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர்'' - இவ்வவாறு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையைபோக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தத்தை உடனடியாக நீக்கவேண்டும். இத்திருத்தம் நாட்டில் பிளவை ஏற்படுத்தவே உதவியிருக்கிறது என்றும் விடுதலைப் புலிகள் இயக்கக் குழு ஜனாதிபதியிடம் மேலும் சுட்டிக் காட்டியது.

ஜனாதிபதி பிரேமதாஸா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் குழுவினரை வரவேற்றுப் பேசினார்.

பேச்சுக்கள் மூலம் வடக்கு-கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு உறுதி பூண்டுள்ளது என்று ஜனாதிபதி சொன்னார்.

இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, வடக்கு- கிழக்கு மக்கள் சுதந்திரமான தேர்தல் ஒன்றின் மூலம் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு ஏதுவாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. பிரேமதாஸா சொன்னார்.

இன அமைதியையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்கனவே ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. என்று கூறிய ஜனாதிபதி நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிலைபெற இது அவசியமானது என்றும் கூறினார்.

-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதே வேளை —

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழு நேற்றைய சந்திப்பின்போது மூன்று கோரிக்கைகளை முன்வைத்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

★ வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைத்தல்

★ வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு புதிய தேர்தலை நடத்துதல்.

★ அரசியல் யாப்பின்ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்தல்.

— ஆகிய மூன்று கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர் என்றும் —

இந்த விஷயங்கள் தொடர்பான அரசியல் மற்றும் சட்ட அம்சங்கள் குறித்து அரசு தற்போது ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகள் குழுவிடம் தெரிவித்தார் என்றும் அச்செய்தி தெரிவித்தது. (உ-எ)

## தொலைபேசி- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை பகிர்ந்தளிக்கும் வேலைகளை தொலைத் தொடர்புத் திணைக்களமே மேற்கொண்டு வருகிறது. இதனால் முக்கிய திணைக்களங்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்படுவதில்லை என்று புகார் கூறப்படுகிறது என்று மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, புதிய இணைப்புக்களைப் பகிர்ந்தளிக்கும் வேலைகளை அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொலைத் தொடர்புப் பிராந்திய பொறியியலாளர் ஆகியோர் இணைந்து மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது. [இ-3-9]

## பருத்தித்துறை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவலக் குரல் எழுப்பினர். குழந்தைகள் வீறிட்டழுதன. பயணிகள் பதற்றமடைத்தனர்.

விபரீதமான நிலைமையை உணர்ந்த பஸ் சாரதி வீதியின் இடப்புறமாக நின்ற கொள்ளையர் நால்வரையும் நோக்கி வேகமாக பஸ்ஸைச் செலுத்தினார். பீதியடைந்த கொள்ளையர் பின் வாங்கினர்,

சாரதி பஸ்ஸைச் திருப்பி வேகமாக வடக்கு நோக்கிச் செலுத்தி தப்பி வந்து சேர்ந்தார். (ஓ-160)

## கடும்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் குடும்பத்தை நடத்த வருமானம் ஈட்டிக் கொடுக்கும் அந்தக் குடும்பத்தின் பிரதான அங்கத்தவர் ஒருவருக்கு அரச வேலைவாய்ப்பு வழங்கவே இந்த விபரங்கள் சேகரிக்கப்படுவதாக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3,9)

## சிங்களமன்னர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் இருந்ததில்லை.

எனினும் இந்திய அமைதிப் படை இந்த நிபந்தனைகளுடன் வந்தது; அதற்கமைய அது வெளியேறியது.

### உதவி கேட்டதில் புதுமை இல்லை

ஒரு நாடு தனக்கு உதவும்படி நேச நாடுகளைக் கேட்டுக்கொண்ட பலசந்தர்ப்பங்கள் உள்ளன. இலங்கை அவ்வாறு இராணுவ உதவியைக் கோரியதில் எதுவித புதுமையும் இல்லை.

ஐரோப்பாவில் இன்றும் அமெரிக்கத் துருப்புக்கள் உள்ளன. பிரிட்டனில் மட்டும் 60 அமெரிக்க விமானத் தளங்கள் உள்ளன.

மறைந்த பிரதமர் நேருவின் கோரிக்கையின் பேரில் 1962 ஆம் ஆண்டில் சீனாவுக்கு எதிராக இந்தியாவுக்கு உதவ அமெரிக்கத் துருப்புக்கள் இந்தியா சென்றன. அமெரிக்கத் துருப்புக்கள் புதுடில்லியில் தங்கள் விமானங்கள் சகிதம் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தன.

இலங்கையில் ஐக்கியம், பிரதேச கௌரவம், இறைமை ஆகியவற்றைப் பேணும் வகையிலும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல இனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் இந்த அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

### மாற நேர்ந்தது

எனினும் ஒரு தீவிரவாதக் குழு ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறியதால் இந்திய அமைதிப்படையின் பங்கு எதிர்பாராத வகையில் மாற நேர்ந்தது.

இந்திய அமைதிப்படையின் இந்த போக்கின் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான பேச்சுக்களில் பங்கெடுத்து ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்து கொள்ள இயலுமாயிற்று என்று திரு. ஜெயவர்த்தனா கோரினார். (ஓ-எ)

## நூல் நிலையம் இயங்கும்நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாநகர சபையின் நூல்நிலையங்கள் இயங்கும் நேரம் மேலும் ஒருமணித்தியாலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கானபணிப்பை யாழ். மாநகர ஆணையாளர் விடுத்துள்ளார்.

இதுவரைகாலமும் மாநகர சபையின்கீழ் இயங்கிவந்த நூல்நிலையங்கள் அனைத்தும் மாலை 5 மணிக்கு மூடப்பட்டன.

பொதுஸ்தாபனங்களும், வாசகர்களும் விடுத்த வேண்டுகோளை அடுத்தே சகல நூல் நிலையங்களும் மாலை 6 மணிக்கே மூடப்படுகின்றன. (ஓ-9)

## பாதிக்கப்பட்டோர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடு சேதமடைந்தவர்கள், குடும்ப பொறுப்பாளரை இழந்தவர்கள், தொழில் இல்லாதவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை.

★ விதவைகள், ஊனமடைந்தவர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் ஆகியோரின் எண்ணிக்கை .

★ வர்த்தக நிலையங்களின் சேதங்கள்.

(இ-9-3)

## விளக்கு --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் தெருவிளக்குகள் காலை எட்டுமணிக்கு ['ஜொலிக்கிறோம் நாம்'' என்று சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

அந்த வீதியால் அலுவலகம் வந்த மாநகரசபை உயர் அதிகாரி ஒருவரின் கண்ணைக் கூசச் செய்தன அந்த மின் விளக்குகள். உயர் அதிகாரி உடன் நடவடிக்கை எடுத்தார். மின்சாரப் பகுதி ஊழியர் ஒருவருக்குச் சீட்டுக் கிழிந்தது!

சம்பந்தப்பட்ட உயரதிகாரி நாளாந்தம் தனது அலுவலக வழியை மாற்றிக்கொண்டால் மின்சாரத்துக்காக மாநகர சபைக்கு மிச்சம் பிடிக்கலாம்! (ஓ-9)

## சிங்களவரை குடியமர்த்தக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள அகதிக் குடும்பங்களை மீண்டும் அவர்கள் வசித்து வந்த பாரம்பரிய இடங்களில் விரைவாகக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும்படி அஸ்கிரிய மகாநாயக்கா வண. பலிபான ஸ்ரீ சந்தானந்ததேரர் ஜனாதிதி பிரேமதாஸாவைக் கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் மகாநயக்கதேரர் இந்த வேண்டுகோளை விடுத்தார். (இ-எ)

## கொழும்பில் ஜீப் மீட்பு

கொழும்பு, ஜூன் 2

வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான ''பஜேரோ'' ஜீப் ஒன்றை கொழும்பு, புறக்கோட்டையில் வைத்துகடந்த புதன் கிழமை பொலீஸார் கைப்பற்றினர்.

புறக்கோட்டை வர்த்தகர் ஒருவருக்கு அந்த ஜீப்பை விற்பதற்கு விலை பேசும் போது அது கைப்பற்றப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஓ-எ)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலி



தாவடி வடக்கு காளிகோவிலடி
செல்வி. சரண்யா நடராசா

மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி மலர்ந்தது 11-4 1988

மனம் பதறித் துடிக்க வாடி உதிர்ந்தது 13-5-1990

எத்தனை யாண்டுகள் தவமிருந்தெம்மை
ஏங்கித் தவிக்க வைத்தாய் அதன்பின்
இத்தரை மீதினில் வந்து பிறந்தெம்
இதயம் குளிர வைத்தாய் மலரெனும்
முத்திரை அழித்தெம் முகத்தினில் அன்றுநீ
முறுகல் தவழ விட்டாய் பிறகேன்
பித்தரைப் போலெமைப் புலம்பிடவைத்துப்
பிரிந்து நீ சென்றுவிட்டாய்

உன் பிரிவால் வாடும்,
திரு. திருமதி நடராசா(பெற்றோர்)
குடும்பத்தினர்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில். (13325)

எமது புதிய வெளியீடுகள் :

★ ராஜசேகர் ★ சசிகலா
நான் மந்திரியானால்
(ஒறிஜினல்)

★ நாகேஸ்வரராவ் ★ சாவித்திரி
தேவதாஸ்
(V. G. P. ஒறிஜினல்)

★ சிவாஜி ★ முத்துராமன் ★ ஜெயலலிதா
அவன்தான் மனிதன்
(ஒறிஜினல்)

சீர்காழி கோவிந்தராஜனின்
அகத்தியர்
(ஒறிஜினல்)

KVC வீடியோ சென்ரர்.
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(சி/4660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டுநினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
21 – 06 – 1964

அரக்கர்கள் அழிப்பு:
14 – 05 - 1989

திதி:- 02 – 06 – 1990

**திரு கு. மயில்வாகனம் - ஸ்ரீ குமார்**
(மாசிலா, கொழும்பு குடம்)

ஆண்டவன் அருளி தந்த
அருங்கனி சுவையே!
அமுத கானம் இசைத்த — எங்கள்
தமிழ் மொழிக் குயிலே!
மூண்டதோர் ஊழ்வினை
மூடிய கார் இருள் தனில்
முக - ரூபங்கள் இழந்தோர் கூடியே
முத்தே! உன் எழில் தனை சிதைத்தனரே!

மறவர் குலம் வாழ்ந் தோங்க
மரக் கலங்கள் செலுத்திய மா - வீரா
மகவு இரண்டினை பெற்ற பின்னும்
மறவா நெஞ்சினாய் பணி தொடர்ந்த
மாசிலா

குறவர் கூட்டம் என்பதாய்
குறை – கால பிரசவிப்புக்கள்
கொழும்பு குடம் எனும் உன்னை
கொடு வாள் வீசியே வீழ்த்தினரே!

இனிதாய் வாழ்ந்த இல்லமதை
இடிவந்து தாக்கியதாய்
இளையவன் பாப்பாவை
இழந்த துயர் மறையு முன்னே
தொடராய் துயர் பட
விதியும் எழுதியதாய்
துன் மதியார் ஆணவத்தால்
அன்பு (சின்) ஐயாவையும் பறித்தனரே!

துணையாய் நீயும் இருப்பாய்
என்பதும் பொய்யாகியே
துர்ஷிதா - முகம் தனையும்
நினையாதே சென்றாயே
அணையா அன்பின்
அகல் விளக்கே - எங்களை
ஆளும் தெய்வ ஒளியாய்
இதயமதில் என்றும் இருப்பாயே!

பிள்ளைகள்:
சுதர்சன், துர்ஷிதா,
வல்வெட்டித்துறை – பெற்றோர் குடும்பத்தினர்,
மயிலிட்டி – ஐயாச்சி குடும்பத்தினர்
(3688)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கா. ச. நடராசா வரதராஜ்**

தோற்றம்:-
24– 06–1949

மறைவு:-
02– 06– 19 89

பாசத்துடன் வளர்த்து பாதியில் பறிகொடுத்த பாவிகள் நாங்கள் உனது சகோதர சகோதரிகள் உனது பாசம் உணர முன்னே உன்னை இழந்த மகள் சத்யை, மனைவி ரத்தி மருமக்கள் மற்றும் உறவினர்கள் வேண்டுவது இறைவனிடம் உமது ஆத்ம சாந்தி!

ஜானகி ரகுநாதன், தேவகி, தனராசா,
மகேந்திரன் (மித்திரன்), Bobby தனராசா.
55, நெடுங்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(13316)

# அரசின் செயற்பாட்டை பொறுத்து போராட்டவடிவங்கள் மாறும்

### சாவகச்சேரி கூட்டத்தில் பாப்பா

கைதடி ஜூன் 2

நாம் தற்போது சிங்கள இனவாத அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்துகிறோம் கடந்த 40 ஆண்டுகளாகநாம் பேச்சுவார்த்தை நாடத்தி எமக்கு கிடைக்காத உரி மகளும் சலுகைகளும் எமக்கு இந்தப்பேச்சுவார்த்தைமூலம் கிடைக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. ஆனால் எமது கோரிக்கைகளைப்பரிசீலிக்கும் இலங்கைஅரசினுடையசெயற்பாட்டைப் பொறுத்தே எமது இராணுவ அரசியல்போராட்டங்களில் வடிவங்களில் மாறுதலைக் காணலாம்.

இவ்வாறு தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் பாப்பா கூறினார்.

அமரர் காணிக்கை நினைவாக சாவகச்சேரி பாதுச் சந்தை முன்றலில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

டாக்டர் திரு. பி எட்வேட் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாப்பா தொடர்ந்து பேசுகையில்கூறிதாவது:-

நாம் பகிரங்கமாக இராணுவத்துடன் மோதிய போது எமக்கு உதவி செய்ய ஏராளம் பேர் முன் வந்தார்கள். ஆனால் எமது போராட்டம் நலிவடைந்து நாம் இந்திய இராணுவத்துடன் மோதிய காலத்தில் எமக்கு உதவி செய்ய தயங்கினார்கள். பயந்தார்கள்.

இந்த காலகட்டத்தில் தான் திரு. காணிக்கை எமக்கு உணவு தந்து, உறங்க இடம் தந்து கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றினார். அவர் எமக்கு செய்த உதவி காரணம் ஒன்றினால் தான் துரோகக் கும்பலினால் கொல்லப்பட்டார்.

இனிமேல் எமது மக்கள் மத்தியில் ஊடுவுரும் எந்த ஒரு காக்கைவன்னியனையும் விட்டு வைக்க மாட்டோம். அவர்களை அழித்தே தீருவோம்

இப்படி அவர் கூறினார்.

திரு. காணிக்கை நினைவாக திரு. ரவீந்திரன் தலைமையில் மக்களால் உதைபந்தாட்டப்போட்டிகள் நடாத்தப்பட்டன. 19 வயதுக்கு மேற் பட்டோர் போட்டியில் தென்மராட்சி விளையாட்டுக் கழகம் 1 ஆம் இடத்தையும், புனித விசோரியர் விளையாட்டுக் கழகம் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

19 வயதிற்கு உட்பட்டோர் போட்டியில் புனித விகோரியர் விளையாட்டுக் கழகம் 1 ஆம் இடத்தையும் திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் 2 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதற்கான வெற்றிக் கேடயத்தை திரு. விஜயேந்தி அன்பளிப்பு செய்தார்.

ஏனைய பரிசில்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் திருவள்ளுவர் விளையாட்டுக் கழகமும் வழங்கியிருந்தன. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி காணிக்கை ராசா வழங்கினார்.
(இ-74)

## மூலவளங்கள் பற்றிய நூல் உதவி அ.அ. பிரிவு வாரியாக

யாழ்ப்பாணம் ஜூன் 2

யாழ் மாவட்டத்தில உள்ள மூலவளங்கள் பற்றிய நூல் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக வெளியிடப் பட இருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மூலவள ஆய்வுகள் மேற் கொள்ளப் பட்டு வந்தன முகாமைத்துவ பட்டதாரிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுகள் விவசாயம், மீன்பிடி, பனந் தொழில், சனத்தெகை, அபிவிருத்தி திட்டங்கள் அடிப் படையில் புள்ளி விவரங்களுடன் தயாரிக்கப் பட்டுள்ளன.


ஒவ்வொரு பிரிவிலும் உள்ள தேவைகள், பிரச்சினைகள். சுகாதார நிலை தரிசுக்காணிகளின் பயன்பாடு ஆகிய விடயங்களின் ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன.


விரைவில் இந்த ஆய்வுகள் நூல் வடிவில் வெளியிடப் பட இருக்கின்றன.
இந்த நூல் அடிப்படையிலேயே இனி அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ - 3)

## 500 குடும்பங்களுக்கு வீடமைப்பு மானியம்

முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் முல்லை உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு வீடமைப்பு மானியத்தின் முதற்கட்டப் பணமாக தலா 8 ஆயிரம் ரூபா அண்மையில் வழங்கப் பட்டது. (92)


# சிக்மா பம்ப்ஸ் CEYGMA PUMPS





## உங்கள் தேவைகளுக்கேற்ற மின் மோட்டர்கள் ELECTRIC MOTOR PUMPS

| | | |
|---|---|---|
| ½ H. P. | 1" x 1" | — Rs. 3950.00 |
| 1 H. P. | 1½" x 1½" | — Rs. 5000.00 |
| 1½ H. P. | 2" x 2" | — Rs. 6450.00 |

**நீர் இறைக்கும் இயந்திரங்கள்**
**Engine Driven Pumps**

- இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
  **Indian Viltiers M K 12 Rs. 10200.00**
- குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது
  **Kubota K S 160 Rs. 12900.00**

இப்பொழுது கையிருப்பில் உண்டு. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் [Guarantee] உண்டு. பழுதடைந்த பம்புகள் அதி விரைவில் திருத்தி [Repairs] புனரமைத்துக் கொடுக்கப்படும். இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

*United Agro Engineering*

274/1, ஆஸ்பத்திரி வீதி, - யாழ்ப்பாணம்.
[பெரியாஸ்பத்திரி முன்பாக]

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி.
[சி/4630]


## மக்கள் வங்கிக்கிளையில் நாளை கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ். மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையினால் தொழில் முயற்சிக்கான நன்கொடைப்பணமும்வீடு திருத்துவதற்கான நன்கொடைப் பணமும் நாளை 3 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை கீழ் காணும் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப் படவுள்ளன. ஊர்காவற்றுறை, யாழ்ப்பணம், நல்லூர் வடமராட்சி கிழக்கு, தெல்லிப்பழை, கரவெட்டி சங்கானை.

இவர்களுடன் ஏற்கனவே திகதி குறிக்கப்பட்டு கொடுப்பனவு பெறாதவர்களும் நிவாரணப்பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள். (இ)

## மாத இறுதியுடன் பயிற்சிக் காலம் பூர்த்தி

யாழ்ப்பாணம் ஜூன் 2

மாகாண சபையால் முகாமைத்துவ பயிற்சிக்காக நியமிக்கப்பட்டபட்டதாரிகளின் பயிற்சிக்காலம் இம்மாத இறுதியுடன் பூர்த்தி அடைகிறது.

முகாமைத்துவ பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பல திணைக்களங்களில் பணியாற்றி வருகிறார்கள்.

இவர்களுக்கு உள்ளகப் பயிற்சிகள் முடிவடைந்து தற்சமயம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வெளிக்களப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இம்மாத இறுதியுடன் இவர்களது பயிற்சிக்காலம் முடிவடைந்தபின் மாகாணசபைக்கு இவர்கள் செல்ல வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளனர்.

அதன்பின் இவர்களுக்கு நிரந்தர சம்பள அடிப்படையில் பதவிகள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படவிருக்கிறது. [இ-3]

## கும்பழாவளை பிள்ளையார் கோவிலில்

யாழ்ப்பாணம், ஜூன் 2

அளவெட்டிகும்பழாவளைப் பிள்ளையார் கோவில் 5 ஆம் திருவிழாஇன்று சனிக்கிழமை பகல் விசேஷ அபிஷேகஆராதனைகளுடன் நடைபெறும்.

இரவு 9.30 மணியளவில் வாலியைக்கொன்றது நீதியா? அநீதியா? என்னும் தலைப்பில் பட்டி மன்றம் நடைபெறும். (இ-7)

## கூட்டுறவு உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளராக திரு. எஸ். லிங்கநாதன் பதவிஏற்றுள்ளார்.

கூட்டுறவு உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஐ. நித்தியராஜ் செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே அவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் (இ-3)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்
**திரு. வல்லிபுரம் சிவசோதி**
(உரி: திருமகள் ஸ்ரோர்ஸ், நெல்லியடி)

மலர்வு:
18 – 05 – 1943

உதிர்வு:
13 – 06 - 1989

திதி: 02 – 06 – 1990

அன்பினால் எம்மை ஆட்சி செய்தவர்
ஆல விருட்சமாய் எமக்கு நிழலாய் நின்றவர்
இன்சொலால் இனிமையாய் வாழ்ந்தவர்
ஈகைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்
உத்தமராய் ஊர்உலகுக்கு வாழ்ந்தவர்
ஊரார் போற்றும் உதார புருசராய் திகழ்ந்தவர்
எங்கள் அணையாத சோதி என்றும்
எளிமையானவர்
ஏற்றமிகு பண்பால், பாசத்தால் எம்மைப்
பிணைத்தவர்
ஐயன் திருநாமம் அயராது ஓதியவர்
ஒருவருடனும் பொல்லாங்கு பேசாதவர்
ஓடி மறைந்ததையா ஒரு வருடம்
அன்பே நீ அருகினில் இருக்கையில் எமக்கேன்
சொர்க்கம்
அன்பே நீ அருகினில் இல்லாத போது எமக்கேன்
சொர்க்கம்

திருமகள் குடும்பம்.

முருகமூர்த்தி ஒழுங்கை,
நெல்லியடி,
கரவெட்டி.
(3668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 ஆம் மாத நினைவஞ்சலி



வீரவேங்கை
கப்டன் நெடுமாறன் (ஜெகன்)
(வயித்திலிங்கம் கணேசநாதன்)

தோற்றம்: 17 - 01 - 1964
வீரமரணம்: 30 - 08 - 1989


''விளங்கு[ ]வெண்திரை படர்ந்துமே நிறை
வீரமாணிக்க தேவன்துறை
பிறந்து குறும்புகள் புரிந்து வளர்பிறை
போல வளர்ந்தனன் ஜெகனவனே!
கொடுந்தொழில் புரி கொடிய மாநிரை
கூடும் இந்திய அவுண படை
தரம் அறுத்தனன்! தாய்த் தமிழ் விலங்கற
தந்தான் உயிர் வேங்கை நெடுமாறன்!''

03-06-90 அன்று நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு அகலாத
தாய் வ. இலட்சுமி அம்மா,
சகோதரர்; சிவயோகநாதன்,
மோகன், புனிதக்கிளி.

வீரமாணிக்கதேவன்துறை,
மயிலிட்டி. [3651]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
கிருஷ்ணபிள்ளை ஜெயானந்தன்

ஆண்டவன் படைப்பு: 1968 – 05 – 29
அன்னியர் அழிப்பு: 1989 – 06 - 13

திதி: 1990 - 06 - 02

அன்புச் செல்வமே! அருமை மகனே ராஜன்!
ஆண்டொன்று முடிந்ததையா
அழுது மனம் ஆறவில்லை
மின்னல் போல் மறைந்தாய் ஐயா!
ஏங்கி மனம் தவிக்கின்றோம்
ஆறாத்துயரை ஆற்றமுடியவில்லை
எங்கள் அன்பு ராஜன்
எங்கள் இதயத்தை, உன்
நீங்காத நினைவுகள் மறையாது செல்வம்
உன் ஆத்மா சாந்தியடைய
உணர்ச்சி இன்றி பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், அண்ணா, அத்தான்மார்,
அக்காமார், தங்கை, உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

ராஜ வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (13298)

# SRI MEENAKSHII COMMERCIAL COLLEGE

11 B, Momsac Building,
(Opp. Vivekananda Press)
Stanley Road, Jaffna.

**I. A. B: (Found, Inter Finals)**
Weekdays: 04 - 06 - 1990
Weekends: 03 - 06 - 1990

**A. A. T: (SriLanka) STAGE I**
03. 06. 1990

Lecturer: K .C. Satiyamoorthy
(சி–4614)

## அம்பாறையில் புதுவித காய்ச்சல்

அம்பாறை ஜூன் 2

அம்பாறை மாவட்டத்தில் புதுவித காய்ச்சல் வேகமாகப் பரவிவருகிறது.

பெரும்பாலும் சிறு குழந்தைகளே இக்காச்சலால் பெரிதும் பீடிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் கிராமங்களிலுள்ள வைத்திய சாலைகளுக்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருவோர் எண்ணிக்கை அதிகரித்தவண்ணமுள்ளது.

இப்பிரதேசத்தில் நிலவும் வரட்சி காரணமாகவே இந்நோய் பரவிவருவதாகக் கூறப்படுகின்றது. (இ–14)

திருமலை வாழ் பட்டதாரிகளதும் அரச உத்தியோகத்தர்களதும் தேவை கருதி

யாழ் நகர் அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
ஆரம்பிக்கும்

**S. L. A. S.** போட்டிப்பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்

திருமலையில்– ஆரம்பம்: 07—06—90

பாடநெறி: கிரகித்தல், நுண்ணறிவு, விடய ஆய்வு, பொதுவினாத்தாள்

★ தொடர்ச்சியாக 10 தினங்கள் பி. ப. 3—7 மணி வரை
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/-
★ விடுமுறை தினங்களில் காலையும் – மாலையும்

விபரங்களுக்கு: மயூரன் புத்தகசாலை,
வித்தியாலயம் வீதி – திருகோணமலை.

# ASTAN INSTITUTE

166/1, Hospital Road, JAFFNA:
[சி–4611]

சகலவிதமான
★ ரெலிவிஷன்
★ விடியோ டெக்
★ ரேடியோக்கள்
கைதேர்ந்த நிபுணர்களால்
திருத்திக் கொடுக்கப்படும்.

**V. K. இராசரத்தினம்,**
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி–4606)

# STRUCTURED BASIC COMPUTER PROGRAMMING

கொம்பியூட்டர் கலையை பயிலும் மாணவர்கள் தகுந்த கைநூல்கள் தமிழில் இல்லையே? என்ற கவலையை மாற்றும் நோக்குடனும், கொம்பியூட்டர் என்றால் என்ன? எவ்வாறான தொழில்பாடுகளை மேற்கொள்கிறது. எந்தெந்த வகையில் மனிதனுக்கு உதவி அளிக்கின்றது என்பவற்றுடன்.........

BASIC மொழியின் பூரண விளக்கங்களும் பயிற்சித் திட்டங்களும் அடங்கியதான தமிழ் மூலம் பயிற்சித் திட்டம். நீங்கள் எங்கு கொம்பியூட்டர் கல்வியை பயின்றாலும் எமது பாடத்திட்டம் உங்களுக்கு பயிற்சிக்கான முழு விளக்கங்களையும் தமிழில் தருவதால் நீங்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வல்லமை அளிக்கின்றது.

எமது பாடத்திட்டத்திற்கான காலம் மூன்று மாதமேயாகும். மூன்று மாதங்களுக்கும் தபால் மூலம் போதனைகள் வழங்கப்படும். இதற்கான கட்டணம் ரூபா 150/- மாத்திரமேயாகும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு:-
S. B. C. P.

# Bright Training Centre

P. O. Box 162, Colombo.
(சி–4570)

# மங்காப் பளபளப்பு நீடித்த பாவனை துருப்பிடியாத் தன்மை





உங்கள்
இல்லங்களுக்கு
எக்காலத்துக்கும்
அவசியமான பொருட்களாகிய
உருக்குப் பாத்திரங்கள் பலவற்றை
மங்காப் பளபளப்போடு
துருப்பிடியாத்
தன்மை வாய்ந்ததாக
வழங்குகிறது

# ஆபிகோ

ரூ. 75/- தொடக்கம்.

Tradlanka -286

திருமண
அன்பளிப்புக்கும்
மிகப்
பொருத்தமானவை





○ உடையாதவை ○ நொறுங்காதவை
○ கறைபடியாதவை
○ பாவனைக் காலம் முழுவதும் பளபளப்புடன் திகழ்பவை



**மனதுக்கு மகிழ்ச்சி மனைக்கு கவர்ச்சி**

# ஆபிகோ காட்சியறைகள்

ஹைட் பார்க் கோணர், நாவின்ன, புறக்கோட்டை, தெஹிவளை, மொரட்டுவை, களுத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்வளம் பெருக்கிப் பூச்சியை அழித்து
விளைச்சலைப் பெருக்கிட
"நீமியா" உரம்
உதவுகிறது.
500 கிறாம் பக்கெற் ரூ. 5/- மட்டும
தொகையாக வாங்குவோருக்கு
விசேட கழிவுண்டு
10 பக்கெற் நீமியா உரம் ஒரே
தடவையில் வாங்கி அரிய
"நாட்டிற்கு நயம் தருவன"
விவசாயக் கைநூல் பக்கம் (260)
ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

02—06—1990 சனிக்கிழமை

ஓதுவதொழியேல்
-ஆத்திசூடி.
அறிவு நூல்களை வாசிப்பதை
நீ மரண பரியந்தம் விடாதே.
ஆத்திசூடி, கொன்றை வேந்தன்,
வெற்றிவேற்கை வாக்குண்டாம் உலக நீதி
பிரதி ஒன்றுக்கு
மில்க்வைற் மேலுறைகள் 25
அனுப்பிப் பெற்றுப் பயனடைக.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

# மக்களுடன் போர் புரிய அரசு விரும்பவில்லை!

## செய்தியாளர் மாநாட்டில் ரஞ்சன்

கொழும்பு, ஜூன் 2
மக்களுடன் போர்புரிய அரசாங்கம் விரும்பவில்லை. — என்று பெருந்தோட்டத் துறை அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா வியாழனன்று நடைபெற்ற வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் மேலும் சொன்னதாவது;

தேசிய ஒற்றுமைக்கு ஆறாவது திருத்தம் இடைஞ்சலாக இருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டால் அது அகற்றப்படத்தான் வேண்டும்.

கேள்வி: ஆகவே நீங்களும் அத்திருத்தம் ரத்துச் செய்யப்படவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

பதில்: இடைஞ்சல் என்று தீர்மானிக்கப்பட்டால்......... என்றுதான் சொன்னேன். இது பற்றி நாம் இன்னும் கலந்தாலோசிக்கவில்லை. இது குறித்து எனது கருத்தை நான் இன்னும் தெரிவிக்கவில்லை.

ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்வது என்று அரசு தீர்மானித்தால், ஜனாதிபதி அது சம்பந்தமாக அமைச்சரவை அறிக்கை ஒன்றைத் தயாரிப்பார். அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். பத்திரிகையாளர்கள் எல்லாம் பொறுமையாக இருங்கள்.

கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கம் பொறுமையிழந்து உள்ளதே!

பதில்: யாரும் பொறுமை இழக்கலாம். நாம் பொறுமை ஆக இருக்கிறோம். நாம் தான் ஆட்சி நடத்துகின்றோம்.

கேள்வி: எமது பலத்தில் நாம் பேச்சுக்கள் நடத்தி வருகின்றோம் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் கூறுகிறதே.

பதில்: நல்லது. எவரும் பலமான நிலையில் இருந்து தான் பேச்சு நடத்துவார்கள். நாம் பலவீனமாக இல்லை. நாம் பலவீனமாக நாம் என்ன செய்து விட்டோம்?

### அரசுக்கு திருப்தி

கேள்வி: அரசுடனான பேச்சுக்கள் பற்றி விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குத் திருப்தி இல்லையே......

பதில்; அப்படிச் சொல்வது கூடாது. பேச்சுக்கள் திருப்திகரமாக நடைபெறுகின்றன என்பதே அரசின் அபிப்பிராயம்.

கேள்வி: அரசு தங்கள் மீதான அணுகு முறையை மாற்றியிருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் கூறுகிறதே......

பதில்: எந்தக் குழுவுடனான எமது அணுகு முறையில் மாற்றமே இல்லை. எல்லோரும் எமது பிரசைகளே. எல்லை தாண்டிப் போனால் நாம் 'பெரியதடி' யைப் பாவிக்கவேண்டி இருக்கும். ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்துடன் அப்படித்தான் நடந்து கொண்டோம். உங்கள் மகன் மீது நீங்கள் அப்படிச் செய்யமாட்டீர்களா?

கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கம் மீதும் 'பெரியதடி' யைப் பாவிக்கப் போகிறீர்களா?

பதில்: அதற்குத் தேவை இல்லை. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமைப்பீடம் தங்கள் அடிமட்ட உறுப்பினர்கள் மீது, 'பெரிய தடி'யைப் பாவிக்க வேண்டும்.

கேள்வி: இன்னும் அவர்கள் இதைச் செய்யவில்லையே?

பதில்: அவர்கள் என்ன செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது.

கேள்வி: அரசு இதனை எவ்வளவு காலத்துக்குப் பொறுத்துக் கொள்ளப் போகிறது?

அமைச்சர் [illegible]

தலைப்புலிகள் இயக்கம் எவ்வளவு காலத்துக்கு அடிமட்டப் போராளிகளின் செயல்களைப் பொறுத்துக் கொள்ளப் போகிறது?

செய்தியாளர்: அது எமக்குத் தெரியாது.

அமைச்சர்: ஆத்திரமூட்டும் கேள்விகளைக் கேட்க வேண்டாம்.

கேள்வி: பலர் இக்கேள்விகளை எழுப்புகின்றனரே?

பதில்: மக்களுக்காகப் பேசுபவர்கள் அரசியல்வாதிகள்: பத்திரிகையாளர் அல்லர். அரசியல்வாதிகளுக்கு பிரச்சினைகள் தெரியும்; விளங்கியும் கொள்வர். கொலைகள், யுத்தம் ஆகியவற்றை அவர்கள் விரும்பவில்லை. இரத்தத்தில் நீச்சலடிக்கச் சிலர் விரும்புகின்றனர்.

கேள்வி: இராணுவம் இவை பற்றி என்ன நினைக்கிறது?

பதில்: இராணுவம் என்ன நினைக்கிறது என்பது பற்றி நான் சொல்ல முடியாது. நாம்தான் இராணுவத்தை சரியான முறையில் வைத்திருக்க வேண்டும்.

### சண்டையை விரும்பவில்லை

கேள்வி: ஜே. வி. பி. யுடனும் இந்த அணுகுமுறை தானா?

பதில்: இல்லை. மக்களுடன் சண்டை பிடிக்க நாம் விரும்பவில்லை. ஜே. வி. பி. யினர் எம்மை எவ்வளவு தூரம் ஆத்திரமூட்டினார்கள் என்பது தெரியுமா? நாம் வெல்வெட் கையுறைகளைப் பாவித்தோம். ஆனால் அவர்கள் ஆத்திரமூட்டி வந்தனர்.

கேள்வி: யுத்தம் ஒன்றுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராகி வருகின்றதே......

பதில்: எப்படி உங்களுக்குத் தெரியும்?

கேள்வி: பதுங்குகுழிகள் (பங்கர்கள்) சட்டி வருவது போன்ற படங்களை நாம் காட்ட முடியும்.

பதில்: அவற்றை என்னிடம் தாருங்கள். பங்கர்கள் சின்ன வெங்காயம் சேமித்து வைப்பதற்காக இருக்கும்.

கேள்வி: அரசு-புலிகள் பேச்சுக்களில் பிரபாகரன் கலந்து கொள்ளாதது உங்களுக்குக் கவலை தருகிறதா?

பதில்: நான் எதைக் குறித்தும் கவலைப்படுவது கிடையாது. திறந்த மனதுடன் பணி புரிகிறேன்.

வடக்கு – கிழக்கில் அரசின் ஆணை செல்லுபடியாகிறது. கச்சேரிகள், அரசு அலுவலகங்கள், வங்கிகள் இயங்குகின்றன.

கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அனுமதியுடன் தான் அவை இயங்குகின்றன.

பதில்: இல்லை. அப்படிச் சொல்ல முடியாது. (இ-எ)

5ஆம் திகதிக்கு முன்

# தனியார் கல்விநிறுவனங்களை பதிவு செய்யும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 2
இதுவரை பதிவு செய்யப்படாத வடமராட்சி, தென்மராட்சிவலிகாமம், தீவகம் பகுதிகளில் உள்ள சகல தனியார் கல்வி நிறுவனங்களையும், 10 க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டியங்கும் பிரத்தியேக வகுப்புக்களையும் இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக கோண்டாவிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைக் காரியாலயத்தில் பதிவு செய்யும்படி தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது.

தினமும் காலை 10 மணியிலிருந்து 12 மணிவரையும், பிற்பகல் 2.30 மணியிலிருந்து 4.30 மணிவரையும் பதிவு செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

விவசாயத் திணைக்களத்தில்

# கமநல சேவை நிலையங்கள் விதை விற்பனை செய்ய பதிவு

யாழ். மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களை விதை விற்பனை செய்யும் முகவர் நிலையங்களாக விவசாயத்திணைக்களம் பதிவு செய்துள்ளது.

பதிவு செய்வதற்குரிய கட்டணங்களை 12 கமத்தொழில் சேவை நிலையங்களும் விவசாயத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளன.

தரமான நல்ல இன மரக்கறி விதைகள் மற்றும் விதை வகைகளை பெற்று விவசாயிகளுக்கு வழங்க முடியும் என சிரேஷ்ட கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

# குடிமக்கள் படையினர் என்று ஒரு பிரிவு இனி இருக்காது

## அவர்கள் வேறு கடமையில் ஈடுபடுவர்

குடிமக்கள் தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள் இனிமேல் குடிமக்கள் தொண்டர் படையினர் என அழைக்கப்படமாட்டார்கள்.

அதேவேளைஇந்தியப்படையினர் இங்கிருந்து சென்ற பின்னர் யாழ் கோட்டையில் முடங்கி இருந்த குடிமக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த 54 பேரும் இப்போது வேறிடங்களுக்கு மாற்றப்பட்டு விட்டனர்.

இவர்கள் ஆயுதம் எதுவும் இன்றி பொலீஸ் திணைக்களத்தில் வேறு கடமையில் ஈடுபடுத்தப்படலாம் என பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து அறிய வந்துள்ளது.

இவர்களுக்கான சம்பளத்தை அரசு வழமைபோல் இப்போதும் வழங்கி வருகிறது. (ஒ-10)

# தேயிலைத் தோட்டத்திலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

கண்டி, உடுதும்பற தேயிலைத் தோட்டத்தில் இருந்து ஆயுதங்களும் வாகனங்களும் சடந்த செவ்வாய்க் கிழமை பொலீஸாரால் கைப்பற்றப் பட்டன.

அதற்கு முன்னர் சந்தேக நபர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை இடம் பெற்றது.

பின்னர் சந்தேக நபர்கள் ஓடிவிட்டனராம்.

எஸ் எம் ஜி ரைபிள், 5 துப்பாக்கிகள், ஒரு பிஸ்டல், ஒரு நிலக்கண்ணிவெடி, ரவைகள் ஒரு தொகை, இராணுவசீருடைகள், வெடிப்பொருள்கள் முகமூடிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

வாகனங்கள் களவாடப்பட்டவை என்பது விசாரணையில் தெரியவந்தது. (இ-எ)

பரு. கிளிநொச்சி,ஊர்காவற்றுறை ஆகிய

# 3 வைத்தியசாலைகளுக்கு "எக்ஸ்றே" கருவி கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 2
வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 3 வைத்தியசாலைகளுக்கு நவீன "எக்ஸ்றே" கருவிகள் வழங்கப்படவுள்ளன.

பருத்தித்துறை,கிளிநொச்சி, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளுக்கே இந்தப் புதிய "எக்ஸ்றே" கருவிகள் கிடைக்கவுள்ளன.

பிரிட்டன் அரசாங்கத்தினால் வடபிராந்திய வைத்தியசாலைகளுக்கென நன்கொடையாக வழங்கப்படும் உதவிகளில் இருந்தே இந்த "எக்ஸ் றே" இயந்திரங்கள் மேற்படி வைத்தியசாலைக்கு வழங்கப்பட உள்ளன.

இதே வேளை கிளிநொச்சி, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளில் இதுவரை "எக்ஸ் றே" இயந்திரங்கள் இல்லாதிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த "எக்ஸ் றே" இயந்திரங்கள் ஆகஸ்ட் மாதமளவில் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எமது இன்றைய புதிய வெளியீடு:
ராஜசேகர் – சசிகலாவின்
★ நான் மந்திரியானால் ★
(ஒறிஜினல்)
நாளைய வெளியீடு:
பாரதிராஜாவின்
★ என் உயிர் தோழன் ★
(ஒறிஜினல்)
'வீடியோ விமல்'
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். [13183]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# படகுச் சேவை நடத்த நிபந்தனைகள் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2
நயினாதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, அனலைதீவுப் பகுதிகளில் படகுச் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பல நிபந்தனைகளை விதித்துள்ளார்.

நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவோரே படகுச் சேவைகளை நடத்த அனுமதிக்கப்படுவர்.

நிபந்தனைகள் சில வருமாறு:-

★ ஒவ்வொரு படகிலும் படகின்பெயர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். படகு இலக்கமும் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

★ படகில் பயணம் செய்யும் வயது வந்தோருக்கு 4 ரூபாவும், சிறுவர்களுக்கு 2 ரூபாவும் பற்றுச்சீட்டு வழங்கி பணம் அறவிடவேண்டும்,

★ பற்றுச்சீட்டுகள் அனைத்தும் 23-6-90க்கு முன்னர் உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து அனுமதி பெறப்படவேண்டும்.

★ படகுகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலாக பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடாது; தவறுவோர் தண்டனைக்கு உள்ளாவர்.

★ படகில் உயிர்ப்பாதுகாப்பு வலையங்கள் இருக்க வேண்டும்.

★ கூடாரத்தின் வெளிப்புறத்தில் பயணிகளை ஏற்ற முடியாது.

★ அனுமதியின்றி எந்தப் படகும் சேவையில் ஈடுபட முடியாது.

மேற்படி நிபந்தனைகள் அரச படகுகளுக்கும் பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

குருநகரில் ஜனசக்தி உதவி பெறும்

# 13 மீனவர் குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

## மக்கள் வங்கி கடனாக வழங்கியது

குருநகர் மேற்கில் தெரிவான 13 ஜனசக்தி குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை யாழ். பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளை கடனாக வழங்கியுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஜனசக்தி குடும்பங்களுக்குத் தேவையான இந்த உபகரணங்களை யாழ். பிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சபாபதிப்பிள்ளை, பிரதான வீதி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி எம். தியாகராஜா ஆகியோர் வழங்கினர். (ஒ-10)

# இராமோதய சபைகள் நேற்று முதல் செயலிழப்பு

கொழும்பு, ஜூன் 2
நேற்று முதல் சுமார் 4 ஆயிரம் கிராமோதய சபைகள் செயலிழந்தன.

இவற்றுக்குப் பதிலாக சுமார் 14 ஆயிரம் கிராமோ[illegible]குள் நிறுவப்படும்.

[illegible] டலுவல்கள், மாகாணசபை அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

புதிய கிராமோதய சபைகள் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் நிறுவப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# கீரிமலையில் இருந்து வந்த மினிபஸ் மதகில் மோதியது

## 10 பயணிகள் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 2
கீரிமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்று மதகு ஒன்றுடன் மோதி விபத்தில் சிக்கியதில் சாரதி உட்பட பத்துப் பயணிகள் காயமுற்றனர்.

நேற்றுமாலை 2.30 மணி அளவில் பண்டத்தரிப்புக்கும் விளானுக்கும் இடையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இந்த விபத்தில் மூன்று இளம் பெண்களும் படுகாயமடைந்தனர்.

சுமார் பத்துப் பேர் வரையில் காயமடைந்துள்ள போதிலும் ஏழுபேர் மட்டுமே யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# ஆசிரிய இடமாற்றத்தில் புதிய நடைமுறை அமுல்

ஆசிரியர்களுக்கான தற்போதைய இடமாற்ற முறை நீக்கப்பட்டு புதிய முறை அமுல் நடத்தப்பட இருக்கிறது.

இப்புதிய முறையின்படி, சகல பாடசாலைகளிலும் ஆசிரியர் வெற்றிடங்கள் பற்றிய விவரம் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

அதற்கு ஏற்ப, இடமாற்றம் கோரும் ஆசிரியர்கள் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

இத்தகவலை கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கொழும்பில் அண்மையில் நடந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மாநாட்டில் வெளியிட்டார். (ஒ-எ)

# புதிர்ப் போட்டி இன்று

யாழ். மாவட்டத்தில் கோட்ட மட்டத்திலான புதிர்ப்போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு ஒவ்வொரு கோட்டத்திலும் தனித்தனியாக நடைபெறவுள்ளன.

இந்த புதிர் போட்டியை மறைந்த வேங்கை மேஜர் முரளியின் நினைவாக விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பும், நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (உ-9)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சிவானந்த சர்மா

பூநகரியைச் சேர்ந்த பொன்னையாஐயர் சிவானந்த சர்மா 01-06-1990 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரன், பொன்னையா, பாலசுப்பிரமணியம், செல்லம் ஆகியோரின் அன்புத்தந்தையாரும், ஸ்ரீபதி சர்மா, சிவ சர்மா ஆகியோரின் சகோதரரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [02-06-1990] காலை 10-00 மணிக்கு பூநகரி கொல்லக்குறிச்சியில் நடைபெற்று, பூநகரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
கொக்குவில். [13181] பாலசுப்பிரமணியம்

### திருமதி சாமிநாதன் மேரி மாகிறேட்

ஒட்டகப்புலத்தைச் சேர்ந்த திருமதி சாமிநாதன் மேரிமாகிறேட் 28 05 1990 திங்கள் காலமானார்.

இவர் திரு. R. A. சாமிநாதன் [இன்சூரன்ஸ் மறாயன் சேவையர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சமத்தர் சூசைப்பிள்ளை, ஞானம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியம்மா, பெனடிற் செல்லப்பா, அன்னம்மா, பாக்கியம் ஆகியோரின் சகோதரியும், சறோஜா, மோகன் [கனடா], றஜனி [கனடா], பத்மா [ஜேர்மன்], றவி [கனடா], கௌரி [வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியை] ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாயகம் [லண்டன்], ஜெறாட் [கனடா], சந்திரா [கனடா], ராஜசிங்கம் [ஜேர்மன்] ஆகியோரின் மாமியும், கிறிஸ்ரி, ஜெறி, ஸ்ரனி, நிமல்அன்ரெனி, கிறிஸ்ரோப்பர், றஜித்தா, றஜிவி ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஒட்டகப்புலம் அமல உற்பவ மாதா சேமக்காலையில் 02-06-1990 சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒட்டகப்புலம், தகவல்:
வசாவிளான். (13182] சாமிநாதர்

### சூசைப்பிள்ளை நோபட்

சூசைப்பிள்ளை நோபட் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, மரியப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திரேசம்மாவின் அன்புக் கணவரும், கனியூட், நீக்கிலஸ், லோறன்ஸ், டொன் பொஸ்கோ, றெஜினோல்ட், மரினா ஆகியோரின் அன்புத் தந்தையும், லில்லி, அழகுதாஸ், அல்போன்ஸ் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் 6-2-90 மாலை 4.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
சூ. அல்போன்ஸ்.
மவுண் காமல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (3690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்-சித்தன்கேணி

பௌதிகம் - திரு. க. கணேஷன்
இரசாயனம் - திரு. BAR
தாவரவியல் - திரு. பாலா
விலங்கியல் - திரு. ஞானம்

சஞ்சீவி சஞ்சிகை

02 - 06 - 1990 சனிக்கிழமை

நாவலர்
பண்டத்தரிப்பு & சித்தன்கேணி
ஆண்டு 11
கணிதம்
திரு. ப. குணம்
"புள்ளிவிபரவியல்"

## கருத்துக் கலசம்

மயூரா

### வேண்டும் ஆராய்ச்சி

நெற்பயிர் ஆய்வுகளை நடத்துவதற்காக கிளிநொச்சி மூன்றாம்வாய்க்கலில் உள்ள நாற்பத்தெட்டு ஏக்கர் வயல்நிலம் ஒதுக்கப்படும் என்பது ஒரு செய்தி.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீன்பிடித்துறையை விஞ்ஞான ரீதியில் அபிவிருத்தி செய்ய உதவும் வகையில் மீன்பிடி அபிவிருத்தித் தகவல் நிலையம் ஒன்றை 'போரூட்' அமைப்பு நிறுவி உள்ளது என்பது அடுத்த செய்தி.

இவை போல, தமிழ்ப் பகுதிகளின் கைத்தொழில்கள், பனைவளம், நீர்வளம், உப உணவுச் செய்கை, தானியச் செய்கை, கால்நடை வளர்ப்பு போன்ற பல துறைகளுக்கும் ஆராய்ச்சி நிலையங்கள் தேவை.

தமிழ்ப் பகுதிகளின் பொருளாதாரத்தை நல்ல அடித்தளத்தில் நிறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. 'மணிஓடர்' பொருளாதாரம் தமிழர்களைக் கைவிட்டுப் பல காலமாயிற்று. இப்போது 'வெளிநாட்டுக் கரன்ஸி' பொருளாதாரம் நடந்துகொண்டிருக்கிறது. அதுவும் விரைவில் கையகன்று போகலாம்.

எனவே எமது மண்ணின் மூல வளங்களை முழு அளவில் இனங்கண்டு, அவற்றின் பயன்பாடுகளை ஆராய்ந்து, ஆய்வுசெய்து, அவற்றைத் தக்கபடி பயன்படுத்தித் தொழில்வளத்தைப் பெருக்குவதில்தான் தமிழர்களின் பொருளாதார பலம் தங்கி உள்ளது.

இந்த யதார்த்த நிலையை தமிழ்ச் சமூகம் இன்னும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.

அதிகாரத்தை எமது கைக்குப் பெறுவதற்கான போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே – சமகாலத்தில் – பொருளாதார அத்திவாரமும் இடப்பட வேண்டும். இதுவரை மறக்கப்பட்டிருந்த இந்தக் கருத்து இனியாவது அறிஞர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், தொழில் சால்பினர் மனங்களில் பதியவேண்டும்.

தமிழ்ப் பகுதிகளின் பூகோளவியல், பூகர்ப்பவியல், கனியியல் துறைகளில் ஆய்வுகள் முதற்கண் தேவை. எந்தெந்தப் பிரதேசங்களில் பொருளாதார மேம்பாட்டுக்கு உகந்த மூலம் பொருள்கள் உள்ளன என்பது ஆய்ந்து, ஆராய்ந்து இனங்காணப்பட வேண்டும்.

இனங்கண்ட அந்த மூலப் பொருள்களை உச்சக்கட்டத்துக்குப் பயன்படுத்தி எவ்வாறு பொருளியற் பலத்தை மேம்படுத்தலாம் என்பது இரண்டாவதாக ஆய்ந்து அறியப்பட வேண்டும்.

நவீன தொழில் நுட்ப விஞ்ஞான உத்திகளை அறிமுகப்படுத்தி கண்டறியப்பட்ட உற்பத்தித்துறைகளை விஸ்தரித்து, விசாலிக்கலாமா என்பது மூன்றாவதாகத் தேவைப்படுகிறது.

இவற்றுக்கான ஆராய்ச்சி நிலையங்களைத்தொடங்க வேண்டியது ஆரம்பப் பணி. அரசாங்கம் செய்து தரும் என்று கனவு காணாமல் தமிழர்கள் தங்கள் சுய முயற்சியாலும், உழைப்பாலும் தேடிக் கொள்ள வேண்டியவை இவை.

காலத்தைக் கடத்தாமல் கரிசனை கொள்வோமாக?

# மனம் வளர்ச்சி அடைய உதவும் மனித மேம்பாட்டுக் கல்வி முறை

இன்று உலகம் வியக்கும் அளவிற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி வானளாவ வளர்ந்து வருகின்றது. அதன் சாதனையைப் பட்டியல் போட்டால் அதன் நீளம் அதிகரித்துச் செல்கின்றது.

ஆனால் அதே சமயம் மனிதன் நிம்மதியுடன் வாழ வழியேற்பட்டுள்ளதா?

சாந்தி, அமைதி என்பன மனிதனுக்குக் கிடைத்துள்ளனவா?

மனிதனின் புறவளர்ச்சி ஏற்பட்ட அளவுக்கு, அக வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா? போதைவஸ்துக்களும், மன முறிவுகளும், பசிப்போராட்டங்களும் மனித வர்க்கத்தை சின்னாபின்னப்படுத்தி வருவதைத் தடுக்க முடிந்ததா? இல்லையென்றே பதில் சொல்லவேண்டும்.

இத்தகைய நிலைமைக்கு என்ன காரணம்? மனிதனது மேம்பாடுகள் முறையாக வளர்க்கப்படவில்லை என்பதேயாகும்.

'மனம்கெட்டால் மாநிலம் கெடும்'

என்பது ஞான வாக்கு.

எனவே மனிதனது மனம் மேம்பாடு அடைதல்வேண்டும்.

கல்வி வளர்ச்சியேற்பட்டாலும், அது மனிதனது அக வளர்ச்சியைத் தூண்டவில்லை.

இது அவனது பொருட் செல்வத்தை அதிகரிக்கவே துணை செய்தது.

இதனால் மனிதனது உண்மையான குணவியல்பு சரியாக வளர்க்கப்படாதது மட்டுமன்றி அவனது ஆளுமையும், பூரணத்துவப்படவில்லை.

எனவேதான் இன்றைய மனித சமுதாயம் சாந்தியும், மன அமைதியும் இன்றித் தவிக்கின்றது.

எல்லா வகையான அபிவிருத்தியின் நோக்கமும் இறுதியில் மனிதன் நிம்மதியாக மனச்சாந்தியுடன் வாழ வைப்பதற்கேதான் என்பது உண்மை.

ஆனால் ஆராய்ச்சிகள், தொழில்நுட்ப வளர்ச்சி, அபிவிருத்திகள் எல்லாம் வளர்கின்றன. அதே சமயம் மனிதனது மன நிம்மதி, அமைதி, சாந்தி இவைகள் மாத்திரம் வளரவில்லை. மாறாக அழிந்து செல்கின்றது.

இது ஏன் என்பதுதான் நாம் அக்கறையுடன் சிந்திக்க வேண்டிய முக்கியமான அம்சமாகும்.

எனவே இந்நிலைமையை மாற்றியமைப்பதற்கு இன்று பகவான் காட்டும் ஒரே வழி மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தை மாணவரிடையே வேகமாகப் பரப்பவேண்டும் என்பதே.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க வெளியீடான ''விஞ்ஞான முரசு'' சஞ்சிகையின் தை மாத இதழில் வெளியான ''மனித மேம்பாடுகள்'' என்ற கட்டுரை மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.

மனித மேம்பாட்டுக் குணங்களான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பன புகுத்தப்பட்டால் அவனது குணவியல்பு வளர்த்தெடுக்கப்பட்டு அதன் மூலம் மனிதனது முழு ஆளுமையையும் பூரணமாகப் பரிணமிக்க இது பயன்படும்.

மனிதனிடம் இயல்பாகவே தெய்வீகக் குணங்கள் நிரம்பி வழிகின்றன. அதே சமயம் அவனிடம் சிறிதளவு மிருகக் குணங்களும் (Animal Instincts) இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால் இவ்விரண்டு அம்சங்களில் எதை நாம் படிப்படியாக வளர்க்கின்றோம், எதை சிறிது சிறிதாக அழிக்கின்றோம் என்பது நாம் வாழும் சூழ்நிலையிலும் அதன் தாக்கத்திலுமே பெரிதும் தங்கியுள்ளது.

என்றாலும் அவனது குணவியல்பு (Character) தீர்மானிக்கப்படுவது கல்வியின் அடித்தளத்திலிருந்தேயாகும். (The end of Education is Character)

எனவே அவனது குணவியல்பைத் தீர்மானிக்கும் கல்வியில் மனித மேம்பாடுகள் புகுத்தப்பட்டால் அது அவனது குணவியல்பை நிர்ணயித்து இதன் மூலமாக அவனது முழு அளவிலான ஆளுமையே (Personality) இறுதியில் தீர்மானிக்கும்.

எனவே ஒருவனது முழு அளவிலான ஆளுமையைத் தோற்றுவிப்பதில் மனித மேம்பாடுகள் மிகப் பெரும் பங்கை வகிக்கின்றன.

ஆளுமை என்று கூறும்போது மிக முக்கியமான ஐந்து அம்சங்களை அது கொண்டதாக இருக்கும்.

அவையாவன:-

1. தோற்றம்
2. உணர்வு
3. விவேகம்
4. அன்பு
5. ஆத்மீகம் என்பனவாகும்.

இந்த ஐந்து அம்சங்களையும் உருவாக்குவதில் ஐந்து மேம்பாடுகளும் தத்தம் செல்வாக்கைப் பூரணமாகச் செலுத்துகின்றன.

சத்யம் — விவேகத்தை வளர்க்கவும்,

தர்மம் — நன்னடத்தை (Right Conduct) மூலம் தோற்றத்தையும்,

சாந்தி — உணர்வுகளை ஒழுங்குபடுத்தல் மூலம் அமைதியையும்,

பிரேமை — அன்பாற்றலை வளர்க்கவும்,

அகிம்சை — ஆத்மீகத்தை வளர்க்கவும் பயன்படுகின்றது.

### சத்யம்

சத்யம் என்பதன் உண்மையான கருத்தை அறிவதில் நாம் மிகவும் தடுமாறுகின்றோம்.

உண்மையான (சத்யம்) கண்ணாமூச்சியாடுவதில் தனி இன்பம் கொள்கின்றது. மறைந்திருப்பதிலும், மாறுவேடம் கொள்வதிலும் மகிழ்கின்றது.

மனிதன் காணவிரும்பும் உண்மை ஒவ்வொன்றின் மேலும் மனமானது விருப்பு வெறுப்புக்களையும், பேராசைகளையும், கவலைகளையும் அள்ளித்தெளித்துக் கொண்டே இருப்பதனால் உண்மையைத் தேடும் ஒருவன் தூய மனத்தையும், தெளிந்த சிந்தனையையும் கொண்டு இடைவிடாத விசாரணையினால் மட்டுமே சத்யத்தை உணரமுடியும்.

சத்யம் பற்றி விளக்கும் போது 'மாறுதலடையாத நிலைபேறுடைய, அனைத்திற்கும் அடிப்படையான, எக்காலத்திற்கும் மாறாத ஒரே தன்மையுடன், தொடக்கமும் முடிவுமில்லாததும் எதுவோ அதுவே 'சத்யம்' என சத்யத்திற்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இலக்கணம் கொண்ட சத்யத்தை எமது விருப்பு வெறுப்புக்களைக் கொண்ட மனத்துடன் இவ்வுலகில் எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. உண்மையில் தூயமனத்துடனும், தெளிந்த சிந்தனையுடனும் ஆழமாக எமக்குள் பார்த்தால் அமைதியின் ஆழத்தில் 'ஆத்மாவை' உணரலாம். இதுவே உண்மை. இதுவே சத்யம்.

### தர்மம்

'மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன்'—

என தர்மம் பற்றி திருவள்ளுவர் விளக்குகின்றார்.

நமது ஆணவத்தை அழித்து, எமது சுயநல நினைவுகளுடனான விருப்பு வெறுப்புக்களை வென்று எம்மிடையே உள்ள விலங்கியல்புகளை படிப்படியாக ஒழித்து எமது உடல் சார்ந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்தி,

'தன் நெஞ்சறிவது பொய்யற்க'—

என்ற நெறிப்படி செயல்படும்போது, அது அறவழி அமைந்து தர்மமாகின்றது. உண்மையில் மனிதனிடம் எத்தனையோ நல்ல தன்மைகளும், பண்புகளும் நிரம்பி இருக்கின்றன.

ஆனால் இன்று நம்மிடையே இருப்பதென்ன? மற்றவர்களிடையே இருக்கும் நல்ல தன்மைகளை மறந்துவிட்டு அவர்களிடம் இருக்கும் கெட்ட தன்மைகளை மட்டுமே நாம் பார்க்கின்றோம்.

அடுத்தவர்களின் நல்ல பண்புகளைப் பேசுவதைவிட்டு, அவரிடம் உள்ள கெட்ட குணத்தை மட்டுமே பெரிதாக்கி விமர்சிக்கும் பண்பு எம்மிடம் வளர்ந்துவிட்டது.

அதே சமயம் எம்மிடையே இருக்கும் கெட்ட பண்புகள் எமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. எமது நல்ல பண்புகளை நாமே பிரகடனப்படுத்தியும் கொண்டே இருப்போம்.

ஒருவனை விரல்காட்டி குறை கூறும்போது, எமது கையின் மூன்று விரல்கள் எம்மை நோக்கி இருக்கின்றன என்பதை மறந்துவிடுகின்றோம்

ஒருவன் இல்லாதவிடத்து அவரைப் பற்றித் தவறாகக் கதைக்கவேண்டாம் எனப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முதல் 'போகவிட்டுப் புறம் சொல்லித் திரியவேண்டாம்'– என ஔவையார் கூறியும், இன்றும் அதை நாம் விட்டோமா?

மற்றவரை குறை சொல்வதில் எமக்குச் சிறிதேனும் நன்மை கிடைப்பதில்லையே, பின்னர் ஏன் சொல்லிக் கொண்டே இருக்கின்றோம்.

உண்மையான மனித மேம்பாட்டுக் குணங்கள் மனிதனிடம் வளர்ந்தால் இவை தானே அழிந்துவிடும்.

மனிதன் தனது நற்சிந்தை, நற்சொல், நற்செயல் என்ற இம் மூன்றின் அடிப்படையில் பிறருக்குச் செய்யும் சேவை தர்மம் ஆகின்றது.

அதாவது பிறரில் வேற்றுமையைக் காணாது, ஒருமைப்பாடு காண்கின்ற ஞானமே தர்மம்.

இது சத்தியத்தை உணரும் போது உருவாகின்றது.

### சாந்தி

சாந்தி என்பது எம்மிடையே இயல்பாக உள்ள அக அமைதியைப் படிப்படியாக வளர்த்தெடுப்பதன் மூலம் உருவாகுவதாகும்.

இத்தகைய புனிதமான அக அமைதியை எமக்கு எவரும் வெளியே இருந்து தரமுடியாது.

இது நாமே நமது முயற்சியால், எமது உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உருவாக்கவேண்டிய தெய்வீகச் சமநிலையாகும்.

எம்மிடையே இயற்கையாக உள்ள இவ்வக அமைதியை வெளிப்படுத்தும்போது இது எமது மனத்தினால் உண்டாகும் விருப்பு வெறுப்புக்களையும், அதனால் ஏற்படும் மன அலைச்சலையும் படிப்படியாக அழித்துவிடுகின்றது.

(மிகுதி அடுத்தவாரம்)

**- நா. புவனேந்திரன் பி. ஏ. -**

# நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்த தாவீது அடிகளார்!

தமிழ் மொழியின் தகைமைசால் சிறப்பைத தமிழினம் கருதிடாக் காலத்தில் 'நும்மொழியின் சான்ற சிறப்பைத் தமிழ் மக்களே இன் இனியே முழுவதாம் உணர்மின்' என வீரமுரசு அறைந்து தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை ஒப்பியல் அகராதியின் ஒப்பற்ற மேதை தவத்திரு. கலாநிதி ஹ. சி. தாவீது (Late Rev. Dr. H. S. David) அடிகளாரைச் சாரும்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ற வள்ளுவனின் வாக்குக்கு வரைவிலக்கணம் தாவீது அடிகள். இவர் பருத்தித்துறையில் தும்பளையைச் சேர்ந்த மாவச்சை என்னும் கிராமத்திலே 1907 – 06 – 28 இல் தாவீதுப்பிள்ளையினதும் அவர் வாழ்க்கைத்துணைவியார் எலிசபெத்து அம்மையினதும் அருந்தவப் புதல்வனாகப் பிறந்தார். இச்சான்றோனை ஈன்று புறந்தந்த தாய் மகிமை பெற்றாள். இவருக்குக் கல்வி ஊட்டியதினால் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அன்னை பெருமையுற்றாள். இவரின் தாய்மொழியான தமிழ் அன்னை பேறு பெற்றாள். ஏன், இவரைப் பெற்ற ஈழத்தாயும் ஈடு இணையற்ற புகழைப் பெற்றாள். இவ்வகையில் இவர் பிறப்பால் நால்வகை அன்னையர் அகமகிழ்ந்தனர்; புகழ்பெற்றனர்.

### கல்வியில் சாதனைகள்

கல்வித்துறையிலே தாவீது அடிகள் ஈட்டிய சாதனைகள் மதிப்பிட முடியாதவை.

இந்த மாமேதை கற்றுப் பெற்ற பட்டங்கள் பல. வரலாற்றுத்துறையில் சிறப்புக் கலைமாணி (B. A. Hons. Lond.) முதற்பிரிவிற் சித்தி அடைந்தார். அத்தோடு பொருளியல், அரசியலுக்

அமரர் கலாநிதி தாவீது அடிகளாரின் ஒன்பதாவது நினைவு தினம் இன்று ஆகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

குரிய தங்கப்பதக்கத்தையும் ஈட்டி ஈழநாட்டிற்கே புகழாரம் பெற்றுக் கொடுத்தார்.

இந்திய ஆரிய மொழிகளில் முதுகலைமாணிப்பட்டமும் (M. A.), தமிழ்மொழியில் கலாநிதி (Ph. D. Lond.) பட்டமும் பெற்றார். மேலும் முப்பத்துமூன்று மொழிகளில் பாண்டித்தியமும் பெற்ற பேரறிஞராக விளங்கினார்.

### தாவீது அடிகளின் ஆளுமை

எழில்மிக்க செவ்விள நிறம், புன்னகைபூத்துப் பொலிவோடு விளங்கும் முகம், ஞானக்குறியாய்த் தோன்றும் வெண்நிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள், எடுப்பான கூரியமூக்கு. ஈகையில் பாரியின் கரங்கள், உருவத்தில் குறுமுனி' ஒருமுறை பார்த்தாலே நெஞ்சில் நிலைத்துவிடும் தோற்றப் பொலிவு தாவீது அடிகளுக்குரியது.



யாழ்நகரின் மூலைமுடுக்குகளிலே குடுகுடுவென வேகமாக நடப்பார். அவரின் பாசத்தின் பிணைப்பால் ஆதரவற்றுப் பரிதவிக்கும் ஏழைச் சிறுவர்கள், அறிவுப்பசிமட்டுமல்லாமல், வயிற்றுப்பசியையும் தீர்ப்பதற்கு அவரை அண்டிச்செல்வார்கள்; சுவாமியின் மரதன் வேக நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓடியோடிப் பின்தொடர்வார்கள்.

துறவியின் இடதுகரத்தில் 'டென்னிஸ்' வீரனைப் பிரதிபலிக்கும் 'றக்கெற்றும்' வலது கரத்தில் மரியாளின் பக்தனைப் பிரதிபலிக்கும் செபமாலையும் இருக்கும். இவ்வாறு தினமும் அறிவுத் தொண்டும், அன்புத் தொண்டும், இளையசந்ததியினரை வழிகாட்டும் நன்நெறித் தொண்டும் செய்து வந்த சளையாத இளைக்காத ஒரு உண்மைத் துறவியாக அவர் வாழ்ந்தார்.

தாவீது அடிகள் தமிழுக்கும், சமூகத்திற்கும், சமயத்திற்கும் ஒப்பற்ற பணிபுரிந்தார்.

1981 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் முதலாம் திகதி இரவு வெறியாட்டத்தில் ஈடுபட்ட அரசபடையினர், யாழ். நூலகத்திற்குத் தீ மூட்டிய செய்தியைக் கேட்டு மனம் பொறாமல் அதிர்ச்சியினால் உயிர் துறந்தார் அடிகள்.

நடமாடும் பல்கலைக்கழகம் ஒன்று நமன் வாய்ப்பட்டது. எல்லாவற்றையும் துறந்த துறவியை யாழ். பொதுசன நூலகத்தின் மேல் கொண்ட அதீத காதல் தாக்கியது.

அறிவொளி அணைந்த செய்தியால் அகிலமும் ஆழ்ந்த துக்கத்திற்குள்ளாகியது. எட்டுக் கோடி தமிழ் மக்களுக்கு இவரின் இழப்பு பேரிழப்பாகும்.

### குணக்குன்று

தாவீது அடிகள் இறை பற்றும் மனுக் குலப்பற்றும் மிக்கவர். எளிமையும் தாழ்மையும் நிறைந்தவர். ஆண்டவரின் அன்பைப் பகிர்ந்தளித்தல் என்ற நோக்கத்துடன் வீதியோரத்திலே வேதனைப்படும் கைவிடப்பட்ட மனித உள்ளங்களை கட்டி அரவணைத்து, மோந்து முத்தமிடும் பழக்கமும், வஞ்சகமில்லாத பிஞ்சுக்குழந்தை உள்ளமும் அவரிடம் இயதபாய் அமைந்திருந்தன.

பணிக்கு இலக்கணம் தாவீது அடிகளே எனின் மிகையாகாது. ஏழைகளின் கல்விக்கு அடிகள் தம்மையே உருக்கி ஒளி ஏற்றினார்.

இவர் மனிதநேயம் மிக்கவர். தம்மை நாடி வருவோருக்கு பிரதி உபகாரம் கருதாமல் அறிவையும், அருளையும், பொருளையும் வாரி வழங்கினார். (அவர் ஆற்றிய தமிழ்ப்பணிகள் பற்றிய விபரம் அடுத்தவாரம்) ★

**- துரை. ஆரோக்கியதாசன் -**
விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானுடம் சாவதில்லை!



- வேல் அமிர்தன் -

சஞ்சீவி சிறுகதை

நடந்த களையோ, சுமந்த களையோ மாத்திரமன்று எனக்கு. நான் சுமார் ஆறு மைல்களுக்கு மேல் நடந்தும் விட்டேன்தான். தோளில் ஒரு சுமையும் கையில் இன்னொரு சுமையுமாக சுமக்க முடியாத சுமைகளோடு இன்னும் நடந்து கொண்டிருக்கின்றேன்.

பொதிச்சுமைகளை விட பொல்லாத மனச்சுமை வலுவாக அமுக்குகின்றது. மனம் வலிக்கின்றது.

ஒரு தடவையா அகதி?... இது மூன்றாவது தடவையல்லவா?...... 1983 இல் கொழும்பு கொட்டாஞ்சேனையில் பல இலட்ச இழப்பு; என் கண்முன்னாலேயே மிகக் கஷ்டப்பட்டுத் தேடிய கலை, இலக்கியக் களஞ்சியத்தின் எரிப்பு.

1987 முற்பகுதியில் குரும்பசிட்டியில் மீண்டுமொரு அழிவு; சகாய நிதி மூலதனத்தில் தோற்றுவித்த கல்வி நிறுவனத்தை விட்டு ஓட்டம். இன்று ஊரெழுவில்...... வீட்டைப் பூட்டியும் பூட்டாததுமாக, உடுத்த ஊத்தைப் பழைய சாரத்துடன் கைக்ககப்பட்ட ஒரு சில பொருள்களைச் சூட்கேஸ்களுள் திணித்தபடி அகதியாக ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருக்கின்றேனே!

திரும்பி உயிருடன் வர முடியுமா? திரும்பி வரும்போது வீடு வீடாக இருக்குமா? வீட்டில் வைத்த பொருள் பண்டம் வைத்த வைத்த இடங்களில் கிடக்குமா? இளைத்திளைத்துத் தேடிய ஒரு சில தேடலும் உருப்படியாகக் கிடைக்குமா?...... நினைக்க முடியவில்லை. மனம் வலிவலியென வலிக்கின்றதே!

ஊழித் தாண்டவத்தின் ஆரம்பமோ? பிரளயத்தின் தொடக்கமோ!...

எங்கும் பயம் - எங்கும் பயங்கரம் - எங்கும் பீதி!

ஹெலியின் ஆரவாரம் - ஷெல்லின் அகோரம் - துப்பாக்கி வேட்டுக்களின் அமளி!

ஆம்! ஒரு அகோர யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் கோர வடிவத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது; தீட்ட முடியாது. புகைப்படக் கருவியுள் அடக்க முடியாது.

எங்கும் அகதி வெள்ளம் - பென்னம் பெரிய அலை, அலையாக பெருக்கெடுத்தபடி குழந்தைகள், வயோதிபர், கர்ப்பிணிகள், நோயாளிகள் - இப்படி, ஆயிரம் ஆயிரமாக அள்ளுப்பட்டு - தள்ளப்பட்டு - அல்லற்பட்டு......

அப்பப்பா! எதைச்சொல்லுவது? எப்படிச் சொல்லுவது? எவருக்குச் சொல்லுவது?

வாழையடி வாழையாக நிலமும் புலமுமாக, வசதியும் வளமுமாக வாழ்ந்த பூர்வீகக் குடிமக்கள் சொத்துப் பத்துக்களைத் துறந்து, வீடு வாசல்களை பிரிந்து கண்ணீரும் கம்மலையுமாக குறி தவறிய கணைகளாய் கால் கொண்டு செல்லும் தேசம் வரை போய்க் கொண்டே இருக்கின்றனரே!

வழியெல்லாம் புழுதி - புகைமண்டலம் - சூடர் விட்டெரியும் தீப் பிழம்புகள். அதர் வெடிச் சத்தம் - கெந்தகத் துர்நாற்றம். அழிவுக் கோலங்கள் - அலங்கோலங்கள் அல்லோல கல்லோலங்கள். தகர்ந்த இல்லங்கள் - சரிந்த கட்டிடங்கள் - தீப் பற்றி எரியும் குடிசைகள்.

எனக்கு நேர் முன்பாக - சுமார் நூறு யாருக்கு அப்பால் ஒரு பென்னம் பெரிய ஷெல் விழ்ந்து வெடிக்கின்றது. - சிதறிப் பறக்கின்றது. நான் அந்த அரசமர மறைவில் ஒதுங்கியதால், தப்பிப் பிழைத்தேன். இல்லாவிட்டால், சின்னாபின்னமாகி, சிதறு தேங்காய் அங்கம் அங்கமாய் சிதற அடிபட்டிருப்பேன்.

இப்படி, ஒரு ஷெல்லா? ஒரு நூறா? ஓர் ஆயிரமா? ஆயிரக் கணக்காக அடுத்தடுத்து......என்ன பயங்கரம்!

இந்த ஷெல்கள் வேறு விதம் - வேறு ரகம். பயங்கர ஓசையோடு வெடித்து - வீறிட்டு விசையாக முன் சென்று, மீண்டுமொரு தடவை பயங்கர சத்தத்துடன் வெடித்து, இரட்டிப்பு வேகத்தில் முன்சென்று இலக்கினைத் தவிடுபொடி ஆக்குகின்றன.

ஏன் இந்த ஷெல்தாக்கல்?... யார் யாரினைத் தாக்குகின்றனர்?... எப்போது ஓயுமிந்த வெறியாட்டம்?...... மீண்டும் சமாதானம் - அமைதி-சாந்தி கிட்டாதா?...

ஒன்றும் தெரியவில்லை எனக்கு. ஒன்றும் விளங்கவும் இல்லை. நான் சாதாரணன். அரசியல் ஈடுபாடு இல்லை எனக்கு. சமரின் உட்சூத்திரம் எனக்கு எப்படி விளங்கும்?

ராஜ வீதி இன்று ராஜ வீதியேதான்! இந்நெடும் வீதியில் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் - அகதிகளை அடைந்தபடி சைக்கிள்கள் - மோட்டார் கார்கள் - வான்கள் - றக்டர்கள் - லொறிகள்.

நெடும் வீதி நிரம்பப் பல்லாயிரக்கணக்கான அகதிகள். இரத்தக் காயங்களோடு சிலர். அழுதழுது நீர் சொரியும் கண்களோடு பலர்.

எனக்குப் பின்னே வந்து கொண்டிருந்த நிறைமாதக் கர்ப்பிணி அறிவு சோர்ந்து - அயர்ச்சியாகி - மயங்கி விழுந்து விட்டாள். அவளின் கைக்குழந்தை மண்டை அடிபட எறிபட்டுக் காயம். ஜன வெள்ளம் திரளுகின்றது. முதலுதவி கைமருந்து வழங்கப்படுகின்றது.

ஐய்யய்யோ! சைக்கிள் ஹான்ரிலில் குழந்தையையும் பாரில் மனைவியையும் கரியரில் தாயையும் சுமந்து வந்த 'சுமைதாங்கி' பலன்ஸ் இழந்து விழுந்து விட்டானே! குழந்தை வீதியோரம் - மனைவி ஹான்டிலில் கொழுவியபடி - தாய் சைக்கிள் கிடக்கும் இடத்திலிருந்து பல யார் தூரத்தில், இப்படி ஒரு அவலத்தை இதற்கு முன் நான் கண்டதில்லை. என்ன கொடுமை! என்ன அவஸ்தை! மக்கள் வெள்ளம் திரளுகின்றது. அவசர சிகிட்சைகள் அளிக்கப்படுகின்றன......

நான் எங்கே போகின்றேன்?!......

நான் எங்கே போவது? நானொரு அனாதை. உற்றார், உறவினர் என இந்தப் பகுதியில் எனக்கு யார்? .... இருந்தும், நடக்கின்றேன், நடந்து கொண்டே இருக்கின்றேன் - மரண பயத்திலிருந்து விடுபட.

இந்த மக்கள் எங்கே போகின்றார்கள்? இவர்களுக்கு எங்கே பாதுகாப்பு உண்டு?

'அச்சுவேலி, புத்தூர், மட்டுவில், சாவகச்சேரிப் பகுதிகளில் பிரச்சினை இல்லை. அங்கே போனால் ஆறுதல்' இப்படி கதை அடிபடுகின்றது.

'என்னப்பா செய்வது? தமிழனின் தலைவிதி இது. சொந்த நாட்டில் அகதிநிலை அபலைநிலை - வீட்டையே விட்டு ஓடும் நிலை'.

'ஓட்டமா? அண்ணை நாங்க பட்டபாடு... தோட்டத்துள் விழுந்து - முள்ளுக் கம்பி வேலியிக்காலை பூந்து - இங்கை பாருங்கோ! முதுகெங்கும் புண் - இரத்தக் கறை - வலி - எரிவு... அட கடவுளே; பட்டபாடு போதுமெண்டால் போதும்!'

'அப்பு நாலடிவேலி பாய்ந்திருக்கிறார் அண்ணை. நம்ப முடியுமா? அவன்கள் வளவுக்குள் வந்ததுக்குப் பிறகு தானே ஓட்டம். ஓடமுடியுமா? நாய் ஓட்டம்தான்!'

'கோதாரி வருவான்கள் கண்டநின்றபடி சுடுகின்றாங்கள். அப்பாவி மக்களை சுட்டு விழுத்துவதா? இந்த அநியாயம் எப்ப ஒழியுமோ?...'

'எல்லாம் எங்களாலை வந்த வினை. எங்களுக்குள்ளை ஒற்றுமை உண்டே? முற்பத்திரண்டு பிரிவு... இது போதாது? இன்னும் வேணும்'.

இப்படி; கலந்துரையாடி - கருத்துப் பரிமாறி மக்கள் அங்கலாய்க்கின்றனர். இவர்களின் உரையாடலுக்குக் காது கொடுக்க அமைதியேது, ஆறுதல் ஏது?

எனது பிரச்சினை தனி, எனது உடலிலும், மனத்திலும் மாத்திரம்தான் சுமைகள் அல்ல. சுவாசத்திலும் கோளாறு உண்டு.

எனக்கு ஈளை - இழுப்பு! ஆஸ்மா நோய்!

வழமையாய் பக்கற்றுள் பத்திரமாய் இருக்கும் மாத்திரைகளை அவசரத்தில் - அந்தரத்தில் முற்று முழுதாக மறந்து விட்டேன். மாத்திரை டப்பியை மறந்தது எப்படி என்பது எனக்கே புரியவில்லை. மருந்தை மாத்திரமா மறந்தேன்? றலிச் சைக்கிளையுமல்லவா அடியோடு மறந்துவிட்டேன்.

சைக்கிளும் கையுமாகச் சுற்றும் நான் சைக்கிளைப் பூட்டிப்போட்டு வரவும் மறந்துவிட்டேன். இனி எனது சைக்கிள் எனக்குக் கிடைக்குமா?

தோட்டங்களுக்கால் நீர்வேலி றோட்டில் ஏறியநான் காசிப்பிள்ளை கடைசிச்சந்தியைக் கடந்து, குறுக்குப் பாதையால் ராஜவீதிக்கு வந்து, ராஜவீதி சிறுப்பிட்டி சுடலைப் பகுதியைத்தாண்டி கூட்டுறவுக் கடையையும் தாண்டி... மேலே செல்லமுடியாமல், இளைத்து - தாண்டித் தாண்டி மெல்லச்செல்லுகின்றேன்.

ஈளை ஆரம்பித்துவிட்டது. பலமாக இரைச்சலோடு இழுப்பு ஆரம்பித்துவிட்டது.

இனி என்னால் ஏலாது! வீதியோரக் குந்து மதிலில் குந்திவிட்டேன்...

குந்தியதுதான் எனக்குத் தெரியும். பிறகு கண் விழித்து எழும்பியது இரண்டுமணிக்கு.

இவ்வளவு நேரமாக நான் படுத்திருந்தது சிறுப்பிட்டி கமக்காரன் ஒருவரின் சாப்பாட்டு மேசை மேல்.

என்ன நடந்தது என ஆவலோடு விசாரிக்கின்றேன்.

நான் அறிவுமயங்கி விழுந்ததாகவும், கமக்காரன், வீட்டுக்காரர் என்னைத் தூக்கிச் சென்று, பரிகாரம் செய்ததாகவும் சொல்லப்பட்டது. கமக்காரனின் இரண்டாவது மகள் சித்தவைத்தியராம். அவர் ஆஸ்மா ஊசி போட்டு எனது இழுப்பைத் தணித்ததாகவும் சொல்லப்பட்டது.

சிறுப்பிட்டி கமக்காரன் வீடு திட்டமிட்டு கட்டப்பட்டதொன்று. தேவை ஏற்பட ஏற்பட விஸ்தரிக்கப்பட்ட வீடு. இன்று வீடு நிரம்ப அகதிகள். ஐம்பதினைத் தாண்டிய எண்ணிக்கையினர் எப்படியோ சமாளித்து ஆறுதலடைகின்றனர்.

வீடு நிரம்ப அகதி விருந்தினர். பெரு மனத்துடன் கமக்காரன் வந்தோரை வரவேற்று, ஆதரிக்கின்றார். இந்த வித்தையைச் சீரணிக்க முடியாமல், திக்குமுக்காடிக் கொண்டிருந்த வேளை,

'தம்பி என்ன யோசனை? இது உங்கடை வீடு' நாங்கள் வேறையாரோ அல்ல. உங்கடை வீட்டாரே நாங்க. பயப்பிடத் தேவையில்லை...' என்று கமக்காரன் ஆறுதற்படுத்துகின்றார்.

'தம்பி ஹோர்லிஸ். தெம்புக்குக் குடியுங்கோ'. வீட்டுக்காரத் தாய் எனக்கு ஹோர்லிஸ் கரைத்துவந்து குடிக்கத் தருகின்றார்.

எனக்கு ஹோர்லிஸ் தந்ததன்பின், அறைமூலையில், தோள்மூட்டில் காயங்களோடு நோவலியின் அவஸ்தையால் முனங்களோடு கிடக்கும் மகனுக்கு ஹோர்லிஸ் கொடுக்கப்படுகின்றது. எனக்கு ஆச்சரியத்திற்குமேல் ஆச்சரியம். சொந்த மகனை விட விருந்தாளி முக்கியமா? ஆவலோடு,

'தம்பிக்கு என்ன? ஏன் பத்துக் காயம்? என்ன நடந்தது?' எனக் கேட்கின்றேன்.

கமக்காரன் சொல்லுகின்றார், 'அவன் எனது இளைய மகன். நேற்று எங்கடை பசு மாட்டிலை பால் கறந்து கொண்டிருக்கையில், தோட்டத்தில் விழுந்து வெடித்த ஷெல்லொன்று பசுவின் குடலைக் கிழித்து, அவனின் தோள்பட்டையைக் காயப்படுத்திவிட்டது... அதைப் பற்றி நீங்க யோசிக்கவேண்டாம். அவனுக்குக் காயம். அவன் வருத்தக்காரன் எண்டு யோசிக்கவேண்டாம். எனக்குக் கஷ்டமெண்டு நினைக்க வேண்டாம். எனக்கு பிள்ளை குட்டிகள் என்று யோசிக்க வேண்டாம். வீடு நிரம்ப அகதிகள் - ஆட்கள் என யோசிக்க வேண்டாம். வீட்டிலை இன்று நீங்க ஐம்பத்தொராவது ஆளென்பது உண்மைதான். ஆனால் ஆபத்திலை உதவுதல் எங்கடை கடன். உங்களை எங்களடியில் கொண்டுவந்தது எங்கடை செல்லச்சந்நிதியானின் கருணை. நான் உங்கடை தகப்பன்போலை. பிரச்சினை தீரும்வரை ஒரு பயமும் இல்லாமல் உங்கடை வீடாக நினைத்து, எங்களோடு தங்கலாம்' என கெஞ்சிக்கொண்டிருக்கையில், 'தம்பி நீங்க இங்கையே தங்க வேணும்' என அந்த வீட்டுக்கார அம்மாவும் விண்ணப்பிக்கின்றார்.

எனக்கு இந்தக் காருணியம் பேரதிர்ச்சியைத் தருகின்றது. இளைய மகனின் முனக்கம் - முணுமுணுப்பு தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டே இருக்கின்றது. வாய் தன்னை மறந்து தன்வாரியாக, 'மானிடம் சாவதில்லை' என உச்சரிக்கின்றது.

[யாவும் கற்பனை]

## பொது அறிவுப்போட்டி இல. 41

1. ஒரே சமயத்தில் எட்டு றொக்கெட்டை ஏவிய நாடு ..? ... ... ... ... அமெரிக்கா / ரஷ்யா
2. முதல் முதல் தோன்றிய நாகரீகம்...? ... ... ... நைல்நதி / சிந்துவெளி
3. உலகில் புகழ்பெற்ற சுதந்திரச் சிலை உள்ள நகரம்...? ... ... ... நியூயோர்க் / பாரீஸ்
4. பூமியைத் தவிர வேறு எந்தக் கோளில் கடல் இருக்கிறது...? ... ... ... வீனஸ் / யுப்பிட்டேஸ்
5. அண்மையில் ஒன்றாக இணைந்த இரு நாடுகள்...? ... ... ... ... வட.தெற்குஜேர்மன் / கிழக்கு. மேற்கு ஜேர்மன்
6. எவரெஸ்ட் மலை உச்சிக் குப்பைகளை ஏலம் விடப்போகும் நாடு...? ... ... ... ... அமெரிக்கா / ஜப்பான்
7. இறந்தபின் ''பிரமிட்'' டினுள் வாழ விரும்பும் நடிகர் யார்...? ... ... ... மார்லன் பிராண்டோ / ரிச்சட் பேர்ட்டன்
8. யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ஐரிஷ் பிரசை .? ... ... ... லோங் அடிகளார் / கேர்னல் ஒல்கொட்
9. பதினாறு சந்திரன்களை உடைய கிரகம்...? ... ... ... வியாழன் / வெள்ளி
10. ''தங்கத் தாத்தா'' என அழைக்கப்படுபவர்.. ? ... ... ... ... சோமசுந்தரப்புலவர் / குமாரசாமிப்புலவர்
11. உலகில் அதிகளவு மக்கள் தொகை கொண்ட நகரம்...? ... ... ... ... டோக்கியோ / பீகிங்
12 பிறை எந்த நாட்டின் தேசியச் சின்னம்...? ... ... ஈரான் / பாகிஸ்தான்

பெயர்:- ..................................................

விலாசம்:- ..................................................

..................................................

பொது அறிவுப்போட்டி இல: 41
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 13 - 06 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

**பொது அறிவுப்போட்டி இல. 40 சரியான விடைகள் வருமாறு;**

1. நேபாளம் 2. ஔவையார் 3. கிளியோப்பட்ரா 4. மக்கள்படை 5. றோம் 6. தொற்றுநோய் 7. பாகிஸ்தான் 8. சக்கரவாகம் 9. ஆஸ்திரேலியா 10. இந்தியா 11. சமயம் 12. சி. கணபதிப்பிள்ளை.

# உமியில் இருந்து சிமெந்து உற்பத்தி

## கட்டுமானத்துறையில் புதிய சாதனை!

உலகில் நெல் விளையும் நாடுகளின் அரிசி ஆலைகளில் ஆண்டுதோறும் சுமார் 8 லட்சம் தொன் உமி உற்பத்தியாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஒருபகுதி எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டாலும் பல நாடுகளிலும் உமியில் பெரும்பகுதி வீணாக்கப்படுகிறது.

சொல்லப்போனால் இந்த உமியைத் தீர்த்துக்கட்டுவது சில நாடுகளில் ஒரு பிரச்சினையாக உள்ளது.

இவ்வித நிலையில் உமிசிமெந்து தயாரிப்பு, இப்பிரச்சினைக்குத் தீர்வாக விளங்க முடியும் என்று கருதப்படுகிறது.

வளரும் நாடுகள் பலவற்றில் விலைகுறைந்த கட்டுமானப் பொருள்களுக்குக் கடும் பற்றாக்குறை உள்ளது.

நல்லவேளையாக இந்த நாடுகளில் பலவும் அரிசி விளையும் நாடுகளாக உள்ளன.

நெல் உமியானது இதைத் தீர்த்துக்கட்டுகிற பிரச்சினைக்கும், கட்டுமானப் பொருள் பிரச்சினைக்கும் தீர்வுகாண உதவுவதாக உள்ளது.

பிரிட்டனின் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் [Building Research Establishment] வெளிநாட்டு உதவிப் பிரிவினர் ஆபிரிக்காவில் உள்ள மாலாவி, சியர்ரா லியோன், தென் அமெரிக்காவில் உள்ள குயானா மற்றும் இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த கட்டுமானப் பொருள் நிபுணர்களுடன் சேர்ந்து உமிசிமெந்தை உருவாக்கினார்.

### சிறந்த கலவை

உமிசிமெந்தைத் தயாரிப்பதற்கான முதற்படியாக உமியானது எரி உலை ஒன்றில் போட்டு எரிக்கப்படுகிறது. இதன்மூலம் கிடைக்கும் சாம்பல் அரைவை ஆலையில் மிக நைசாக பொடியாக்கப்படுகிறது. இத்துடன் சுண்ணாம்பு சேர்க்கப்படுகிறது.

இருபங்கு உமிச் சாம்பலுடன் ஒருபங்கு சுண்ணாம்பைச் சேர்த்தால் நல்ல உமிசிமெந்து கிடைப்பதாகப் பரிசோதனைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

ஒருபங்கு உமிசிமெந்துடன் மூன்றுபங்கு மணலைச் சேர்த்தால் நல்ல கலவை கிடைக்கும்.

இக்கலவையைக்கொண்டு குறைந்த செலவிலான வீடுகளைக் கட்டுவதற்கான செங்கற்களை அல்லது கொங்கிறீட்கல் தயாரிக்கலாம்.

ஆபிரிக்காவில் உள்ள மாலாவி நாட்டில் உமிசிமெந்தைத் தயாரிப்பதற்குப் பரீட்சார்த்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அந்நாட்டில் உருக்கு விலை அதிகம்.

எனவே உமியை எரிப்பதற்கான எரி உலையை [Incinerator] உருக்கைக்கொண்டு தயாரிப்பதற்குப் பதிலாக அங்குள்ள பொருள்களையே பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

பிரிட்டிஷ் கட்டட ஆராய்ச்சி நிறுவன நிபுணர்கள் சூளையில் தயாரிக்கப்பட்ட செங்கற்களைக் கொண்டு எளிய முறையில் குறைந்த செலவில் எரி உலையைக் கட்டினார்கள். நல்ல சாம்பலைப்பெற சிறந்த அளவிலான வெப்ப அளவை அறிய அவ்வப்போது உலைக்குள் வெப்பம் கணக்கிடப்பட்டது.

நிபுணர்கள் இங்கு உருவாக்கிய யூனிட்டில் மேற்புறத்தில் தொடர்ந்து உமி சேர்க்கப்பட, அடிப்புறத்தில் இருந்து தொடர்ந்து சாம்பல் பெறப்பட்டது.

இச்சாம்பலை நைசான பொடியாக்க தொழிற்சாலைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிற அரைவை ஆலை (Ball Mill) தேவை. இதற்கு மாற்றாக அங்குள்ள மாவு ஆலைகள் பயன்படுத்திப்பார்க்கப்பட்டன.

ஆனால் அதில் வெற்றி கிட்டவில்லை. ஆட்டுக்கல், முறையும் பயன்படுத்திப் பார்க்கப்பட்டது. அதுவும் பலனளிக்கவில்லை.

உமி சிமெந்து எதிர்பார்த்த அளவில் தரமானதாக உள்ளதா என்று அறிய மாலாவியில் பிளாண்டையர் நகரில் பரிசோதனை நடத்தப்பட்டது.

நிபுணர்கள் சூளையில் தயாரிக்கப்பட்ட செங்கற்களைக் கொண்டு ஒரு பரீட்சார்த்த சுவரைக்கட்ட உமிசிமெந்தைக் கலவையாகப் பயன்படுத்தினர். சுவரின் ஒரு பகுதிமீது உமி சிமெந்து பயன்படுத்தி பூச்சு அளிக்கப்பட்டது.

### பரீட்சார்த்த கட்டுமானம்

இந்த பரீட்சார்த்த சுவர் கட்டப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. இப்போதும் சரி அந்தச் சுவர் எவ்விதத்திலும் பாதிப்பு இன்றி அப்படியே உள்ளது.

இதேமுறையைப் பயன்படுத்தி அதாவது உமி சிமெந்தைக் கொண்டு ஒரு பரீட்சார்த்தக் கட்டடம் கட்ட இப்போது திட்டமிடப்பட்டுள்ளது. ★

### எதிரி

வானத்து
நட்சத்திரங்களே
நீங்கள்
எப்போதும்
கண்சிமிட்டுகிறீர்களே
உங்களில் சிலருக்கு
கண்ணில் நோயா?
அல்லது பூமியில் உள்ள
பெண்களைப் பார்த்து
அப்படிச் செய்கிறீர்களா
அப்படியானால் நீங்கள்
எங்கள் எதிரி.

- ஆதி

### விளம்பரம்

என்றும்
என் தவறுகளை மட்டுமே
கண்டு பிடித்து
மணிக்கணக்காக
விமர்சிக்கும்
பெற்றோரும்
உற்றோரும்
இன்று மட்டும்
வந்தவர்களிடம்
என் அருமை
பெருமைகளை
விவரித்துக்
கொண்டிருந்தனர்.
'காக்கைக்கும் தன்குஞ்சு
பொன்குஞ்சு' அல்லவா
என நினைத்து
பெருமைப்பட்டேன்......
பின்னர்தான்
புரிந்தது!
கல்யாணச் சந்தையில்
என் விலையை
நிர்ணயிக்க நடத்திடும்
வியாபாரக் கூட்டத்தின்
விளம்பரம் என்று!

- துதிகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண நாகரிகம்!

● யாழ்ப்பாணத்து நாகரீகம் குளத்தங்கரை நாகரீகம்.

கங்கை, யமுனை, காவேரி, வையை, நைல், யூபிரிட்டீஸ், ரைகிறீஸ், யங்ஸ்ரிசியாங் நதிகளின் நாகரீக மேம்பாடனைய நாகரீகம் நம்மவர்கள் நாகரீகம்.

எங்கள் பகுதிகளில் உள்ள குளங்களின் எண்ணிக்கையையும் அவற்றின் உபகரிப்பும் அதிகம். குளங்களை வரட்சி அடையவிடுவதால் நமது நாகரீகமும் வரட்சியாகிறது. குளங்கள் வற்றாத செல்வமாயிருந்தால் எங்கள் பகுதி வளஞ்சிறக்கும்.

வெள்ளைக்காரர் வேண்டும் என்று விஷமத்தனத்தில் குளங்களைப் புறக்கணித்தனர். நாங்களும் அடிவருடிகளாய்க் குளங்களைக் கவனியாது விட்டு வளஞ்சுருங்க வாழ்கிறோம்.

— மில்க்வைற் செய்தி —

## 354 சதவீத அதிகரிப்பு!

☐ உலகிலேயே மக்கள் தொகை மிக வேகமாக அதிகரித்து வரும் 12 நாடுகளில் பஹ்ரைன் நாடும் ஒன்றாகத் திகழ்கிறது.

இங்கு பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை 354 சதவீதம் அதிகரித்து இருக்கிறது.

இப்போது மக்கள் தொகை 5 லட்சத்து 3 ஆயிரத்து 22 ஆக உள்ளது.

இதில் 3 லட்சத்து 36 ஆயிரத்து 165 பேர் பஹ்ரைன் நாட்டினர் ஆவார்கள். குழந்தை பிறப்பு அதிகரிப்பும், இறப்பு குறைவும் இவ்வாறு மக்கள் தொகை அதிகரிப்புக்கு காரணம் என்று கூறப்படுகிறது. ★

## இறைவன் நிலை

☐ நதிகளின் தண்ணீரெல்லாம் சமுத்திரத்தை அடைவதற்கு முன்பாகப் பலவிதமான சுவைகளுடன் இருக்கும்.

ஆனால், சமுத்திரத்தை அடைந்தவுடன் ஒரே உப்பாகத்தான் இருக்கும். அதுபோல வழிபாட்டு முறைகள் பலவாக இருந்தாலும், அந்த வழிபடும் முறையில் பலவித அனுபவங்கள் இருந்தாலும் கடைசியாக இறைவனுடைய நிலையை அடைந்தவர்களுக்கு ஒரே ஆனந்தம் தான் இருக்கும்! ★

## தாகம் தணிய..

☐ படுக்கையில் படுத்துக்கொண்டு தண்ணீர் குடித்தால் ஆகாது.

அழுக்கற்ற துணியினால் வடிகட்டின தண்ணீரைத் தவிர மற்ற தண்ணீரைக் குடிக்காதிருக்கும்படி கண்ணபிரான், உத்தவருக்கு உபதேசித்திருக்கிறார்.

நின்ற நிலையில் நீர் அருந்தக்கூடாது. உட்கார்ந்து மும்முறை மூச்சுவிட்டு அருந்த வேண்டும்.

அதனால் தாகம் தணியும். ஜீரண சக்தியும் அதிகமாகும். ★

## மன்னிக்கும் மனப்பான்மை

☐ தீமை செய்தவர்களை மன்னித்து விடுவதே சிறந்த செயலாகும்; பெருமையும் ஆகும்.

பழிக்கும் பழி வாங்குவது நியாயம் என்று அறிவாளிகள் சொல்ல மாட்டார்கள்.

பழிக்குப் பழி வாங்குவது நியாயம் என்று காரணத்துடன் சொல்ல எவராலும் முடியாது.

ஒரு சமயம் பழிக்குப் பழி வாங்குவது நியாயம் என்று தோன்றினால் அப்போதும் மன்னித்து விடுவதுதான் மிகவும் பெருமையாகும். ★

## பாபங்கள் பறந்தோட...

☐ கைகொட்டிக்கொண்டு இறைவனுடைய திருநாமத்தை ஓதுங்கள்.

கைகொட்டும் பொழுது மரத்தின்மீதுள்ள பறவைகள் பறந்தோடிவிடுகின்றன.

சரீரம் என்னும் மரத்தின் மீது பாபம் என்னும் பறவைகள் அமர்ந்திருக்கின்றன.

இறைவனுடைய திருநாமத்தைக் கைகொட்டிக்கொண்டு உச்சரிக்கும்பொழுது பாபங்கள் அனைத்தும் பறந்தோடிப் போகின்றன.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# விலை போகாத படைப்புக்களை விற்று மலைபோல பணம் குவித்த ஷா!

☐ அயர்லாந்து நாட்டில் பிறந்து ஆங்கில நாடகங்கள் எழுதி உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஜோர்ஜ் பெர்னாட்ஷா.

இவருக்கும் ஆரம்பகாலத்தில் தோல்விதான்.

எழுத்தாளர்களின் தலைவிதியே அதுதான். முடிந்தவரை தொடர்ந்து போராடினால்தான் ஒரு சமயம் திருப்பம் வரும். அதன் பின்னர் வெற்றி கிட்டும்.

ஷாவின் எழுத்துலகிலும் ஒரு திருப்பம் வந்து புகழ் பெருக ஆரம்பித்தது. ஷாவின் எழுத்தை மதித்து மக்கள் புகழ ஆரம்பித்த பிறகு நாடகக் கம்பெனிகளும், பிரசுரகர்த்தாக்களும் இடைவிடாமல் மேலும் மேலும் அவர் எழுத்துக்களை கேட்க ஆரம்பித்தனர். நல்ல கிராக்கி!

ஆரம்பகாலத்தினை ஒரு கணம் நினைவு கூர்ந்தார். 'எத்துணைத் தோல்வி!'

உடனே ஒரு முடிவுக்கு வந்தார். அக்காலத்தில் எழுதியதை எல்லாம் மேல் ஷெல்பிலிருந்து எடுத்தார். எல்லாவற்றையும் நகல் எடுத்து கேட்பவர்களுக்கெல்லாம் கொடுத்துக்கொண்டே வந்தார். பிரசுரமாகியது. பணம் குவிந்தது.

ஆரம்பகாலத்தில் எழுதி வைத்திருந்த அத்தனையும் பிரசுரமாகிவிட்டது! நாடகம், கதைகள், கட்டுரைகள் எழுதுவதோடல்லாமல் கடிதங்கள் ஏராளமாக எழுதியிருக்கிறார் ஷா.

94 வயது வாழ்ந்த இவர், 75 வருடங்கள் எழுத்துத் தொழிலில் ஈடுபட்டவர். ஒருநாளைக்கு கிட்டத்தட்ட 10 கடிதங்கள் வீதம் எழுபத்தைந்து ஆண்டுகள் கடிதம் எழுதி அனுப்பியுள்ளார் என்றால், எத்தனை கடிதங்கள் என்று நீங்களே கணக்குப் போட்டு பார்த்துக்கொள்ளுங்கள். அவ்வளவுக்கும் தபால் செலவு - அந்நாளில் 50,000டாலர். இந்த நாளில்?

ஒரு டாலர் மதிப்பு 50 ரூபாய் என்றால், இதையும் கணக்குப்போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். ★

## வேதனை தரும் பரீட்சை!

● பரீட்சைகள் மிகவும் வேதனை அளிப்பவை! மிகவும் மோசமானவை.

பரீட்சைகள் அனைவருக்கும் அச்சம் தரவல்லவை!

புத்தகங்களில் காணப்படும் விஷயங்களை மனதில் திணித்துக்கொள்ளச் செய்யும் ஒரு கருவியே பரீட்சை.

இயல்பாக எழும் எண்ணக் குவியல்களுக்கு ஏற்படும் தடையே பரீட்சை.

ஆர்வத்தோடு அலை போலப் பாய்ந்துவரும் இனிய எண்ணங்களுக்கு அணை போடும் பரீட்சைகள் இருப்பதைக் காட்டிலும் இல்லாமல் இருப்பதே சிறந்தது.

—இப்படி மாணவர் எவரும் கூறவில்லை; உலக மகா விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் கருத்துக்களே இவை. ★

## புகைப்பவருக்கு அருகில் இருந்தாலும் ஆபத்து!

● புகை பிடிப்பவர்களுடன் இருக்கும் புகை பிடிக்காதவர்களுக்கும், அந்தப் புகையால் இருதய நோய்களும் புற்றுநோயும் ஏற்படுகிறது.

புகைபிடிக்காத மற்றவர்களைவிட இவர்களுக்கு இந்த நோய்களின் அபாயம் 30 சதவீதம் அதிகமாக உள்ளது என்று அமெரிக்க டாக்டர்கள் நடத்திய ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. ★

## செயற்கை மணல் உற்பத்தியில் ரஷ்யா

☐ இயற்கையாகவே கிடைக்கும எண்ணற்ற செல்வங்களில் மணலும் ஒன்று.

இயற்கை செல்வங்களில் ஒன்றான இந்த மணலைக் கூட இப்போது செயற்கை முறையில் உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டார்கள் ரஷ்ய விஞ்ஞானிகள்.

செயற்கை மண்ணின் நிறம் பொன்னிறம்.

இருவகை அயனி மாற்றிகளை ஆதாரமாகக்கொண்டு பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்டது.

தாது உரங்களில் இருந்து 15 அடிப்படை ஊட்ட கனிமங்கள் பிரித்தெடுக்கப்பட்டு இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

சாதாரண மண்ணைவிட இந்த மண்ணுக்கு மவுசு அதிகம்.

இம்மண்ணிலே வளரும் பயிர்களுக்கு உரங்கள் தேவையில்லை.

காரணம், இம்மண் உற்பத்தி செய்யப்படும்போதே எல்லாவித உர ஊட்டச்சத்துக்களும் இதில் சேர்க்கப்பட்டு விடுகிறது.

எனவே, இந்த மண்ணில் உண்டாக்கப்படும் பயிர்களுக்கு வெறும் தண்ணீர் மட்டும் பாய்ச்சினால் போதுமானது.

வீட்டுத் தோட்டங்கள் போட இந்த மண் மிகவும் ஏற்றது. ★

## சர்வதேச மாநாடு: ஒரு புள்ளி விவரம்!

☐ அயல்நாடுகளில் நடைபெறும் மாநாடுகளில் கலந்து கொள்வது என்பது அறிவாளிகள், அதிகாரிகள், நிர்வாகிகள் அனைவருக்கும் மிகவும் பிடித்தமானது.

இத்தகைய சர்வதேச மாநாடுகள் உலகெங்கிலும் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

எண்ணிக்கை என்ன தெரியுமா? மலைக்காதீர்கள்.

முப்பத்தி மூவாயிரம் சர்வதேச மாநாடுகள் நடைபெறுகின்றன.

ஒரு சர்வதேச மாநாடு என்றால் அதில் குறைந்தபட்சம் நூறு பேர்களாவது கலந்துகொள்ள வேண்டும். அதில் 20 நபர்களாவது நான்கைந்து வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கவேண்டும் என்பது நியதி. ★

# வரம் பெற நட வேண்டிய மரங்கள் எவை?

☐ மகராஷ்டிர மாநிலம், கொல்காபூரில், 'பழங்கால இந்தியாவும் சுற்றுச் சூழலும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடந்தது.

இதில் வைத்திய நிபுணர் டாக்டர் தகரே மரங்கள் நடுவதால் கிடைக்கும் பயன்கள் பற்றி புராண, இதிகாசங்களை மேற்கொள்காட்டி பேசினார்.

அவரின் பேச்சை நீங்கள் வாசியுங்கள்;

மரங்கள் வளர்ப்பது பற்றியும், சுற்றுச் சூழலை பாதுகாப்பது பற்றியும் புராணங்கள் நயமாகக் கூறுகின்றன.

திராட்சை செடிகளை நட்டால் அழகான மனைவி கிடைப்பாள்.

தென்னங்கன்றுகள் நட்டால் அதிக மனைவி கிடைப்பார்கள்.

அங்கோலா மரக்கன்று நட்டால் குழந்தைகள் அதிகம் பிறக்கும்.

சிம்சபா மரங்கள் நட்டால் இந்திரலோகத்து சுந்தரிகளின் பார்வை கிடைக்கும்.

இதே போல, வில்வ மரங்கள் வளர்த்தால் சிவபெருமானின் கருணையும் லோடா மரம் வளர்த்தால் பார்வதியின் கருணையும் கிடைக்கும்.

அரச மரம் வளர்ப்பதால் நல்ல காலம் பிறக்கும்.

அசோக மரம் வளர்ப்பதால் நோய் நொடியின்றி இருக்கலாம்.

பலாச மரம் வளர்ப்பதால் சொர்க்கத்தை அடையலாம்.

புராண காலங்களிலேயே மனிதர்கள் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்துள்ளனர்.

சிறப்பான மனித வாழ்வுக்காக உள்ள மரம் செடிகளை அழிக்கக்கூடாது.

பூமியின் இயற்கை வளம் காக்கப்படவேண்டும்.

புராணங்களைப் பின்பற்றி யாவது வாழத் தெரியவேண்டும்.

இவ்வாறு தகரே கருத்தரங்கில் கூறினார். ★

## பாரதியார் வாழ்விலே ஒரு நாள்...

☐ புதுவை வாசியான பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம்.

அவர் ஒரு திருமணத்துக்குச் சென்றார். திருமணத்தன்று மாலையிலேயே பாட்டுக் கச்சேரி.


பாரதியார்

பாடகரில் ஒருவரான சுப்புரத்தினம் அக்காலத்தில் புதுவையில் பிரபலமாக இருந்த பாடல்களில் ஒன்றை எடுத்து கணீரென்று முதலில் பாட ஆரம்பித்தார்.

கூட்டத்தில் ஓர் உருவம் மட்டும் சுப்புரத்தினத்தை மிகவும் கவர்ந்தது. இன்னும் சில பாட்டுக்களைப் பாடிய போது, ''தொன்று நிகழ்ந்த தனைத்தும்'' என்ற பாடலை ரசித்துப் பாடினார்.

சுப்புரத்தினத்தைக்கவர்ந்த அந்த உருவத்தினர் ரவிவர்மா வரைந்துள்ள பரமசிவனின் தோற்றத்தில் இருந்தார்.

அவர் யார், எங்குள்ளார் என்ற விவரம் தெரியாத போதிலும் அவரது தோற்றம் பாரதிதாசனைக் கவர்ந்தது.

முடிவிலே, நண்பர் ஒருவர் ரவிவர்மா பட பரமசிவன் போல் இருந்தவரைச் சுட்டிக் காட்டி, 'அவர் யார் தெரியுமா? எனக் கேட்டார்.

பாரதிதாசனுக்குத் தெரியவில்லை.

'நீங்கள் பாடும் பாட்டெல்லாம் அவர் எழுதியது தான்' என்று நண்பர் சொன்னதும், பாரதிதாசனின் முகத்தில் சந்தோஷம், பயம், வெட்கம் எல்லாம் கலந்து தோற்றமளித்தார்.

ரவிவர்மா படத்திலுள்ள பரமசிவனைப் போலிருப்பவர் என வர்ணிக்கப்பட்டவர் பாரதியார்தான்.

தமது பாடலை சுப்புரத்தினம் பாடக் கேட்ட அவர் 'இவரைத் நம் வீட்டுக்கு அழைத்து வா' என நண்பரிடம் கூறினார்.

மறுநாள் எப்போது விடியும் எனக்காத்திருந்து பாரதியாரை, அவர் வீட்டில் சந்தித்தார் சுப்புரத்தினம். அவரது கவிதைகளிலே நீந்தினார். எழுத்துக்களிலே முக்குளித்தார்.

விரைவில் கனக. சுப்புரத்தினமாக இருந்தவர் 'பாரதிதாசன்' ஆனார். ★

## வெயில் காலத்தில் தோல் காலணிகள்!

☐ வெயில் காலத்தில் நாம் தோல் காலணிகளையே அணியவேண்டும்.

ஏன்?

தோலில் நம் கண்களுக்குத் தெரியாத துவாரங்கள் நிறைய உள்ளன. அதன் மூலமாக, வெயிலினால் காலில் ஏற்படும் வியர்வை ஆவியாகப் போகிறது.

மேலும் தோல், வியர்வையை உறிஞ்சிக்கொள்ளும் தன்மையுடையது. அவ்வாறு உறிஞ்சப்பட்ட வியர்வை சுற்றுப்புற சீதோஷ்ணத்திற்கு ஏற்றாற்போல் ஆவியாகப் போய்விடும்.

தோல் காலணி குளிர், வெயிலைத்தாங்கும் சக்தியை உடையது. தோல் குளிர் சாதன தன்மையை உடையது. ★

# பெரிய புராணம் கண்ட சோழன்; புதிய கல்வெட்டுச் சான்று!

● சேக்கிழாரால் இயற்றப்பட்டது பெரியபுராணம் ஆகும். இதனை இயற்றச் செய்த மன்னர் முதலாம், இரண்டாம், மூன்றாம் குலோத்துங்கர்களில் எவர் என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்துவேறுபாடு நிலவுகிறது.

இருப்பினும், சேக்கிழார் தன்னுடைய பெரியபுராணத்தில் அனபாயன் என்று பல இடங்களில் சோழ மன்னன் ஒருவனைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

இத்தகைய பட்டப்பெயரைத் தாங்கிய அதிகாரியாக அனபாய மூவேந்தவேளாள் என்பவரும், அனபாய காடவராயன் என்ற சிற்றரசரும், அனபாயநல்லூர், அனபாயமங்கலம் என்ற ஊர்களும் இரண்டாம் குலோத்துங்க சோழரின் (கி.பி. 1133–1150) கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுவதால் பெரியபுராணம் குறிப்பிடும் அனபாயன், இரண்டாம் குலோத்துங்கனாக இருக்கக்கூடும் என அறிஞர்கள் முடிவு செய்தனர்.

இம்முடிவு சரி என்று சான்று பகரும் வகையில் தற்போது தமிழ்நாடு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் வேட்டவலம் என்ற ஊரில் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது.

இக்கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்க சோழனின் 12 ஆவது ஆண்டில் (கி பி. 1145)இல் எழுதப்பெற்றுள்ளது.

இது இம்மன்னர் பெயரை 'ஸ்ரீதிருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ அனபாயனான குலோத்துங்கசோழ தேவர்' என்று குறிப்பிடுகிறது.

இச்சோழ மன்னர் சிதம்பரம் கோயிலின் பேரம்பலத்தை பொன்வேய்ந்தவர்.

இது நடந்தது இவருடைய 7 ஆவது ஆண்டில் (கி. பி. 1140) என்று திருப்புறம்பியம் கல்வெட்டு கூறுகிறது.

சேக்கிழார் தமது நூலில் அனபாயன் பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தான் என்று கூறுகிறார்.

இவ்வகையில் வேட்டவலம் கல்வெட்டு வரலாற்றுச் சிறப்புடையதாகிறது. இது இவ்வூரிலுள்ள திருவகத்தீசுவரமுடைய மகாதேவர் கோயில் இறைவனுக்கு நாள்தோறும் அமுதுபடைக்க (திருமந்திர போனகம்) அணுக்கமலை ஊரைச்சேர்ந்த வேளாளன் மன்றூர் கிழவன் வெண்ணைக்கூத்தன் சோதி விளக்கன் என்பவர், அணுக்கமலை கிராமத்தில் நில தானம் கொடுத்த செய்தியைக் கூறுகிறது.

வராககால் எனும் அளவையும் (நாழி) குறிப்பிடப்படுகிறது. வேட்டவலம் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து உத்தமசோழவள நாட்டு விலையூர் நாடு என்ற பிரிவின் கீழ் இருந்த ஊர். ★

## விமானப் பயணத்தில் நாவல் படிக்கும் வி. பி. சிங்

☐ விமானப் பயணங்களின் போது நாவல் மற்றும் கவிதை நூல்களைப் படிக்கும் வழக்கம் கொண்டவர் வி. பி. சிங்.



அதற்காக, அவர் போகும் இடத்துக்கெல்லாம் ஒரு குட்டி நூலகம் அவரைப் பின் தொடர்கிறது.

சுமார் பத்துப் பதினைந்து புத்தகங்களையாவது அவரது உதவியாளர்களிடம் பார்க்க முடியும்.

சமயத்தில், விமானப் பயணங்களின்போது, தமக்குப் பிடித்தமான கவிதை எழுதும் பணியில் கூட அவர் இறங்கி விடுவது உண்டாம்,

தாம் படித்த விஷயங்களை தம்முடன் பயணம் செய்வோருடன் பிரதமர் பகிர்ந்து கொள்வாராம். ★

## இரத்தத்துடன் ஒட்டிய இரக்க சிந்தை!

☐ ஒரு பெண்ணின் மடியில் ஒரு குழந்தை அமர்ந்திருக்கிறது.

அப்பொழுது சப்தரிஷிகள் வானவெளியில் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவர் அந்தக் குழந்தையைச் சுட்டிக்காட்டி, யார் அந்தக்குழந்தை என்பதை மற்றவர்களுக்குச் சொல்கிறார்.

தன்னை நோக்கி கைநீட்டியதால், அந்த ரிஷி ஏதோ கேட்கிறார். அதனால் ஏதாவது அவருக்குக் கொடுத்தாக வேண்டும் என்று அக்குழந்தை தன் நெற்றிச் சுட்டியை அவரைநோக்கி எறிகிறது!

யார் அந்தக் குழந்தை? கர்ணன்தான் அக்குழந்தை.

மனிதனுடைய குணம் அவனுடைய இரத்தத்தோடேயே பிறந்துவிடுகிறது என்பது தற்கால விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

இது பழங்கால மெய்ஞானிகளின் கருத்துமாகும்.

கர்ணன் பிறந்ததுமே, மிகப்பெரிய கொடைவள்ளல் பிறந்துள்ளான் என்பதைக் காட்ட, வில்லிப்புத்தூரார், 'இந்திராதியர் அவரவர் முகம் மலர்ந்து இருந்தது தரத்தக்க மைந்தனானவன் ஒருவனைப் பயந்தனள்' என்கிறார்.

அதாவது 'இந்திரன் முதலானவர்கள் கேட்டால்கூட முகம் மலர்ந்து தானம் கொடுக்கக்கூடிய பிள்ளையைப் பெற்றாள் குந்தி' என்கிறார்.

மகாபாரத யுத்தத்தில் கர்ணனுடைய புண்ணியம் அவனைக் காப்பாற்றுகிறது.

அதைப் பறித்தால்தான் கர்ணனைக் கொல்ல முடியும் என்கிற முடிவுக்கு வருகிறான் கண்ணன்: அதனால் ஒரு அந்தணன் வேஷத்தில் அவன் முன்போய்நிற்கிறான்.

'தங்களுக்கு என்னவேண்டும்? என்று கேட்கிறான் கர்ணன்.

'உன் புண்ணியம் வேண்டும்'

'தந்தேன்' என்கிறான் கர்ணன்.

ஆனால் தாரை வார்த்துக் கொடுக்கத் தண்ணீருக்கு எங்கே போவது? அதனால் தன் இரத்தத்தைக்கொண்டே தாரைவார்த்துக் கொடுக்கிறான்.

கர்ணனுடைய இரத்தம் அந்த அந்தணயாசகன் கையில் பட்டதுதான் தாமதம், அந்த யாசகன் கொடைவள்ளலாக மாறுகிறான்!

'உனக்கு என்னவேண்டும்?' என்று கர்ணனைப் பார்த்துக் கேட்கிறான்.

ஒருவனுடைய குணம் அவன் இரத்தத்தோடு [illegible] என்பதற்கு இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்? ★

# மக்கள் மனநிலையை அறிந்த சேர்ச்சில்

☐ இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர் சேர்ச்சில்! இரண்டாம் உலகப் போரின் போது நேச நாடுகளின் (இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா, உள்ளிட்ட நாடுகள்) படைகளுக்குத் தலைமை வகித்து போரிலே வெற்றி கண்டு உலகப் புகழை அடைந்தவர் இவர்!

ஆனாலும் போர் முடிந்து அடுத்து வந்த தேர்தலிலே சேர்ச்சிலை இங்கிலாந்து மக்கள் தோற்கடித்தார்கள்.

அதற்கு கூறப்பட்ட காரணம், யுத்த காலத்தில் மட்டுமே அவர் பிரதமராக [illegible] மக்கள் கருதினார்களாம். [illegible] யாளர். சிறந்த நகைச்சுவையாளர். அதற்கு மேலாக வெறும் ஆர்ப்பாட்டங்களை அப்படியே நம்பிவிடக் கூடியவரல்ல...

அதற்கு உதாரணமாக அவர் பிரதமராக இருந்த காலத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதைக் குறிப்பிடலாம்.

அந்தக் கூட்டத்தில் சேர்ச்சில் பேசப்போகிறார் என்றதுமே இங்கிலாந்தே அந்தத் திடலில் திரண்டதுபோல் அவ்வளவு மக்கள் திரண்டிருந்தார்கள்.

இவ்வளவு ஜனங்களும் சேர்ச்சிலின் ஆதரவாளர்களே என்று நம்பினார்கள்.

இதே அபிப்பிராயத்தை கொண்டிருந்த கூட்டத் தலைவரும், 'நமது பிரதமர் மீது மக்களுக்கு எவ்வளவு அபிமானம் இருக்கிறது என்பதற்கு இங்கே திரண்டிருக்கும் இந்த மக்கள் வெள்ளமே சாட்சி' என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் சேர்ச்சிலோ. அந்தக் கூட்டத்தைக் கண்டும் தன்னைப் புகழ்ந்து பேசப்பட்டதைக் கேட்டும் நிதானம் இழந்துவிடவில்லை! எனவே சேர்ச்சில் பேசும் போது கூறினார்...

''இங்கே திரண்டிருக்கும் மக்களைச் சுட்டிக்காட்டி, இவர்களுக்கெல்லாம் பிரதமர் மீது மிகுந்த அபிமானம் இருப்பதினால்தானே இவ்வளவு திரளாக வந்து கூடியிருக்கிறார்கள்' என்று இந்தக் கூட்டத் தலைவர் கூட குறிப்பிட்டார்.

''ஆனால் எனக்குத் தெரியும். இன்று இதே மேடையில் இந்த நேரத்தில் என்னைத் தூக்கிலிடப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தால், இதை விடவும் பன்மடங்கு மக்கள் இங்கே திரண்டிருப்பார்கள்'

இவ்வாறு அவர் கூறியதும் தங்களை மீறிய நகைப்பில் அவை மூழ்கியது! ★

பஞ்சாமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## ஆண்டு - 5
## புலமைப் பரிசில் பரீட்சை
### மாதிரி வினாத்தாள்
## தமிழ்

● 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இருவாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கருத்துடைய ஒரு வாக்கியமாக இணைக்கவும்.

1. கடும் புயல் வீசியது.
மரங்கள் முறிந்து விழுந்தன.
2. சுதா நன்றாகப் படித்தாள்.
புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்தாள்.
3. நான் கோயிலுக்குப் புறப்பட்டேன்.
எனது தங்கையும் என்னுடன் வந்தாள்.
4. மாணவர்கள் வகுப்பறைக்கு வந்தார்கள்.
பாடசாலை மணி அடித்தது.
5. பாம்பாட்டி மகுடியை ஊதினான்.
பாம்பு படமெடுத்து ஆடியது.

● 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சொல் தரப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள சொற்களின் நிரலிலிருந்து அவற்றுக்கு ஒத்த கருத்துடைய ஒரு சொல்லையும், எதிர்க்கருத்துடைய ஒரு சொல்லையும் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
அழு, சமீபம், மேலே, ஆதி, விருப்பம், அந்தம், மேன்மை, சேய்மை, நேசம், வன்பு, நகை, தாழ்வு, கீழே, இடை, சிந்தி.

| | | ஒத்தகருத்துச் சொல் | எதிர்க்கருத்துச் சொல் |
|---|---|---|---|
| 6. | அன்பு | ............ | ............ |
| 7. | சிரி | ............ | ............ |
| 8. | தொடக்கம் | ............ | ............ |
| 9. | அண்மை | ............ | ............ |
| 10. | உயர்வு | ............ | ............ |

● 11 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் தொடர்பாக இங்கு தரப்பட்டிருக்கும் சொற்களின் நிரலில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து பந்தியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

ஆயிரத்திலொரு, கிளைகள், மெல்லிய, வானளாவ, பழமைபோல், பசுமையான, பருமனோ, வெள்ளம், செழித்து, குளிர் நிழலைப்

ஓர் ஆற்றங்கரையில் (11) ......... வளர்ந்ததோர் வேப்பமரம் நின்றது. அதன் (12) .........நாற்றிசையும் பரந்து (13) ......... பரப்பின. அவற்றின் அருகே சில நாணற்புற்கள் வளர்ந்திருந்தன. அவை (14) ......... தண்டும் (15) ......... இலைகளும் உடையன. வேப்பமரத்தின் (16) ......... பங்கு உயரமோ (17) ......... அவற்றுக்கில்லை. ஆனால், அவை நன்கு (18) ......... வளர்ந்திருந்தன. மழை பெய்யும் காலங்களிலே, ஆற்றில் (19) ......... பெருகி ஓடும். அப்போது நாணற்புற்கள் ஆற்று வெள்ளத்தில் மூழ்கிவிடும். நீர் ஓடுந் திசையில் வளைந்து சாய்ந்துகொள்ளும். வெள்ளம் வடிந்ததும் எவ்வித துன்பமுமின்றிப் (20) .........நிமிர்ந்து நிற்கும்.

● 21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் தொடர்பாக, இங்கு தரப்பட்டிருக்கும் விவரணத்தைக் கவனமாக வாசித்து அதன்பின் விடையளிக்க.
பாடசாலையில் மாணவர்கள் ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் தமது பாடசாலை இல்லவிளையாட்டுப் போட்டியில் பங்குபற்றினர். இது இரண்டாந் தவணை தொடக்கத்தில் பிற்பகலில் நடைபெற்றது. நிகழ்ச்சிநிரல் பின்வருமாறு:
மணி 2.00 இல்லங்களின் மாணவர் குழுக்களின் அணிவகுப்பு.
மணி 2.10 பிரதம விருந்தினர் அணிவகுப்பு மரியாதையை ஏற்று விளையாட்டுப்போட்டியை ஆரம்பித்தல்.
மணி 2.15 பாடசாலை விளையாட்டுத் தலைவர் சத்தியப்பிரமாணம் செய்து பாடசாலைக்கொடியை ஏற்றுதல்.
மணி 2.20 நூறுமீற்றர் ஓட்டப்போட்டி ஆண்கள்.
மணி 2.30 நூறு மீற்றர் ஓட்டப்போட்டி பெண்கள்.
மணி 2.40 இருநூறு மீற்றர் ஓட்டப்போட்டி ஆண்கள்.
மணி 2.50 இருநூறு மீற்றர் ஓட்டப்போட்டி பெண்கள்.
மணி 3.00 தடை தாண்டி ஓட்டம். ஆண்கள், பெண்கள்.
மணி 3.15 குழுநிகழ்ச்சிகள்.
மணி 3.30 இடைவேளை.
மணி 3.45 ஆயிரத்துநூறு மீற்றர் ஓட்டம் ஆண்கள்.
மணி 4.05 வினோத உடைப்போட்டி.
மணி 4.20 அஞ்சலோட்டம், ஆண்கள், பெண்கள்.
மணி 4.30 பிரதம விருந்தினர் உரை.
மணி 4.45 பரிசு வழங்கல்.
மணி 5.05 அதிபர் நன்றி உரை.
மணி 5.15 விழா முடிவு.

21. மேலே தரப்பட்ட விவரத்தை எத் தலைப்பில் அடக்கலாம்?
''நிகழ்ச்சி நிரல்'', ''பாடசாலைவிழா'', ''விளையாட்டுப்போட்டி முடிவுகள்''
22. இங்கு எத்தனைதரம் ஓட்டப்போட்டிகள் மட்டும் நடைபெற்றன?
23. விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்துவைப்பவர் யார்?
24. விளையாட்டுப்போட்டி நடைபெற இருப்பது முற்பகலிலா? பிற்பகலிலா?
25. நடைபெற இருக்கும் விளையாட்டுப் போட்டியில் உள்ள குழு நிகழ்ச்சி மணி 3.15 இல் நடைபெறுவது தவிர, இன்னுமொன்று கூறுக?
26. மேற்கூறிய பாடசாலை எந்த வகையான பாடசாலை.
27. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக நடக்கும் போட்டிகள் எவை?
28. ஆண்கள் மாத்திரம் பங்குபற்றும் விளையாட்டு எது?
29. இறுதியாக எந்நிகழ்ச்சியுடன் விளையாட்டுப் போட்டி முடியும்?
30. ''வினோதம்'' என்பதன் ஒத்தகருத்துடைய ஒரு சொல் தருக?

● 31 தொடக்கம் 35 வினாக்கள் தொடர்பாக கீழ் வரும் உரைப்பகுதியை வாசித்து, விடைதருக.
அநுராதபுரத்தை ஆட்சிசெய்த தமிழ் மன்னனாகிய எல்லாளன் என்ற அரசன் ஒருநாள் தேர்மீது ஏறிப்போனான். வழியிலிருந்த ஒரு புத்தவிகாரையில் அவன் தேர் முட்டிவிட்டது. அதனால் சுவரிற் சிறிதுபாகம் உடைந்துவிட்டது. ''அரசனே, உங்களால் விகாரைக்குச் சேதம் உண்டாயிற்று'' என்று மந்திரிமார் சொன்னார்கள். கைபிழைபாடாக நடந்த சிறு குற்றத்திற்காக மன்னன் துடிதுடித்தான். உடனே, தேரினின்றும் குதித்தான். அங்குள்ள புத்தபிக்குவை வணங்கித் தேரின் முன்னே தெருவில் வீழ்ந்து கிடந்தவாறே ''தேர்க்காலால் நெரித்து என்னைக் கொல்லுங்கள்'' என்று சொன்னான். அப்பொழுது புத்தகுரு புன்முறுவல் பூத்து ''இன்னோர் உயிரைக் கொல்லுதலை எங்கள் புத்ததருமம் ஏற்காது, அப்படிச் செய்தல் பாவம்'' எனக் கூறி எல்லாளனைப் பொறுத்துவிட்டார். எல்லாளன் தான் தெரியாமற் செய்த குற்றத்திற்காக பதினையாயிரம் பொற்காசு செலவுசெய்து அந்த விகாரையை திருத்திக்கட்டுவித்தான். அதனால் புத்தசமயத்தவர் அவனைப் பெரிதும் வாழ்த்தினர். அன்பினாலும், நீதியினாலும் மன்னன் மக்களுடைய அன்பையும், மதிப்பையும் பெற்றான்.

31. புத்ததருமம் ஏற்காத செயல் என்ன?
32. புத்தசமயத்தவர் இவனை வாழ்த்தியது எதற்காக?
33. இவன் மக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றது எவ்வாறு?
34. அ. குற்றம் என்பதன் ஒத்தசொல் யாது?
ஆ. 'வாழ்த்தினர்' என்பதன் எதிர்ச்சொல் யாது
35. சரியாயின் சரியெனவும், பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குள் இடுக.
அ. எல்லாளன் அநுராதபுரத்தை ஆண்ட சிங்கள அரசன். (.........)
ஆ. எல்லாளன் வேண்டுமென்றே தேரினால் விகாரையை முட்டினான். (.........)
இ. இடிந்த விகாரையை மன்னன் திருத்திக் கட்டுவித்தான். (.........)
ஈ. புத்தபிக்கு எல்லாளனை தேர்க்காலால் நசித்துக் கொன்றான். (.........)

● பின்வரும் பாடல்ளைப் படித்தபின் 36 தொடக்கம் 39 வரை வினாக்களுக்கு விடைதருக.

பிறரின் தயவில் வாழுவது பேதைமையாகும்
ஏ மனிதா
அறிவாய் இறைவன் கூறுகிறான் அழகாம்
சுயமரியாதையுடன்
நெறியே நிற்பாய் தலைசாயேல் நிமிர்ந்துநட நீ
பயமில்லை
குறையே வேண்டாம் துணிவுண்டே
கூறும் அன்பால் வாழ்வுண்டே

★

இயற்கையளிக்குஞ் செல்வமெல்லாம் இறைவன்
கொடையா அறிவாயோ
முயற்சி விடுத்து நிலத்தினிலே முனைந்து
பொறுக்கில் பாபமதாம்
பயிற்சியற்ற உயர்களது பண்ணையாமது
தீண்டாதே
உயர்ச்சியுள்ள மனிதன் நீ உழைத்தே அருந்து
பாபமில்லை

36. கவிஞர் எதைப் பேதைமை என்கிறார்?
37. எதை இறைவன் கொடை என்கிறார்?
38. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துடைய ஒவ்வொரு சொல் தருக.
1. பேதைமை ............ 2. அளிக்கும்............
39. உயர்ச்சியுள்ள மனிதன் என்ன செய்தால் பாவம் இல்லை என்கிறார்?
40. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் குறுகிய கட்டுரை ஒன்று எழுதுக.
(i) நான் விரும்பும் தொழில் (ii) எனது செல்லப் பிராணி (iii) நான் கண்ட ஒரு இயற்கைக்காட்சி.
41. கீழே தரப்பட்டுள்ள கருத்துக்களை வைத்து 'கல்வியின் பயன்' எனும் பொருள்பற்றி சிறுகட்டுரை ஒன்று எழுதுக.
(i) கல்வி கற்றலின் அவசியம்.
(ii) கல்வி கற்பதால் ஏற்படும் நன்மைகள்.
(iii) எடுத்துக்காட்டாக சில சிறப்பான பயன்கள்.
(iv) கல்வியினால் பெறும் பயனை எப்படிவிருத்தி செய்யலாம்.
(v) கல்விமூலம் சிறுவர்களாகிய நாம் பெறக்கூடிய அனுபவங்கள்.
(விடைகள் அடுத்த வாரம்)

தொகுப்பு: **- செல்வி. எஸ். எஸ். ஐயர் -**

## கணிதம்

**சென்றவாரம் வெளிவந்த மாதிரி வினாத்தாளின் 7 ஆம் வினா இங்கே தரப்படுகிறது.**

7. இவ்வுருவில் இருந்து பெறக்கூடிய முக்கோணிகளின் மிகக் கூடிய எண்ணிக்கை

(1.) 4 (2.) 6 (3.) 8 (4.) 10



### சென்றவார வினாத்தாளுக்கான விடைகள்

1. $\frac{1}{2}$, 2. 1, 3. XCIX, 4. 1, 5. 2ரூ, 1ரூ, 1ரூ, 50ச, 50ச. 6. தென்கிழக்கு, 7. 8, 8. சுதா, சுபா ஆகிய இருவருக்கும் சமநேரம் எடுக்கும், 9. 1575, 10. 11091, 11. 8553, 12. 11520, 13. 2001, 14. 495, 15. 9.7/1, 16. $4\frac{1}{2}$, 17. 4.3/1, 18. 9, 19. $\frac{1}{2}$, 20. 909009, 22. 3.6, 5.6, 6.3, 6.5, 22. $18 < 28 < 82$, 23. 63ரூ. 75ச, 24. 5 மணி 15 நிமிடம், 25. 464, 26. 5 k.m 5m 55cm, 27. 7300g, 28. 30ரூ 10ச, 29. 9ரூ 80ச 30. 17, 31. 120m, 32. 12, 33. 81, 34. 255, 35. 2475, 36. 15, 37. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர் போற்றும் மருதோன்றி
## மாமருந்தாகவும் உதவுகிறது!

பெண்கள் மருதோன்றியை அரைத்து அதன் விழுதை கை நகங்களிலும் பாதங்களிலும், கால் விரல்களிலும் வைத்து அழகு பார்க்கின்றனர்.

மருதோன்றி மரத்தின் ஒவ்வொரு பாகமும் பெண்களுக்கு ஒவ்வொரு விதத்தில் உதவுகின்றன.

மருதோன்றி இலை, கண்ணுக்குத் தெரியாத கிருமிகளைக் கொல்லும் சக்தியுடையது.

வாதம், சை, கால், வலி, எரிச்சல் இவைகளுக்கு மருதோன்றி இலையை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பூசி வரலாம்.

இலையைப் பாதத்தில் தேய்த்தால் கால்களில் உள்ள எரிச்சல் போகும்.

அம்மை கண்டுள்ள காலங்களில் கண்களுக்கு அம்மையால் தீங்கு வராது இருக்க இலையை அரைத்து இரு பாதங்களிலும் கட்டலாம்.

மருதோன்றிப் பூவிற்குத் தூக்கம் உண்டாக்கும் சக்தி உண்டு. இரவில் தலையணையடியில் மருதோன்றி பூக்கொத்தை வைத்துப் படுத்தால் நன்கு தூக்கம் வரும்.

சாம்பிராணித் தூளுடன் மருதோன்றி விதைகளையும் சேர்த்துப் புகைபோட வீடுகளில் உள்ள துஷ்ட தேவதைகள் போய் விடும் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கை.

கால் ஆணி உள்ளவர்கள் மருதோன்றி மரத்தின் வேர்ப் பட்டையை அரைத்து வைத்துக் கட்டி வந்தால் குணமாகும்.

மருதோன்றி இலையில் காய்ச்சிய எண்ணையைத் தலையில் தேய்ப்பதால் முடி நன்றாக வளரும்.

### மருதோன்றி இலை எண்ணெய்

மருதோன்றி இலையைப் பறித்துச் சுத்தம் செய்து கொள்ளவும். ஒரு இரும்புச் சட்டியில் சுத்தமான தேங்காய் எண்ணெயை விட்டுச் சூடேற்றவும்.

எண்ணெய் நன்றாகச் சூடேறிக் காய்ந்ததும் அதன் மேல் எண்ணெயில் அப்பளம் பொரிப்பது போலக் கொஞ்சம், கொஞ்சமாக இலையைப் போட்டு ஈரம் வற்றி இலை சுருண்டு வரும்போது இலையை எடுத்துவிட வேண்டும்.

பின் எண்ணெயை அடுப்பில் இருந்து இறக்கி நன்றாக ஆறவிட்டுச் சுத்தமான போத்தலில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.


எண்ணெயின் நிறம் இலையின் நிறத்தைப்போல பசுமையாக இருந்தால் முதல் தரமானது.

இந்த எண்ணெயை தலைக்குத் தடவிவர உதிர்ந்த முடிகள் வேகமாக வளரும்.

தலையில் பூச்சி வெட்டால் திட்டுத்திட்டாக வழுக்கையாகி விட்டவர்களும் இந்த எண்ணெயைத் தடவி வந்தால் முடி நன்றாக வளரும்.

★

## வரவேற்புக் கோலம்




இக்கோலம் வரவேற்புக் கோலமாகும். இதனை மாக் கோலமாகவும் வர்ணம் சேர்த்தும் போட்டுக் கொள்ளலாம். இக்கோலம் கூட்டங்கள் விழாக்கள் போன்ற வரவேற்பு நிகழ்ச்சிகளுக்குப் போடக்கூடியதாகும்.

வர்ணம் சேர்ப்பதானால் எழுத்துக்களுக்கு வெள்ளை நிறத்திலும் எழுத்துக்களைச் சுற்றியுள்ள பூக்களை சிவப்பு நிறமாகவும் பூக்களுக்கு இடையிலுள்ள இடைவெளிகளை மஞ்சள் நிறமாகவும் மொட்டுக்களின் கீழ் இதழ்களுக்கு பச்சை நிறமாயும் மேலே சிவப்பிலும் கொடுக்கவும்

இதனைப் போடும் முறை, முதலில் 15 புள்ளிகள் 5 நிரைக்கு வைக்கவும். பின்னர் நான்காவது புள்ளியிலிருந்து 9புள்ளிகள் 2 நிரைக்கு வைக்கவும். அதன் பின்னர் 3 ஆவது புள்ளியிலிருந்து 5 புள்ளிகள் 3 நிரைக்கு வைக்கவும். இதேபோன்று மேற்பகுதிக்கும் புள்ளிகளை வைத்துப் படத்தில் காட்டியவாறு தொடுத்துக் கொள்ளவும்.

— திருமதி.
நா. சோமசுந்தரக்குருக்கள்

## நங்கை

# விளையும் பயிர்!

நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு அண்மையில் கந்தப்பு வசித்து வந்தார்.

கடினமாக உழைக்கும் ஒரு விவசாயி. அவர் வீட்டின் பிற்பகுதியில் அழகான தோட்டம் அமைந்திருந்தது.

அவருக்கு ஒரு மகன். பன்னிரண்டு வயது நிரம்பாத சிறியவன். துடிதுடிப்பும் விவேகமும் கொண்டவன். தோட்ட வேலையில் ஆர்வம் கொண்டிருந்தான்.

''அப்பா, தோட்டத்திலே ஒரு மூலையில் நான் வீட்டுத் தோட்டம் ஆரம்பிக்கப் போகிறேன்'' என்றான் மகன் உதயன்.

**- கோவை மகன் -**

''உனக்கு வயது காணாது கொஞ்சக்காலம் போகட்டும்'' என்றார் தந்தை.

''ஏன் அப்பா எனக்கு வயசு காணாதா? என்னிலும் பார்க்க சின்னப் பொடியன்கள் தோட்டத்தில் வேலை செய்கிறார்களே''.

''நீ கவனமாகப் படி. வளர்ந்தாப்போல வந்து உதவி செய். எனக்கு வயது போய்விடும். உன்னுடைய உதவிதேவைதானே''.

''எனது வகுப்பு ஆசிரியர் லீவு நேரத்தைப் பிரயோசனமாகவும் சந்தோஷமாகவும் செலவழிப்பதற்கு வீட்டுத் தோட்டம் செய்யட்டுமாம்'':

''எடேய் வீட்டுப்பாடம் செய்துபோட்டியே?'' என்று கேட்டார் தாயார் நாகலட்சுமி:

''இனி அம்மாவுக்கு விளங்கப்படுத்தவேண்டும். பெரும் தொல்லையாகப் போச்சு. அம்மா, அதிகமான மாணவர்கட்கு ஏதோ ஒருபொழுதுபோக்குண்டு. எனக்கு வீட்டுத்தோட்டம்தான் பொருத்தமான பொழுதுபோக்கு என நினைக்கின்றேன்'' என்றான் மகன்.

''உன்னுடைய கரைச்சல் தாங்க முடியாது. உனக்கு நான் புறம்பாக வேலி அடைச்சு ஒரு துண்டு தாறன்'' என்றார் கந்தப்பு.

ஒரு கிழமைக்குள் கந்தப்பு ஒரு துண்டு காணிக்கு வேலி அடைத்து, நிலத்தைப் பண்படுத்தி நீர் வசதியும் செய்து கொடுத்தார். மகனின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

உதயன் பாடசாலையில் இருந்து வீடு சென்றதும் தோட்டத்தில் தனது பொழுதைக் கழித்தான். விவசாய ஆசிரியரின் ஆலோசனைப் படி காலத்துக்கு பொருத்தமான காய்கறிப் பயிர்களை நாட்டினான். அவனுடைய மாமனும் இடையிடையே உதவிசெய்து வந்தார்.

''மாமா பாடசாலையிலே தோட்டம் செய்ய வசதிகள் இல்லை. பக்கத்து வீட்டு மாடுகள், ஆடுகள், கோழிகள் பயிரை அழித்துவிடும். எங்கடை திருச்சிற்றம்பலம் ரீச்சர் சரியாய்க் கஷ்டப்படுகிறார். இந்தச் சனங்கள் ஏன் பள்ளிக்கூடத்துக்கு உதவிசெய்யக்கூடாது'' மாமாவுக்கு கவலையுடன் கூறினான் உதயன்.

''எங்கடை ஆட்கள் இப்படித்தான். காலம் போக எல்லாம் சரிவரும். நீ கவனமாகப் படிச்சு மற்றவர்களுக்கும் உதவியைச் செய்'' என்றார் மாமன்.

'உதயா நீதான் பயிர்களைக் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் உனக்குத் தந்த துண்டைப் பறிச்சுப் போடுவேன்'' என்று தாய் விரட்டினார்.

உதயன் மிக அக்கறையுடன் பயிர்களுக்கு முறைதவறாது தண்ணீர் பாய்ச்சிவந்தான். பசளையிடுவதிலும், களை பிடுங்குவதிலும், மாமனைக் கொண்டு கிருமிநாசினி தெளிப்பதிலும் கவனமாக இருந்தான்.

பறவைகளையும் எலிகளையும் வெருட்டுவதற்காக ஒரு வெருளியைச்செய்து நடுத் தோட்டத்தில் நாட்டினான். அவன் ஒரு பாட்டையும் இயற்றி உற்சாகமாகப் பாடி மகிழ்ந்தான்.

''வெயிலில் நிற்கும்
வெருளியே
வெருண்டு வெருண்டு
பாராதே,
மழையைக் கண்டு ஓடாமல்
பிழையும்விட விரும்பாமல்,
வருத்தம் நிறைந்த
முகத்தோடு
நித்தம் நித்தம்
நிற்கிறாயே;

பறந்து திரியும்
பறவைகளும்
எதற்கும் அஞ்சாத
எலிகளும்,
அசிங்கமான தோற்றம்
கண்டு
அஞ்சுகின்றன அருகே வர.
விசுவாசி யாகி விட்ட
விவசாயியின் வீர
நண்பனே''

உதயன் லீவு நேரத்தை தோட்டத்திலே கழித்தான். அவனுக்கு சிறு வருவாயும் கிடைத்தது. சேமிப்புப் புத்தகத்தில் பணத்தைப்போடத் தொடங்கினான். அவனின் பெற்றோரும் மாமனும் அக மகிழ்ச்சியடைந்தார்கள்.

பிள்ளைகளின் ஆர்வத்தை நெறிப்படுத்தவேண்டுமே தவிர மழுங்கடிக்கக் கூடாதென்பதை உணர்ந்தார்கள்.

★

## சிறுவர் சுடர்

# கவிதை ரசனையை அழிக்கும் இன்றைய இசை அமைப்பு!

தமிழ் சினிமா இசை உலகில் தனக்கென்று ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருப்பவர் டி. எம். சௌந்தரராஜன்.

இன்னமும் சொல்லப்போனால் ஏழிசை மன்னர் என எல்லோராலும் போற்றிப் புகழப்பட்ட எம். கே. தியாகராஜபாகவதருக்கு அடுத்தபடியாக - தமிழ் மக்களின் நெஞ்சங்களில் குடிகொண்டு — அவரைப் போலவே இனிய, கம்பீர, வசீகரமான குரல் வளத்தைப் பெற்றவர்.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்களுக்கு உயிர் ஊட்டிய சிறப்பு டி. எம். சௌந்தரராஜனையே சாரும்!

அந்தப் பெருமையை உணர்ந்த கவிஞர் கண்ணதாசன் ஒரு முறை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் டி. எம். எஸ்ஸுடன் கலந்துகொண்ட நிகழ்ச்சியொன்றில், 'என்னுடைய பாடல்கள் அவரது குரல் வளத்தால் தான் பெருமை அடைந்தது. இல்லை



சௌந்தரராஜன்

என்றால் எனக்கு இந்தப் பெருமை வந்திருக்காது. 30 ஆண்டுகாலமாக நான் எழுதுகிறேன். என்னுடைய பேனா இன்னமும் நன்றாக இருக்கிறது. அதுபோலவே 30 ஆண்டுகளாக டி. எம். எஸ். பாடுகிறார். அவரது குரலும் நன்றாக இருக்கிறது. அவருடைய பெயரை ஆங்கிலத்தில் உச்சரிக்கும்போது (Soundarajan) Sound என்ற சொல் அவருடைய பெயரிலேயே அடங்கியிருக்கிறது' என்று அவரைப் பாராட்டினார்.

அண்மையில் டி. எம். சௌந்தரராஜனைச் சந்தித்தபோது......

● இன்றைய திரைப்படப்பாடல்களுக்கும் பழைய பாடல்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

— பொதுவாக அன்றிருந்தவர்கள் உயர்ந்த இசையை ரசித்தார்கள்.

'என்னடி ராக்கம்மா' என்ற டப்பாங்குத்துப் பாடல்களை நான் அன்று பாடியபோது கேலி செய்தார்கள்!

இன்று டப்பாங்குத்து பாடல்களை மக்கள் பெரிதும் ரசிக்கிறார்கள்.

அன்று வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முக்கியமான சொற்கள் அடிபடாமல் இசை அமைத்தார்கள்.

இன்று வாத்தியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இசை அமைக்கிறார்கள். கவிதைகளின் முக்கியத்துவம் இன்று இசை அமைப்பில் அடிபட்டுப் போகிறது.

அன்று வாய்ப்புகள் கலைஞர்களைத் தேடி வந்தது. இன்று கலைஞர்கள் (பாடகர்) இசையமைப்பாளர்களை நாடிச்சென்று 'சான்ஸ்' கேட்க வேண்டிய நிலைமை.

● இதுவரை 7 ஆயிரம் பாடல்களுக்கு மேல் பாடியிருக்கிறீர்கள். உங்களது பாடல்களைப் போன்று

### சௌந்தரராஜன் கவலை

மற்றவர்களின் பாடல்களும் மக்கள் மனதில் நிலைத்து நிற்பதில்லையே அது ஏன்?

— கவிஞர் கண்ணதாஸனின் கவி நயமிக்க, ஏழை மக்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்து விட்ட அற்புதமான கவிதைகள் ஒரு பக்கம்.

இரண்டாவது, இறைவன் எனக்கு வழங்கியுள்ள குரல் வளம்.

● பொதுவாக நீங்கள் இசை அமைப்பாளர் சொல்லித் தருவது போன்று பாடுவீர்களா? அல்லது நீங்களே 'ட்யூன்' சொல்வீர்களா?

— இசையமைப்பாளர் பாடலை எப்படிப் பாட வேண்டும் என்பதை விளக்குவார்.

எந்தப் பாடலை - காட்சிக்கு ஏற்ப எப்படிப் பாட வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்து காட்சிக்கு ஏற்ப உணர்ச்சி பாவங்களைச் சித்தரித்து — பாத்திரத்துக்கு உயிரூட்டி என் சாரீரத்தை வைத்து எந்த அளவுக்கு சிறப்பாகப் பாட முடியுமோ அந்த அளவுக்கு அற்புதமாகப் பாடுவேன்.

உதாரணமாக 'அந்த நாள் ஞாபகம்' என்ற பாடலைப் பாடும்போது நான் மூச்சுவாங்கும்வரை அங்குமிங்கும் நடந்து உணர்ச்சிவசப்பட்டு உன்னதமாகப் பாடினேன்.

அந்தக் காலத்தில் ஒருவருடன் ஒருவர் போட்டி போடுவது உண்டு. ஆனால் அது பொறாமை கலந்த போட்டியல்ல. பாசம் நிறைந்த பண்பான போட்டி! ஆரோக்கியமான போட்டி.

முப்பந்தைந்து வருஷங்களாகப் போட்டியும், பொறாமையும் இல்லாமல் பாடிக் கொண்டிருக்கிறேன். அந்த அளவுக்குத் திரையுலகம் என்னைப் பெருமைப்படுத்தியுள்ளது. இதுவரை 7,000 பாடல்கள் பாடியுள்ளேன்.

● சினிமா உலகத்தில் மீண்டும் நீங்கள் பாடுவதற்கான வாய்ப்பு வருமா?

— நான் என்னை ஒரு ரோஜா மலராகவே நினைத்து வாழ்ந்து விட்டேன்; ரோஜா மலர் இருக்கும் இடம் தேடித்தான் தேனீக்கள் வரவேண்டும்! அதுதான் உண்மையான கலைஞனுக்குப் பெருமை! ★

# மேலை நாட்டில் நடந்த சினிமாக் கார் பேரணி!

சினிமா படத்தில் நடிக்கும் நடிகர்-நடிகைகளுக்கு மட்டும் மவுசு வருவதில்லை...

சினிமாவில் தோன்றும் பிராணிகள், கார்கள், விடுகள் எல்லாவற்றுக்குமே தனிப்பெருமை வந்து விடுகிறது போலும்...

அதுவும் நம் நாட்டில் மட்டும் இப்படி அல்ல .. உலகம் முழுவதும் இதே நிலவரம்தான் போலும் !

சமீபத்தில் ''கிரேட் பிரிட்டன் பிலிம் ரேலி டு கேன்ஸ்'' என்ற மாபெரும் படவுலகப் பேரணி ஒன்று வெளிநாட்டில் நடந்தது. 1935 - ஆம் ஆண்டில் லகோண்டா எம். 45 ரேப்பெய்ட் என்ற காரும் கலந்து கொண்டது.

''தி இன்ட்ருடர்'' என்ற படத்தில் தோன்றும் கார் இது...

பேரணியில் கலந்து கொண்ட கார்களில் 50க்கும் மேற்பட்டவை சினிமா தொடர்புடையவை...

சினிமாக்காரர்கள் பேரணிபோல சினிமாக் கார்களின் பேரணியாக நடந்தது போல இருந்தது.

அப்போது வசூலான நிதி குழந்தைகள் பாதுகாப்பு பணிக்கு வழங்கப்பட்டது. ★

# நகைச்சுவை நடிகருக்கு நாடக அனுபவம் தேவை!

ஒரு நகைச்சுவை நடிகன் எந்த வேடத்திலும் திறமையோடு நடிக்க முடியும்.

இதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர் சந்திரபாபு.

கலைவாணரைப் போல் கருத்துக்களைச் சொல்லவேண்டும்.

நடிப்புக்கு நாடக அனுபவம் முக்கியம்.

அதுவும் நகைச்சுவை நடிகருக்கு நாடக அனுபவம் மிக மிக முக்கியம்.

எப்போதாவது ஒரு முறை தான் நகைச்சுவை நடிகர்கள் குணச்சித்திர பாத்திரங்களில் நடிக்க வேண்டும். எப்போதும் தொடர்ந்து நடிக்கக்கூடாது.

நகைச்சுவை நடிகர்களுக்கு கிடைக்கும் பாத்திரம் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மலரும் குறிஞ்சி மலர் மாதிரிக் கிடைக்கக் கூடியதாகும்.

இப்படிக் கூறுகிறார் நகைச்சுவை நடிகர் எஸ். எஸ். சந்திரன். ★

வெள்ளித்திரையில்


"குழல் இனிது யாழ் இனிதென்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச செல்வங்களின் வளமான எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம் உங்கள் நண்பனாகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period - Months காலம் - மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | - | *7% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ஈ. கருணாரட்ன, சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம், A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண. A.I.B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.
61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி, ஆத்மசாந்தி, தூய்மையை வலியுறுத்திய யேசுவின் மலைப்பொழிவு

யேசு ஒரு நாள் கெனசரேத் ஏரிக்கரையில் இருப்பத ப்பர் நகூர் என்னும் நகரை அடைந்தார். அங்கு சில நாட்கள் தங்கியிருந்து செப கூடங்களில் இறையரசைப் பற்றிப் போதித்து, மக்களின் பிணிகளைக் குணப்படுத்தினார்.

மக்கள் அவரைப்பற்றி வியந்து பாராட்டி, அவரது போதனைகளைக் கேட்க ஆர்வம் கொண்டு அவர் சென்ற இடமெல்லாம் பின் தொடர்ந்தார்கள்.

ஒரு நாள் மாபெரும் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தபோது, யேசு அவர்களை ஒரு சிறு குன்றின் அடிவாரத்திலிருந்த திறந்த வெளிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கேதான் யேசுவின் புகழ்மிக்க மலைப்பொழிவு மலர்ந்தது. மகிழ்ச்சி, ஆன்ம சாந்தி, தூய்மை ஆகியவை பற்றி வலியுறுத்திக்கூறினார்.

"எளியமனத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில், விண்ணரசு அவர்களதே.

துயருறுவோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் ஆறுதல் பெறுவர்.

சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர். ஏனெனில், மண்ணுலகு அவர்களது உரிமையாகும்.

நீதியின்பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் நிறைவு பெறுவர்.

இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.

தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்.

சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்.

நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில், விண்ணரசு அவர்களதே.

என்பொருட்டுப் பிறர் உங்களை வசைகூறித்துன்புறுத்தி உங்கள்மேல் இல்லாதது பொல்லாதது எல்லாம்



சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றோர். அகமகிழ்ந்து களிகூறுங்கள்! ஏனெனில், வானகத்தில் உங்கள்கைமாறு மிகுதியாகும்'' என்றார்.

எளிய மனத்தோர் பேறுபெற்றோர் என்றார் யேசு. ஆனால், மக்கள் முற்றிலும் மாறான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். வசதி, ஆற்றல், செல்வாக்கு ஆகியவற்றைப் பெற்றிருந்தால்; செல்வச் செருக்குடையோர் பேறுபெற்றோர் எனக் கருதப்பட்டனர்.

யேசுவோ எளிய உள்ளம் படைத்தோர் பேறுபெற்றோர் எனக் கூறுகின்றார். உலகச் செல்வங்களில் பற்று வைக்காதவர்களும், இறைவனைச் சார்ந்தவற்றில் தம் மனத்தை அதிகமாக ஈடுபடுத்துவோரும் எளிய உள்ளம் கொண்டவராவர். இவ்வாறு இவர்கள் விண்ணரசை தமது உடைமையாக்கிக் கொள்வார்கள் என்றார்.

**விதை விதைப்பவனின் உவமை:**

'கேளுங்கள், இதோ விதைப்பவன் விதைக்கச் சென்றான். விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரமாய் விழவே, பறவைகள் வந்து அவற்றைத் தின்று விட்டன.

சில அதிக மண்ணில்லாத பாறை நிலத்தில் விழுந்தன. அடி மண்ணில்லாததால் உடனே முளைத்தன. வெயில் ஏறியதும் தீய்ந்து, வேரில்லாமையினால் காய்ந்துபோயின.

சில முட்செடிகள் மத்தியில் விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெரித்துவிடவே, அவைபலன் கொடுக்கவில்லை.

சில நல்ல நிலத்தில் விழுந்தன. அவைமுளைத்து ஓங்கி வளர்ந்து ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்றுநூறுமாகப் பலன் கொடுத்தன. மேலும் செவியுள்ளவன் கேட்கட்டும் என்றார்.

பலவகையான மண்ணிருப்பதுபோல, மனிதர்களிலும், பல்வேறு வகையினர் உள்ளனர். சிலர் நற்செய்தி என்னும் அமுத வாக்கை வரவேற்கிறார்கள். வேறுசிலர் அதை வரவேற்பதில்லை. விதை மட்டும் வேறுபடுவதில்லை. அது சத்தான வித்தாகும் என்றும், நல்ல விளைச்சலை நல்கக்கூடிய வித்து என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆனால், மனிதர் பல்வேறு மனநிலைகளோடு இறைவாக்கை ஏற்கிறார்கள், தங்கள் உள்ளம் என்னும் பள்ளத்தில் விழுந்த சத்தான வித்தாகிய இறைவாக்கு முளைத்து, செழித்து, தழைத்து அமோக விளைச்சலை நல்கும்படி ஆவன செய்வோராய் இருக்கவேண்டும் என்றும் யேசு அறிவுறுத்தினார். ★

**- ஆ. வென்சஸ்சிலோஸ் -**

# நரகம் நெருங்காமல் இருக்க நாம் செய்ய வேண்டியது என்ன?

அல்லாஹ் பூமியைப் படைத்தபோது அது அங்கும் இங்கும் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

பின்னர் மலைகளைப் படைத்து அதில் அமர்த்தினான். மலை அசைந்தாடாமல் அப்படியே நிலையாக அமர்ந்து விட்டது.

மலைகளின் பலத்தைப் பார்த்த வானவர்கள்,

'அல்லாஹ்வே...! உன்னுடைய படைப்புக்களில் மலைகளை விட மிகப்பலம் உள்ளது ஏதும் உண்டா...?'

என்று கேட்டனர். அதற்கு அல்லாஹ்,

'ஆம் இரும்பு...' என்று பதிலளித்தார்.

'அல்லாஹ்வே...! உன்னுடைய படைப்புக்களில் இரும்பை விடப் பலம் வாய்ந்தது ஏதும் உண்டா....

'ஆம்... நெருப்பு...' என்று பதிலளித்தார்.

'அல்லாஹ்வே...! உன்னுடைய படைப்பில் நெருப்பை விடப் பலம் வாய்ந்தது ஏதும் உண்டா...?'

'ஆம்... தண்ணீர்' என்றார் அல்லாஹ்.

'அல்லாஹ்வே...! உன் படைப்பில் தண்ணீரை விடப் பலம் வாய்ந்தது ஏதும் உண்டா...?

'ஆம்... காற்று...' என்றார் அல்லாஹ்.

'அல்லாஹ்வே...! உன் படைப்பில் காற்றை விடப்



பலம் வாய்ந்தது ஏதும் உண்டா...?'

அதற்கு அல்லாஹ்,

'ஆம்... ஆதமுடைய மகன், அவன் தன் வலக்கரத்தால் செய்யும் தர்மத்தைத் தன் இடக்கரம் அறியாமல் மறைத்துக் கொடுக்கிறான்' என்றார்.

'எவர் ஒளுச் செய்து அவ்வொளுவை அழகுபடுத்திய வர க நோயால் பீடிக்கப் பட்ட தம்முடைய முஸ்லீம் சகோதரரை நலம் தேடி சேமலாபம் விசாரிப்பாராயின், அவர் அறுபதாண்டு தொலை தூரம் நரகத்தை விட்டுத் தூரப்படுத்தப் படுகிறார்'— என்றார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். ★

**- தொகுப்பு: எம். எம். அபூபக்கர் -**

26-05-1990 சஞ்சீவி வாரஇதழ் இஸ்லாமிய பகுதியின் 'உண்மையான இறைபக்தி' என்னும் தலைப்பில் கீழ் வெளியான, 'மிர்ஸா குலாம் அஹ்மத்' னும் காதிபானிகளின் தலைவரின் செய்தி ஒன்று இஸ்லாமிய நெறிமுறைக்கு முற்றிலும் புறம்பானது என்பதை யாழ் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த இஸ்லாமிய சகோதரர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இது போன்ற தவறான கருத்துக்கள் சஞ்சீவியில் எதிர்வரும் காலங்களில் இடம்பெறா என்பதை அறியத் தருகிறோம்;

# மனித நாகரிக பதிவேடுகளாக மிளிரும் நூல் நிலையங்கள்!

எமது வடக்குக் கிழக்கு மாகாணத்தினை புனருத்தாரணம் செய்யத் திட்டங்கள் தீட்டப்படும் இக் கட்டத்தில், தரமான நூல்நிலையங்களின் அவசியத்தை வலியுறுத்துவது முதன்மை வாய்ந்ததாகும்.

பொதுமக்கள் நூல்நிலையங்களின் அவசியத்தைக் குறித்து விழிப்புணர்ச்சியுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

எமது பொதுநூலகம் திருத்தப்பட்டுப் பூரண நிறைவுடையதொன்றாக விளங்க வேண்டும்.

நூல்நிலையத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதற்குப் பின்வரும் காரணிகளை திரல்படுத்தலாம்.

**காரணிகள்**

எமது சமுதாயத்தில் நூல் நிலையங்களுக்கு மதிப்புக்குரிய அந்தஸ்து இருக்கிறது. பெருந்தொகையான பணம், மூலவளங்களும் அவற்றிற்கென ஒதுக்கப்படுகின்றன.

நூல் நிலையங்கள் மானிடவியல், விஞ்ஞானம் ஆகிய அறிவுத் துறைகளின் தேக்கமாக விளங்குகின்றன. அவை நாகரிகங்களின் பதிவேடுகளையும், மனித சமுதாயத்தின் சாதனைகளையும் ஆய்வுகளையும் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளன.

கலாச்சாரப் பரிமாற்றத்தில் நூலகங்கள் பெரும் பங்கு கொண்டுள்ளன. பொருட்காட்சிகள், விரிவுரைகள், கைப்பொருட் கண்காட்சிகள் போன்றவற்றுக் கூடாகப் பல்நாட்டுக் கலாச்சாரங்களை நூல்நிலையங்களை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கின்றன.

கல்வியின் மேம்பாட்டில் நூல்நிலையங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

உ+ம் பாடசாலை நூலகங்கள்; பல்கலைக்கழக நூலகங்கள்.

**ஆலோசனைகள்**

நூலகங்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்குகின்றன. தேசிய அடிப்படையிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ முன்னேற்றம் அடைவதற்கு நூல் நிலையங்கள் வாய்ப்பளிக்கின்றன.

சனசமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியின் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கும் நூல் நிலையங்கள் உதவுகின்றன. கட்புலன், செவிப்புலனற்றோருக்கான பிரத்தியேக வசதிகளை நூலகங்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. உ+ம் கண்பார்வை குறைந்தோர்களுக்கென பிரத்தியேக முறையில் தயாரிக்கப்பட்ட நூல்கள்.

சனசமூகத்தின் பொழுதுபோக்கு வசதியாகவும் நூல் நிலையங்கள் நிறைவேற்றுகின்றன.

**சமுதாய ஸ்தாபனங்கள்**

நூல் நிலையங்கள் சமூகதாபனங்களாகச் செயற்பட்டு வாழ்க்கை பூராவும் கல்விகற்று சுயமாக முன்னேறும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கின்றது. ஒரு கல்வியறிவு படைத்த சமுதாயத்தினை உருவாக்குவதற்கு நூல் நிலையங்கள் உறுதுணையாக அமையும்.

சமூக, அரசியல் மாற்றங்களை வெற்றிகரமாக செயற்படுத்தும் சாதனமாக நூல் நிலையங்கள் விளங்குகின்றன. ஒரு விழிப்புணர்ச்சியுடைய சமுதாயத்தை உருவாக்குவதற்கு நூல்நிலையங்கள் பெரிதும் உதவும்.

சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலுடைய பிரஜைகளை உருவாக்குவதில் நூல்நிலையங்கள் முக்கிய இடம்வகிக்கின்றன. சுயமாகச் சிந்தித்து முடிவுகளை மேற்கொள்ளக் கூடிய அங்கத்தினர்களைக் கொண்ட சமுதாயத்தினை தோற்றுவிப்பதில் நூலகங்கள் மிகவும் பயன்படும் என்பது கண்கூடு. ★

**- ஜே. ஜே. அற்புதராஜ் -**

# படிக்க வந்த வேலைக்காரி!

'அம்மா... அடிக்காதீங்க... நான்... வேணும் எண்டு போடயில்ல... அ... அ... தவறி விழுந்திருச்சம்மா...மா...'

'பொத்தடி வாய... கூடக் கதைக்காத, சாப்பாட்டுக்கு வழி இல்லாததுகள், பாவம் எண்டு கூட்டி வந்து சாப்பாடு போட்டா இதுதான்' என்று முணுமுணுத்துக் கொண்டே தன் படுக்கையறையை நோக்கி ஓய்வெடுப்பதற்காகச் சென்றார்.

சிறிது நேரம் அழுதாள். அழுது என்ன செய்வது நிறைய வேலை இருந்தது. சாப்பாட்டுப் பீங்கானைக் கழுவும் வேலையில் மூழ்கினாள்.

இப்படிக் கழுவிக் கொண்டு இருக்கும் போதுதான் ஒரு தட்டு வழக்கி உடைந்து விட்டது....

மணியும் என்னதான் செய்வாள். இந்த வீட்டில் வேலை செய்வதற்காக மலையகத்தில் இருந்து, ஊர் தெரியாத இடத்தில் கொண்டு வந்து விட்டார்கள். இவளுக்குக் கண்கள் நல்ல பார்வையுள்ளவை. இருந்தும் கண்களைக் கட்டிக் காட்டில் விட்ட நிலை தான்.

ஒருவாறு வேலையை முடித்துக் கொண்டு சமையல் கட்டின் மூலையில் இருந்த படுக்கையை விரித்துப் போட்டுப் படுத்தாள்.

அம்மாவின் குறட்டை ஒலி மட்டும் கேட்டுக் கொண்டே இருந்தது.

தன் நிலையை நினைத்தாள். கண்களில் இருந்து கண்ணீர் வந்தது தான் மிச்சம்......

'சீ... இப்படி இதுகளிட்ட ஏன் அடிவாங்கி, திட்டு வாங்கிக் கஷ்டப்படுவான். நான் வந்திராவிட்டால்...... எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்'

முருகன் மாஸ்டர் அன்றைக்கு எவ்வளவு அழகாக ஐயாட்டச் சொன்னார்.

'இஞ்ச பாருங்கோ... மணி நல்லாப் படிக்கக்கூடிய பிள்ளை... இஞ்ச எந்த வசதியும் படிக்கிறத்துக்கு இல்ல. நீங்க சம்மதிச்சிங்கன்னா என்ற ஊரில கொண்டு போய் நன்றாகப் படிக்க வைப்பன். என்ட அம்மாவும் தனியத் தான் இருக்கிறா. அவவுக்கும் உதவியா இருக்கும். அவவும் டீச்சர் தான். படிப்பித்துக் கொடுப்பா. உங்களுக்கு என்னிலை நம்பிக்கை இருந்தாச் சம்மதியுங்க.

என்று அவ்வளவு அழகாக, குழைவாகக் கதைத்துப் பேதையான என்ட ஐயாவை ஏமாத்தி என்னை இஞ்ச கொண்டு வந்தார்.

தோட்டத்துக்குள்ளேயே சுத்தி, சுத்தி வாழ்ந்த எனக்கு, அன்றைக்குத் தான் வெளியுலகைப் பார்க்கவோ புகையிரதத்தில ஏறவோ கிடைச்சது. அப்ப சந்தோஷமாகத் தான் இருந்தது ஆனா...

அண்ணாவுக்கு என்ன நல்லாப் படிக்க வைக்கவேண்டும் என்று ஆசை. அதனால சம்மதம் தெரிவித்தார். பின்பு புகையிரத நிலையத்தில் வைத்து,

'மணி, எங்களுக்குச் சொந்த நிலமில்ல, வீடும் இல்ல. இதுக்கெல்லாம் காரணம் நாம் முன்னேறாதது தான். இந்த மண்ணில் எங்கட வியர்வையும், இரத்தத்தையும் சிந்தி உலைச்சு மற்றவர்களுக்குத்தான் சொத்து சுகத்தை சேர்க்கிறம். எங்கட உழைப்பைக் கூட அவர்கள் பறித்துக் கொள்கிறார்கள். ஆனா மணி எங்களுக்கு எண்டு ஒரே சொத்து, யாரும் பறிக்க முடியாதது நாங்க படிக்கும் படிப்புத்தான்'

இப்படி அண்ணன் உணர்ச்சி வசப்பட்டு கதைக்கும்போது, அவரின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. எனக்கு அவரைப் பார்க்க அழுகை வந்து அழுதுட்டேன்.

புகையிரதம் எல்லோரிடமும் இருந்து என்னைப் பிரித்து நகரத்தில் கொண்டு வந்து விட்டது இங்கு வந்த போது மத்தியானம் 12 மணி. வீதியெல்லாம் கானல் நீர் ஆறாக ஓடிக்கொண்டு இருந்தது.

காலமோ கழிந்து கொண்டு இருந்தது. என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதாகக் காணோம். ஒருநாள் முருகன் மாஸ்டரிடம்,

'மாஸ்டர், எப்ப என்ன ஸ்கூலில சேர்க்கப்போறிங்க' என்று கேட்டேன்.

அவர் பதில் கூறுவதற்குள், வீட்டுக்குள் அம்மா தனது யானை உடலை ஆட்டி ஆட்டி என்னை நோக்கி,

'இவளுண்ட கொழுப்பப் பாரன், என்ன துணிவிருந்தா கேள்வி கேட்பா. இவ கெட்ட கேட்டுக்கு, இவவுக்கு ஒரு படிப்பு, ஏன்டி உன் கொப்பன் காசு அனுப்புறானே படிப்பிக்க, உங்களுக்கு ஏன்டி படிப்பு.

அன்றில் இருந்து எனக்குத் தெரிந்தது, இனி எனக்குப் படிக்க முடியாது. இதுகளிட்ட அடியை வாங்கி, வேலை செய்து கொண்டு இருக்க வேண்டியதுதான்.

இப்படிப் பழைய நினைவுகளில் மூழ்கிப் போயிருந்தவளை, எங்கோ சாமக் கோழி ஒன்று கூவி சுயநினைவுக்கு அழைத்தது. அக்கோழி.

'இப்படிப் பழச நினைச்சு, நினைச்சு அழுதுகிட்டிருந்தா, ஒன்றும் நடக்காது. பழசுகளைப் பாடங்களாக எடுத்துக் கொண்டு, வாழுறதிற்கான வழியைப்பார்.' என்று கூவியது போல் இருந்தது.

குறட்டை ஒலி கேட்டுக் கொண்டே இருந்தது.


'என்ன ஆடித்த, அலுப்புத் தீர நிம்மதியா தூங்கிறா. அவவுக்கு என்ன கவலை...?

சத்தம் போடாமல் எழும்பி பின் கதவால் வெளியேறினாள். வீதியில் இறங்கிவிட்டாள். இனி நடக்கிறது நடக்கட்டும்.

'முடிவில்லாத வீதிகளில், முடிவைத்தேடிச் சென்றாள்.' ★

**- பாரதிமோகன் -**

## சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 115
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................
விலாசம் ..............................................
..............................................

## போட்டி இல: 115

**இடமிருந்து வலம்:**

1. கந்தக் கடவுள் 6. கடலில் இருந்து எழுவது குழம்பிவிட்டது. 7. இறைவனிடம் வரம் வேண்டிச் செய்யப்படுவது 8. அளவு மாறி உள்ளது. 9. கண்ணன் லீலை புரிந்த நதிக்கரை 11. உருண்டை 12. சீதையை மயக்கிய மிருகம் 13. ''இலகு'' மாறிவருகிறது 15. உற்பத்தி செய்யப்படும் இடம் 16. ''பாறை'' மாறிவருகிறது 17. எல்லாவற்றுக்கும் அடிப்படை இது 20. தடித்த கயிறு கடைசி எழுத்தை இழந்து விட்டது 21. இரத்தம் 22. இது இல்லாமல் தோசையா......?

**மேலிருந்து கீழ்:**

1. முழுமை 2. வீரிட்டுக் கத்துவது தலைகீழாக வுள்ளது 3. வலது குறைந்த ஒரு சொல், ஓர் எழுத்தை இழந்துள்ளது 4. நாடகத் தந்தை சொர்ணலிங்கத்தின் பட்டப் பெயர் 5. கண்ணனின் மாமன் 7. கரி 10. ரோஜாவின் காவலன் 11. திருநாவுக்கரசு நாயனாரின் தமக்கையார் 12. சூரியன் மறையும் நேரம் 14. இது உறுதியாக ஆலும் வேலும் தேவை 15. இதன் மூலம் எதிர்காலத்தை அறிவர் 18. இராமர் அணை உருவாவதற்கு இதுவும் உதவியது 19. ஒன்று திரட்டு.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படும்.

முடிவு திகதி: 06 - 06 - 1990

# விறுவிறுப்பாக நடந்தால் சுறுசுறுப்பாக வாழலாம்!

● மெல்ல ஓடினால் (Jogging) உடலுக்கு நல்லது என்று சில ஆண்டுகளுக்கு முன்னால் நிபுணர்கள் சொன்னார்கள்.

சரி என அதை ஒப்புக் கொண்டு, மெல்ல ஓடும் பயிற்சியில் பலர்ஈடுபட்டுவந்தனர்.

இப்போது மெல்ல ஓடுவதை விட, விறுவிறுப்பாக நடப்பதுதான் நல்லது என்று உடல்நல நிபுணர்கள் சொல்கிறார்கள்.

உறுதியான மருத்துவக் காரணங்களையும் ஆதாரமாகக் கூறுகிறார்கள்.

மெல்ல ஓடினால் நல்லது என்று நம்பி ஓடத் தொடங்கியவர்களில் பலருக்கு இடுப்பு, முழங்கால், மூட்டு, கணுக்கால் ஆகியன அதிர்ச்சி தாளமுடியாமல் அவதிப்பட்டன.

தசைகள் உறுதியடைந்தது உண்மை.

ஆகவே நடப்பதற்கு ஆதரவு பெருகியது. அதிலே ஒரு சௌகரியம். நடப்பதற்கு என்று தனியாக நேரம் ஒதுக்கவேண்டியதில்லை. மற்றக் காரியங்களைப் பார்த்துக்கொண்டே நடக்கலாம்.

அதற்காக நீண்ட தூரம் நடக்கவேண்டியது இல்லை.

ஒருநாளில் ஒரு கிலோ மீற்றர் அல்லது இரண்டு கிலோ மீற்றர் நடந்தாலேபோதும். மிதமான நடையால் உடலுக்குச் சிரமம் ஏற்படாது.

ஓடுகின்றபோது விரைவாக மூச்சிழுப்பதனால் ஏற்படும் நன்மைகள் எல்லாம் நடக்கும்போது தோன்றும் மூச்சிழுப்பாலும் உண்டாகின்றன என்று அண்மைக் கால ஆய்வுகள் காட்டுகின்றன.

நடப்பது என்றால் நண்பனோடு அல்லது காதலியோடு நடக்கும் உலாவல் அல்ல;

விறுவிறுப்பாக நடந்தால் தான் நன்மை என்று கூறுகிறார் இருதய நிபுணர் டாக்டர் ஹியூ பெதல் (Hugh Bethel).

நடப்பது நடக்கும் என்று இருப்பவர்களும் இதனைக் கொஞ்சம் கவனித்து நடந்தால் உடல் நலம் பேணப் படாதா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனில் இருந்து எழும்பிய அபூர்வ ஒளிப்பிழம்பு!

கிரீஸ் நாட்டின் வடபகுதியில் ஒரு சிறு கிராமத்தில் 1985 ஆம் ஆண்டு மே 23 ஆம் திகதி கோலோவாஸ் (Kolovos) என்ற ஆய்வாளர் ஒரு சிறிய தொலைநோக்கி சரியாக வேலை செய்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தத் தொலைநோக்கி சிறியதாக இருந்தாலும், அதில் பல துணைச்சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

அதைப்போன்ற கருவிகளை உலகெங்கிலுமுள்ள அமெச்சூர் வானாய்வாளர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

அன்று தேய்பிறை இரவு. வானில் பிறைச்சந்திரன் காட்சியளித்தது.

கோலோவாஸ் தனது தொலைநோக்கியில் ஓர் ஒளிப்படக்கருவியை இணைத்துச் சோதிப்பதற்காக அந்தப் பிறைச்சந்திரனைப் பலமுறை படமெடுத்தார்.

பிறகு அவர் படச்சுருளைக் கழுவி (Develop)ப் பார்த்தபோது ஒரு படத்தில் ஒரு பிரகாசமான ஒளிப்புள்ளி ஒன்று பதிவாகியிருப்பதைக் கண்டார்.

### அபூர்வ ஒளிப்படம்

பெரும்பாலான கண்டுபிடிப்புகள் தற்செயலாக ஏற்படுகிறவை.

பெரும்பாலான சாதனைகளில் அதிஷ்டம் கணிசமான பங்கு வகிக்கிறது.

கோலோவாஸின் ஒளிப்படம் இத்தகைய அபூர்வ அதிஷ்டங்களில் ஒன்று.

கோலோவாஸ் தெசலோனிகி (Thessaloniki) பல்

**- விஞ்ஞானம் -**

கலைக்கழகத்தில் பணியாற்றுகிறவர்.

அவரும் அவருடைய மூன்று சக ஆய்வாளர்களும் நான்கு ஆண்டுகளுக்கு அந்தப் புகைப் படங்களைத் துருவித் துருவி ஆராய்ந்து இப்போதுதான் அதற்கு ஓர் உருப்படியான விளக்கத்தைக் கண்டுபிடித்தார்கள்.

சந்திரனின் மேற்பரப்புக்குச் சற்று உயரே மிகச் சில விநாடிக்குத் தோன்றி மறைந்த, பொலிவுமிக்க ஒரு பளீரொளி (Flash) ஒளிப்படமாகப் பதிவு செய்யப்பட்டது இதுவே முதல் தடவை.

சந்திரனில் இதுபோன்ற தோன்றிமறையும் நிகழ்வுகள் (Lunar TransientPhenomena) கிட்டத்தட்ட 1,500 முறைகள் காணப்பட்டிருக்கின்றன.

ஆயினும் ஓர் ஒளிப்படமாக, மறுக்க முடியாத சான்றாக அத்தகைய நிகழ்வு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

கோலோவாசும், அவருடைய சகாக்களும் அந்த ஒளிப்படங்களை மிக நுணுக்கமாகப் பரீட்சித்துப் பார்த்தார்கள்.

ஒளிப்படத்தாளில் கோளாறுகளோ, சமச்சீரின்மையோ இருந்து அந்தப் பிம்பத்தை உண்டாக்கவில்லை என்று உறுதி செய்து கொண்டார்கள்.

அதன் பின்னரும் பல்வேறு சாத்தியக் கூறுகளைப் பரிசீலித்து நிராகரித்த பின்னரே அந்த ஒளிப்படத்தில் பதிவாகியிருந்த பளீரொளி உண்மையிலேயே சந்திரனில் தோன்றி மறைந்த நிகழ்வுதான் என்பதை இப்போது உறுதிப்படுத்தியுள்ளனர். ★

# வங்கிப் பெட்டகத்தில் பாதுகாக்கப்படும் உலக உதைபந்தாட்ட தங்கக் கிண்ணம்

உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும், உலக உதைபந்தாட்டப் போட்டியில் வெல்லும் அணிக்கு வழங்கப்படும் தங்கத்தில் செய்யப்பட்ட ''உலகக் கிண்ணம்'' ரோம் நகரில் ஒரு வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் பாதுகாக்கப்படுகிறது.




### உலகக்கிண்ண வரலாறு

பளபளக்கும் உலகக்கிண்ணத்தின் வரலாறு மிகவும் சுவையானது.

1929 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்த சர்வதேச உதைபந்தாட்டச் சங்கம் முடிவுசெய்தபோது, இறுதிப்போட்டியில் வெல்லும் அணிக்கு கலைநுணுக்கம்மிக்க பரிசை அளிக்க விரும்பினார்கள்.

அதன் விளைவாக ஒரு கிலோ 800 கிராம் எடை தங்கத்தால் செய்யப்பட்ட உலகக் கிண்ணம் உருவானது.

வெற்றி தேவதை தலைக்கு மேலே அழகிய கோப்பையை பிடித்த நிலையில் அந்தக் கிண்ணம் செய்யப்பட்டிருந்தது.

### திருட்டு

1966 ஆம் ஆண்டு இங்கிலாந்து உலகக்கிண்ணத்தை வென்றது.

பலத்த பாதுகாப்புடன் லண்டனில் ஒரு மியூசியத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்த இந்த விலைமதிப்புமிக்க கிண்ணம் திருடர்கள் பார்வையில் இருந்து தப்பவில்லை.

பாதுகாப்பைமீறி நுழைந்த திருடர்கள் கிண்ணத்துடன் வெளியேறினர்.

அதிர்ச்சி அடைந்த இங்கிலாந்து பொலீஸார், நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் உலகக் கிண்ணத்தைத் தேடினார்கள். பலன் இல்லை.

ஒருவாரம் கழித்து, லண்டனின் தெற்குப் பகுதியில் வசித்த டேவிட் கோர்பட் என்பவரின் நாய், வீட்டின் பின்புறத்திலிருந்து காகிதத்தில் சுற்றப்பட்ட ஒரு பொட்டலத்தை இழுத்துவந்தது.

அதைப் பிரித்துப்பார்த்தபோது, காணாமல்போன உலகக் கிண்ணம் அதிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

### பிரேசிலுக்கு 3 ஆவது வெற்றி

உலகக் கிண்ணம் 3 முறை வெல்லும் அணிக்கு அந்தக் கிண்ணம் நிரந்தரமாக அளிக்கப்படுவது வழக்கம்.

1970 ஆம் ஆண்டு பிரேசில் 3 ஆவது முறையாக வென்று உலகக் கிண்ணத்தை நிரந்தரமாகப் பெற்றது.

### 2 ஆவது கிண்ணம்

அதைத்தொடர்ந்து புதிய உலகக் கிண்ணத்தை உருவாக்கவேண்டிய அவசியம் சர்வதேச கால்பந்து சங்கத்துக்கு ஏற்பட்டது.

புதிய கிண்ணத்தின் வடிவம் எப்படி இருக்கவேண்டும் என்று போட்டி நடத்தப்பட்டது.

53 பேர் இதற்கு வடிவமைப்புக்களை அனுப்பியிருந்தன.

இத்தாலியைச் சேர்ந்த சில்வலியோ கேசனிகா அமைத்த வடிவம் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டது.

### 5 கிலோ தங்கம்

உலகக் கிண்ணத்தை வடிவமைக்கும் பொறுப்பு கேசனிகாவுக்கு வழங்கப்பட்டது. அவர் இப்போதைய உலகக் கிண்ணத்தை உருவாக்கினார்.

புதிய கோப்பை 1அடி 2 அங்குல உயரம் கொண்டது. முழுக்க முழுக்க 5 கிலோ 18 சாரட் தங்கத்தால் செய்யப்பட்டது.

இரண்டு வீரர்கள் கையை உயர்த்தி, தோளில் உலக உருண்டையை தூக்கிய நிலையில் இந்தக் கிண்ணம் உள்ளது.

வெல்லும் அணிகள் அடுத்த போட்டி வரை 4 ஆண்டு காலம் இந்தக் கிண்ணத்தை பெருமையுடன் தன் வசம் வைத்து இருக்கலாம்.

### பாதுகாப்புப் பெட்டகத்தில்

அடுத்தபோட்டி தொடங்கும்போது, இந்தக் கிண்ணத்தை சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும்.

பெருமையுடன் விலை உயர்ந்த இந்தக் கிண்ணத்தை வெல்வதைப்போல கட்டிக் காப்பதும் மிக கடினமானது.

வெல்லும் நாடு இந்தக் கிண்ணத்தை அழகுமிளிர, தன்நாட்டு உதைபந்துச்சங்க அலுவலகத்தில் வைப்பதை விட்டுவிட்டு, வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டகங்களிலேயே வைத்துப் பாதுகாக்கின்றன.

கடந்தமுறை கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்டினா, இந்த ஆண்டு சர்வதேச உதைபந்தாட்டச் சங்கத்திடம் திருப்பிக்கொடுப்பதற்கு வசதியாக இப்போது ரோம் நகரிலுள்ள வங்கி பாதுகாப்புப் பெட்டகத்தில் அதை வைத்துள்ளனர்.

### மீண்டும் பறிபோனது

பிரேசில் 1970 ஆம் ஆண்டு நிரந்தரமாக வென்ற உலகக் கிண்ணத்தையும் காப்பாற்ற இயலவில்லை.

பிரேசில் உதைபந்தாட்டச் சங்க அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த அந்தக் கிண்ணத்தை சிலர் கொள்ளையடித்துச் சென்று விட்டனர். போலீஸார் எவ்வளவோ முயன்றும் அந்தக் கிண்ணத்தை மீட்க இயலவில்லை.

பின்னர் விசாரணையில், அந்தக் கிண்ணத்தை திருடியவர்கள் தங்கத்துக்காக உருக்கி விற்றுவிட்டதாக தெரியவந்தது.

பழைய கிண்ணத்தைப் போல ஒரு கிண்ணம் செய்யப்பட்டு, அது ரியோடி ஜெனிரோ நகரில் இப்போது வைக்கப்பட்டிருக்கிறது. ★

உலகின் அனைத்து நாடுகளும் கலந்துகொள்ளும் ஒலிம்பிக் போட்டியைப் போன்று மிக முக்கியமாகக் கருதப்படுவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் இந்தப்போட்டி இம்மாதம் (ஜூன்) 8 ஆந் திகதி தொடங்கி ஜூலை 8 ஆந் திகதி வரை இத்தாலியில் நடக்கிறது.

பழைமையான விளையாட்டு என்ற பெருமையைப் பெற்ற உதைபந்தாட்ட விளையாட்டு, உலகிலேயே அதிக ரசிகர்களை உடைய விளையாட்டு என்ற பெயரும் உண்டு. உதைபந்து விளையாடும் 168 நாடுகளும் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாட இயலாது என்பதால் 24 அணிகள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகின்றன.

இத்தாலியில் 12 நகரங்களில் நடைபெறும் இந்தப் போட்டியில் வென்று 'உலக உதைபந்துச் சாம்பியன்' என்ற பட்டத்தைப் பெற 24 அணிகளும் கடைசிநேர பயிற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

'மீண்டும் உலகக் கிண்ணத்தை வெல்வோம்' என்று உறுதியுடன் ஆர்ஜென்ரீனா $1\frac{1}{2}$ மாதங்களுக்கு முன்பே இத்தாலி வந்துசேர்ந்துவிட்டது.

தம்நாட்டு அணியினர் உலகக் கிண்ணத்தை வென்றால் லட்சக்கணக்கான ரூபாய் ரொக்கப்பரிசு தருவதாகக் கூறி ஒவ்வொரு நாடும் ஊக்கமளித்துள்ளன.

# வெளிநாட்டில் வாழும் நண்பனுக்கு....

உயிருக்கும் மேலான
    ஒப்பரிய நண்ப''னென்று
உயிர்தப்பி வெளிநாடு
    ஓடிப்போய் வாழ்கின்ற
எனதருமை நண்பா நீ
    எழுதிய கடிதமெல்லாம்
எனக்குக் கிடைத்தாலும்
    இன்று வரை அவைகளுக்கு

பதிலெழுத முடியாமல்
    போனதடா; அதற்காக
''இதுவேநான் எழுதுகிற
    இறுதிக் கடித'' மென்று
எழுதினாய்; எந்நிலையை
    என்றோ அறிந்தவன் நீ!
அழுவதா? சிரிப்பதா? நான்
    அழுதழுதே எழுதுகிறேன்!

இலங்கைத் திருநாட்டில்
    எங்கோவோர் மூலையிலே
உலவித் திரிந்தவர் நாம்
    ஒன்றாகப் படித்தவர்கள்;
அழகன் நீ என்னைவிட
    அந்தஸ்தில் உயர்ந்தவன் நீ
பழகி இருவரும் நாம்
    பண்புள்ள நண்பரா னோம்!

நாட்டில் நம் தமிழர்களின்
    நல்வாழ்வு மலர்வதற்கு
பாட்டெழுதி நானலைய
    ''பைத்தியமா உனக்கென்று
கேட்டவன் நீ'', நமக்கெல்லாம்
    கிளர்ச்சியேன்? எங்களது
பாட்டில் ஒதுங்கி மெல்ல
    படித்துயர வேண்டு மென்றாய்!

பந்தம் பிடித்தெனினும்
    பதவியை நாமெடுத்து
சொந்தம் சுகமென்று
    சொகுசாக வாழாமல்
இந்த மடத்தனங்கள்
    ஏனென்று விவாதித்த
அந்த நாள் ஞாபகங்கள்
    அடிநெஞ்சைக் கிளறுதடா!

அன்றாடம் உழைக்கின்ற
    அப்பாவின் கூலியோடு
திண்டாடி நான் வாழ்ந்தும்
    தமிழ்மீது கொண்டதாகம்
நின்றபாடில்லை யதால்
    நித்தமும் அதன் நினைப்பில்
மன்றாடி நீ கேட்டும்
    மசியாமல் நின்றவன் நான்!

வசதியுடன் வாழ்ந்தவுந்தன்
    வரட்டுக் கௌரவம்தான்
இசையாமல் தமிழர்படும்
    இன்னல்களை உணராமல்
வசைபாடச் சொன்னதுவோ?
    வாழ்விலே ஓர்நாளும்
அசைபோடும் மாடாக
    அலையாமல் வாழ்பவன் நான்!

இசைபாட; ஊரெல்லாம்
    இவனே தமிழனென்று
திசையெட்டும் வாழ்த்தொலிக்க
    தமிழ்த்தாயின் விலங்கறுக்க
முறையாகப் போராடி
    முன்னாலே வடுப்பட்டு
இறந்தாலே போது மென்றேன்
    எனக்கு ''விசரெ''ன்றாய்!

உன்னைப்போல் ஆயிரம்பேர்
    உரைத்தார்கள்; அவரெல்லாம்
உன்னைப் போல் வெளிநாடு
    ஓடிப்போய் அங்கிருந்து
என்னைப்போல் அடிபட்டு
    இங்குவாழும் அனைவரையும்
கண்ணாலும் பார்த்திடாமல்
    கடிதமே எழுகின்றார்!

'தப்பினோம் பிழைத்தோம் நாங்கள்'
    தமிழென்ன சோறா போடும்?'
இப்படி நினைத்தே நீங்கள்
    இலங்கையை விட்டுப்போனீர்
உப்புக்கும் புளிக்கும்கூட
    உங்களால் வித்தியாசம்
எப்படிக் காணல்கூடும்
    எமக்குத்தான் அதுபுரியும்!

மத்தளம் பட்ட பாடு
    மக்கள்நாம் இங்குபட்டோம்
கத்தினோம் கதறி வீழ்ந்து
    காடெல்லாம் பதுங்கி வாழ்ந்தோம்!
சித்தமே உடைந்து மண்ணில்
    சிதறிநாம் ஒதுங்கி மாண்டோம்!
மெத்தையில் படுத்து நீங்கள்
    மேனியைப் பாதுகாத்தீர்!

புயலுக்குள் சிக்குப்பட்டு
    புரண்டுநாம் அழுதகாட்சி
முயலுக்கும் தெரியும் இங்கு!
    மூண்டபோர் இடையில் நாங்கள்
தயவிலார் யாருமின்றி
    தத்தளித்தோமே! நீங்கள்
கயல்விழி மாதரோடு
    கட்டிலில் புரண்டிருப்பீர்!

நாளைக்கு நிலைமை மாறி
    நாடெல்லாம் அமைதி காணில்
வேளைக்கே கப்பலேறி
    வெளிக்கிட்டு இங்கு வந்து
தோள்சேர்த்து எங்களோடு
    தமிழரென் றோதுவீர்கள்
பாழ்பட்ட குணங்கள்மாறி
    பைந்தமிழ் வாழ்வதெப்போ?

கிணற்றுநீர் நாங்கள்நண்பா!
    கேவலம் வெள்ளம் நீங்கள்!
புணர்ந்தபின் காலால் தள்ளி
    போய்விடும் காமப்பேய்போல்
இனத்திடை வந்து சேர்ந்த
    எமதூதர் கூட்டம் நீங்கள்
மனத்திடை சுயநலத்தை
    மறைத்து வைத்திருக்கும் சாதி!

பொழுதினைப் போக்க வெண்ணி
    புதினத்தை அறியத் துள்ளி
எழுதினாய் கடிதம் நூறு
    எப்படிப் பதில் எழுத?
குழிகளில் பதுங்கி நாளும்
    குப்புறப் படுத்து ஆறாய்
விழியெலாம் நீரிறைக்க
    விம்மிடும் பிறவி நாங்கள்!

உனக்கென்ன பணத்தின்மேலே
    உருள்கிறாய்; கடிதம்போட
எனக்கிங்கே வழியேயில்லை
    என்நாளும் எதிர்வீட்டானின்
மனைவியுன்னோடு வாழும்
    மணவாளன் தனக்கு அஞ்சல்
அனுப்பினாள்; அதனுள்வைத்தே
    அனுப்பினேன் பெற்றுக் கொள்க!

இதுவேயென் முதற்கடிதம்
    இறுதியும் இதுவேயாகும்;
புதினங்கள் எழுதிப்போட்டு
    புகழ்வதற் கொன்றுமில்லை;
விதியோடு இங்கு நாங்கள்
    விளையாடும் தமிழர் கூட்டம்
கதிநாளை என்னவாகும்
    கண்ணீர்தான் பதிலைச் சொல்லும்!

உயிருக்கும் மேலாய் என்னை
    உயர்த்தியே வைத்து அஞ்சல்
எழுதினாய்; அதெல்லாம் வேண்டாம்
    என்றுமே நாங்கள் எங்கள்
உயிருக்கும் மேலாய் இன்ப
    ஒண்தமிழ்த் தாயைப்பேணி
உயிர்வாழ்தல் வேண்டும் நண்பா
    உண்மையைச் சொன்னேன் நன்றி!

– செ. குணரத்தினம்

# இராணுவச் செலவை அதிகரிப்பதில் அக்கறை காட்டும் வளரும் நாடுகள்

வளரும் நாடுகளில் ஒரு மோசமான உதாரணத்துக்கு பாகிஸ்தான் எடுத்துக்காட்டாகவிளங்குகிறது.

காரணம் —அந்நாட்டில் ஆசியர்களைவிட இராணுவ வீரர்களே அதிகமாகவுள்ளனர்.

இந்தத் தகவலை ஐ. நா. ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

லண்டனிலுள்ய ஐ. நா. மேம்பாடு திட்டம் இந்தத் தகவலை கடந்த வாரத்தில் வெளியிட்டுள்ளது.

அதாவது கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு செலவிடுவதை மூன்று பங்கு இராணுவத்துக்காகச் செலவிடும் நாடுகளில் ஒன்று என்று இந்த ஆய்வு கூறுகிறது.

ஆசியர்களை விட இராணுவ வீரர்களையே மிக அதிகமாகக்கொண்ட நாடுகளில் ஒன்று பாகிஸ்தான். அங்கு 154 சதவீதம் இராணுவ வீரர்கள் உள்ளனர்.

மற்ற நாடுகளில் இந்த சதவீதம் வருமாறு: எதியோப்பியா (494 சதவீதம்), ஈராக் (428 சதவீதம்), ஓமான் (275 சதவீதம்) சாட் (233 சதவீதம்), யேமன் (200 சதவீதம்)

இந்தவகையில் கோஸ்டாரிகா ஒரு சிறந்த உதாரணமாக உள்ளது. அங்கு இராணுவ வீரர்களே இல்லை.

மொரிஷியஸ் 10, ஐவரிகோஸ்ட் 13, கானா 14, ஜமைக்கா 20, மற்றும் பிரேஸிலில் இது 24 சதவீதமாகும். இந்தியாவில் இந்த சதவீதம் 28 ஆகும்.

மூன்றாம் உலக நாடுகளில் இராணுவத்துக்காகச் செலவிடப்படுவது குறிப்பாகக் கடந்த 30 ஆண்டுகளில் மிக அதிகமாகவுள்ளது. ஆனால் அதைப் பற்றிய பேச்சையே காணோம் என்று ஆய்வு மேலும் கூறுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் வளரும் நாடுகளில் பொருளாதார சீரழிவு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாமல் கல்வி, சுகாதாரத்துக்கெனச் செலவிடுவதையும் குறைத்துக் கொண்டு இராணுவத்துக்காக செலவிடப்படுவது மிக அதிகம்.

மிகவும் பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்ட அங்கோலா, புருண்டி, சீனா, பர்மா, சூடான், உகாண்டா, யேமன், ஸைரே ஆகிய நாடுகளில்தான் இராணுவத்துக்காகச் செலவிடப்படும் பங்கு உயர்ந்து காணப்படுகிறது.

கடந்த 25 வருடங்களில் வளரும் நாடுகளில் ஆண்டு ஒன்றுக்கு 7.5 சதவீதம் இராணுவத்துக்கு அதிகமாகச் செலவிடப்படுகிறது.

அதாவது வளர்ந்த நாடுகள் செலவழிக்கும் சதவீதத்தைக் காட்டிலும் இது அதிகமாகும்.

1960முதல் 1986ஆம் ஆண்டு முடிய 26 வருடங்களில் வளரும் நாடுகளில் இராணுவச் செலவு 7 மடங்காக உயர்ந்து விட்டது.

தொழிலில் முன்னேறிய நாடுகள் இதே காலகட்டத்தில் தங்களது இராணுவச் செலவை இரட்டிப்பாக்கியுள்ளன.

எனினும் வளரும் நாடுகள் அனைத்தும் செலவழிக்கும் இந்தத் தொகையைவிட ஒரு வல்லரசு நாடு செலவழிக்கும் தொகை அதிகமாகும்.

1960இல் 100 கோடி டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை இறக்குமதி செய்து வளரும் நாடுகளில் 1987ஆம் ஆண்டு கணக்குப்படி 3,500 கோடி டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை வாங்கியுள்ளன என்று ஆய்வு மேலும் கூறுகிறது.

பல நாடுகளில் இராணுவக் கடனானது மூன்றில் ஒருபங்கும் அதிகமாகவுள்ளதாக உலக வங்கியின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

மேற்கண்ட தொகையை விட மிகவும் கூடுதலாகவே ஒவ்வொரு நாடும் செலவழித்திருக்கும். எந்த ஒரு அரசும் இராணுவத்தைப் பொறுத்தவரையில் அசல் மதிப்பீட்டைத் தருவதில்லை. 'குறைந்த மதிப்பீட்டையே' தருவதாக ஐ. நா. ஆய்வு மேலும் கருத்துத் தெரிவிக்கிறது.

வளரும் நாடுகளில் இராணுவத்துக்காக 20,000 கோடி டாலர் செலவிடப்படுவதாகவும் ஆண்டொன்றுக்கு இது 2,000கோடி அதிகரிப்பதாகவும் ஆய்வு மேலும் தெரிவிக்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்சன்
கல்வி நிலையம்
கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பழை.
O/L DAY CLASS (பகல்நேர வகுப்புக்கள்)
வகுப்புநேரம்:-
காலை 8 மணி முதல் பி.ப 1 மணிவரை
''முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்''

சஞ்சீவி சஞ்சிகை
02 - 06 - 1990 சனிக்கிழமை

தான்சன்
கல்வி நிலையம்
கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பழை.
எமது ஆசிரியர்குழு
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன் மதி
தமிழ் — திரு. கணேஷ்
சமூகக்கல்வி — திரு. S. T. குமார்
ஆங்கிலம் — திரு. சிவகாந்தன்
வர்த்தகம் — திரு. வரதன்

# பர்மா பொதுத் தேர்தல் முடிவு;

## ஜனநாயக சக்திகளுக்கு பெரும் வெற்றி!

### ஆட்சி மாற்றம் சுமுகமாக நடக்குமா?

**1977** ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஷியா-உல்-ஹக் திடீர்ப் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் நாட்டு மக்களுக்கு அளித்த முதலாவது வாக்குறுதி நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டவுடன் தேர்தல் நடத்தப்படும் என்பதே.

தேர்தலில் மோசடிசெய்து ஆட்சியைக் கைப்பற்றியதாக அப்போது பதவியில இருந்த சுல்பிஹார் அலி பூட்டோவுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தபோது இராணுவத் தளபதியாக இருந்த ஷியா-உல்-ஹக் தலைமையில் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றிருந்தது.

ஆனால் ஷியா-உல்-ஹக் 1977 இல் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதி இரு ஆண்டுகளுக்குமுன் விமான விபத்தில் அவர் கொல்லப்படும்வரை நிறைவேற்றப்படவில்லை.

தேர்தல் நடத்தினால் தனக்கு எதிரான சக்திகளிடம் ஆட்சிபோய் பூட்டோவுக்கு ஏற்பட்ட கதி தனக்கும் ஏற்படலம் என்ற பீதி ஷியா-உல்-ஹக்கிடம் இருந்தது வெளிப்படை.

ஆனால் ஷியாவுடன் ஒப்பிடும்போது பர்மிய ஆட்சித் தலைவர் சோ மோங் (Saw Maung) துணிச்சல்காரர். 1988 இல் கொடுத்த வாக்குறுதியை அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவேற்றிவிட்டார்.

1988 இல் ஜெனரல் நீவினின் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தபோது இராணுவம் தலையிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. சோ மோங் தலைமையில் ஓர் ஆட்சிச்சபையும் அமைக்கப்பட்டது. சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட்டவுடன் தேர்தல் நடைபெறும் என்று அப்போது உறுதி அளிக்கப்பட்டது. தேர்தல் மூலம் பதவிக்குவரும் புதிய நாடாளுமன்றம்கூடி புதிய அரசமைப்பு ஒன்றைத் தயாரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படியே கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தலும் நடைபெற்றது.

#### எதிர்க்கட்சிகள் மீது அடக்கு முறை

ஆனால் கடந்த சில மாதங்களாக பர்மாவில் இடம்பெற்ற சம்பவங்கள், ஆட்சி மாற்றம் சுமுகமாக நடைபெறுமா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த சில மாதங்களாக ஆட்சியாளர்களால் எதிர்க்கட்சிகள்மீது கடும் அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தன. ஆட்சியாளர்களின் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிட்ட தேசிய ஐக்கியக் கட்சி (National Unity party) மட்டும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தக்கூடிய நிலை அங்கு இருந்தது. தேசிய ஐக்கிய கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட கட்சிகளின் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். பர்மிய அரசியலில் இராணுவம் தொடர்ந்து பெரிய சக்தியாக இருப்பதாகக் காட்ட முயற்சிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகள்மீது பலத்த அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. எனினும் ஞாயிறு தேர்தலில் அரசு ஆதரவு தேசிய ஐக்கியக் கட்சி தோற்றுவிட்டது. ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி (National League for Democracy) வெற்றி பெற்றுள்ளது.

பர்மாவில் ஜனநாயக உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று கோரி 20 மாதங்களுக்கு முன் போராட்டம் நடத்தியவர்களைக் கொண்டதுதான் ஜனநாயகத்துக்கான தேசிய லீக்கட்சி.

இதனிடம் இராணுவக் ஆட்சியாளர்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டிய நிலையைத் தேர்தல் முடிவு உருவாக்கி இருக்கிறது.

இந்தக் கட்சியின் தலைவர் ரின் ஓ (Tin Oo), செயலாளர் நாயகம் ஓங் சாம் சூகி உட்படப் பெரும்பாலான தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி வெற்றியீட்டி இருக்கிறது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான ரின் ஓ 1988 இல் பர்மாவில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான கிளர்ச்சிகள் ஆரம்பமானபோது அரசியலில் பிரவேசித்தவர். 1988 செப்டம்பரில் பர்மாவில் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவ ஆட்சியாளர்களால் தேசப்பிரிவினைக் குற்றச்சாட்டின் பேரில் ரின் ஓவுக்கு மூன்று வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

44 வயது நிரம்பிய ஓங் சான் சூகி பர்மாவின் ஸ்தாபகராகக் கருதப்படும் ஓங் சானின் புதல்வி. ஓங் சான் சூகி கடந்த ஆண்டு ஜூலை மாதம் கைது செய்யப்பட்டார். பர்மாவின் முன்னாள் தலைவர் நீவினைக் கண்டித்து கூட்டங்களில் பிரசாரம் செய்ததே அவர் செய்த குற்றம் ஆகும். ஓங் சன் சூகி தற்போது வீட்டுக் காவலில் இருந்து வருகிறார்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற தேர்தலில் 100 கட்சிகள் வரை போட்டியிட்டன. எனினும் போட்டி ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சிக்கும் தேசிய ஐக்கியக் கட்சிக்கும் இடையிலேயே இருந்தது. தேசிய ஐக்கியக் கட்சி பர்மாவின் முன்னாள் தலைவர் நீவினின் (Ne Win) ஆதரவைப் பெற்றது.

#### நீவின் ஆட்சி

பர்மாவில் புரட்சி மூலம் 1962 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றி இருந்த ஜெனரல் நீவின் பர்மாவில் ஒரு கட்சி ஆட்சி முறையை அமுல் செய்திருந்தார். பர்மிய சோஷலிஸ்ட் புறோகிராம் கட்சியே (Burma Socialist Programme Party) இதன் பெயர். இந்தக் கட்சியின் மறு அவதாரம் தான் ஞாயிறு தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற தேசிய ஐக்கியக் கட்சி ஆகும்.

#### 5 புரட்சிகள்

பிரிட்டிஷ்காரரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின் பர்மா இதுவரை 5 புரட்சிகளைக் கண்டுவிட்டது. 1962 ஆம் ஆண்டு பர்மாவில் ஜெனரல் நீவின் தலைமையில் புரட்சி நடத்தப்பட்டு பிரதமர் ஊ நூ (U. NU) பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். அதற்கு முன்னர் ஜெனரல் நீவின் தலைமையிலான இராணுவத்தினர் பர்மிய அரசியலில் 3 தடவைகள் தலையிட்டிருந்தனர். அதாவது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் நாட்டை நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டபோது இராணுவம் 3 தடவைகள் அரசியலில் தலையிட்டது. பின்பு சுமுக நிலை திரும்பியபோது ஆட்சியை திருப்பி ஒப்படைத்து வந்தது.

பர்மாவில் கடைசி இராணுவப் புரட்சி 1988 செப்டம்பரில் இடம்பெற்றது.

ஜெனரல் நீவின் பதவி நீக்கப்படவேண்டும் என்றும் ஜனநாயக ஆட்சிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் கோரி 1988 முற்பகுதியில் பொதுமக்கள் பெரும் கிளர்ச்சியை ஆரம்பித்திருந்தனர்.

மக்கள் எழுச்சியை அடக்க முடியாத நிலையில் நீவின் பதவி விலகினார். ஆனால் இராணுவத்தில் ஒரு பிரிவு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. மக்கள் எழுச்சி இவர்களால் துப்பாக்கிமுனையில் ஒடுக்கப்பட்டது. தலைநகர் ரங்கூனில் மட்டும் மூவாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தப்படுகொலைகள் உலக நாடுகளில் பெரும் எதிரொலியை ஏற்படுத்தி இருந்தன. இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் பர்மாவுக்கு எதிராக வர்த்தகத் தடையைக் கொண்டு வந்தன. எனினும் பர்மிய ஆட்சியாளர்கள் தைவான், சிங்கப்பூர், தென் கொரியா ஆகிய நாடுகளுடன் புதிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

1988 செப்டம்பர் புரட்சியின் பின் பர்மாவில் பெரும் அளவில் மனித உரிமைமீறல்கள் இடம்பெற்றுள்ளன என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டிவருகிறது. பர்மாவில் 19 சித்திரவதை முகாம்கள் இயங்குவதாகவும் 5000 முதல் 8000 அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே பர்மாவில் புதிய அரசு பதவி ஏற்க முன்பு பதவியில் உள்ள ஆட்சியாளருடன் விரிவான பேச்சுக்களை நடத்தவேண்டிய நிலை இருந்துவருகிறது.

ஆட்சி மாற்றத்தின் பின்பும் இராணுவம் தொடர்ந்து அரசியலில் தலையிடும் நிலை தொடருமானால் அது உண்மையான ஜனநாயக ஆட்சியாக இருக்கமுடியாது. ★

உலக உலா — என்.பி. சீலன்

# சரிவை நோக்கிச் செல்லும் இந்திய அணிக்கு

## இங்கிலாந்து விஜயம் புத்துயிர் அளிக்குமா?

- சு. சிறிபதி -

இங்கிலாந்தில் இந்திய அணி மூன்று ஐந்து நாள் ஆட்டங்களிலும் இரண்டு ஒரு நாள் ஆட்டங்களிலும் மேலும் சில உத்தியோகபூர்வமற்ற ஆட்டங்களிலும் இவ்வணி பங்குபற்றவுள்ளது.

அணித்தெரிவில் பெரும் மாற்றங்கள் எதுவும் இடம் பெறாதபோதிலும் ஸ்ரீகாந்தை நீக்கியது மட்டும் சிறிது ஆச்சரியத்தை ஏற்படுத்திய விடயமாக கருதப்பட்டது.

ஷார்ஜா அணியில் இடம் பெற்றிருந்த ஸ்ரீகாந் மீண்டும் அணியில் இருந்து விலக்கப்பட்டமைக்கு தகுந்த விளக்கம் எதுவும் அளிக்கப்படாதது விசனத்துக்குரியது.

ஏனெனில் ஷார்ஜா போட்டிகளில் பெரும்பாலான இந்திய வீரர்கள் சோபிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அணியில் முன்னைய வீரர்கள் வெங்சர்க்கார், சாஸ்திரி ஆகியோர் தங்களுக்குரிய இடங்களைப் பெற்றுக்கொண்ட போதிலும் இதைத் தொடர்ந்து தக்க வைப்பார்களா என்பது தொடரின் முடிவிலேயே நிருபணமாகும்.

ஷார்ஜாவில் சாஸ்திரியின் சிறப்பான பந்து வீச்சு அவருக்கு அணியில் ஓர் இடத்தையும் உபகப்டன் பதவியையும் பெற்றுக்கொடுத்துள்ளது. இங்கிலாந்து மைதானங்கள் இவருக்கு கைகொடுக்கக் கூடியவையே.

#### வெங்சர்க்கார்

ஆனால் இங்கிலாந்து ஆடுகளங்கள் என்றவுடன் நினைவில் தோன்றும் இந்திய ஆட்டக்காரர் வெங்சர்க்காரே. குறிப்பாக கிரிக்கெட்டின் தலைமை மைதானமாகிய லோட்ஸ் (Lords) வெங்சர்க்காருக்கு மிகவும் அனுகூலமான மைதானமாகும்.

இம்முறையும் ஒரு சதத்தை அம்மைதானத்தில் இவர் போடுவாரெனின் நான்காக அவரது சாதனை உயரும்.

இந்திய அணியில் அனில் கும்லே, மொங்காய் ஆகிய இரு புதுமுகங்கள் இடம்பிடித்துள்ளனர்.

கர்நாடகாவைச் சேர்ந்த அனில் கும்லேயின் வரவு சுழல் பந்துவீச்சுக்கு ஒரு பலத்தைச் சேர்த்துள்ளது. தனது 19 வது வயதிலேயே மிகவும் புத்திசாதுர்யமாகப் பந்துவீசும் இவருக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது.

16 பேரைக் கொண்ட இவ் அணியில் 6 துடுப்பாட்டக்காரர்களும் 5 பந்துவீச்சாளர்களும் 3 சகலதுறை ஆட்டக்காரர்களும் இடம்பெறுகின்றனர். பிரபாகர், சித்து, மோரே போன்றோர் அணியில் ஒரு நிலையான இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

ராமன், மஞ்ரேகர், கிர்வானி, சஞ்சேசர்மா இத்தொடரில் சிறப்பாகச் செய்வதன்மூலமே நிலையான இடத்தை அணியில் பெறமுடியும்.

தெண்டுல்கர், வெங்கடபதி ராஜு, வாசன் போன்றோருக்கு இத்தொடர் பல அனுபவங்களைப் பெற்றுத்தரும் என்பது திண்ணம்.

இந்தியாவின் பிரபல சகலதுறை ஆட்டக்காரரான கபில் தேவும் அண்மைய தொடர்களில் குறிப்பிடத்தக்க சாதனை எதனையும் புரியவில்லை.

#### சோதனைக் களமா!

எனவே அவருக்கு இங்கிலாந்து சாதனைகளமாக அமையுமா அல்லது சோதனைக்களமாக அமையுமா என்பது தொடரின் முடிவிலேயே தெரியவரும்.

அசாருதீனைப் பொறுத்தவரையில் கப்டன் பதவி துடுப்பாட்டத்தை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்பது நியூசிலாந்திலும் ஷார்ஜாவிலும் தெளிவாகியுள்ளது.

எனினும் முன்னைய அணிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஓர் அணியினை ஏற்று நடத்தவேண்டிய பொறுப்பு அசாருதீன் முன் உள்ளது.

இது ஒரு கடுமையான பயணம் என்பதை அவரே ஒப்புக்கொண்டுள்ளார்.

சென்ற இங்கிலாந்துத் தொடரில் 2-0 என்ற ரீதியில் இந்திய அணி வெற்றி பெற்றது. இம்முறையும் அந்நிலையை இந்திய அணி பேணுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவே.

ஏனெனில் இங்கிலாந்து அணி கிரகாம் கூச் தலைமையில் ஒரு புனர்நிர்மாணம் பெற்றுள்ளது என்றே கூற வேண்டும்.


மேற்கிந்திய தீவுகள் அணியுடன் தொடரை இழந்துவிட்ட போதிலும் அவர்களுக்கு கடும் சிரமங்களைக் கறுப்பு இன இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் கொடுத்துள்ளார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

மேலும் முன்னைய அணித் தலைவர் டேவிட் கவர் மீண்டும் துடுப்பாட்டத்தில் மிளிரத் தொடங்கியுள்ளார். அலன் லாம்ப் துடுப்பாட்டத் திறமையை மேற்கிந்தியத் தீவுகளில் நிரூபித்துள்ளார்கள்.

கூச், றொபின் சுமித், லாக்கிங்ஸ் ஆகியோரும் தமது திறமையை காட்டத் தவறமாட்டார்கள். இவர்களை முறியடித்தே இந்திய அணி வெற்றிக்கனியை எட்ட முடியும். இது மிகவும் சிரமமான காரியமாகவே இருக்கும்.

எவ்வாறாக இருந்த போதிலும் இந்திய அணியினர் தமது அண்மைய சரிவுகளை இத்தொடரிலாவது சீரமைக்க முயல்வார்களா? ★

விளையாட்டுத் துறை




### "நான் தான்...."

நான்
இன மத
பேதமற்றவன்
ஆதியும் அந்தமும்
இல்லாதவன்
உலகக் குடியுரிமை
பெற்றவன்!
உலக
மகாயுத்தங்கள்
ஏப்பம் விட்ட
உயிர்களையும்
வென்று
சாதனைக்கொடி
நாட்டியவன்!
பல விதிகளைக்
கற்ற
மாணவர்களின்
தலைவிதிகளைப்
பரீட்சை மண்டபத்தில்
பரீட்சிப்பவன்!
பலரின்
சில நிமிட
அவசரத்தினால்
வரவேற்கப்பட்டு
அவர்களின்
பலநாள்
வாழ்விற்கும்
பிரியாவிடை
வழங்கியவன்!
விஞ்ஞானம்
வளர்ந்ததனால்
அழிவுகளில்
விற்பனைப்
பிரதிநிதியானவன்!
உலக
அழிவுவரை
உலகை
அழிப்பதற்காக
வாழப்போகின்ற
நான் தான்
கவனயீனம்!

- கோவள. பாபு

**பொது அறிவுப்போட்டி இல: 40**
சரியான விடைகளை எவரும் அனுப்பவில்லை என்பதை அறியத்தருகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org